உ

வேலுமயிலுந்துணை.

# சோதிடபாலசிட்சை.



M. A. சுப்பிரமணிய முதலியார்

அவர்களாற்றமது

மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1925.

சென்னை

Registered Copyright

இதன் விலை அணா 6.

3941 2
V. PR. PL
M.K.
Pagameri
6.2.35

உ

வேலுமயிலுந்துணை.

# சோதிடபாலசிட்சை.

இஃது

அனேக சோதிட வித்வான்கள்

வேண்டுகோளின்படிக்கு

பூவாளூர் சோதிடசித்தாந்தி

**இ ரா ம லி ங் க ம் பி ள் ளை**

அவர்களாலியற்றப்பட்டு,

3941

சுத்தப் பதிப்பு.

29. VITHIYANATHA MUDALY ST. MADRAS

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR

**M. A. சுப்பிரமணிய முதலியார்**

அவர்களாற் றமது

சென்னை:

மனோன்மணி விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1925

[Copy Right Registered.] [இதன் விலை அணா 6.

உ

M. A. சுப்பிரமணிய முதலியார் அவர்களது

## மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்தின்

# புத்தக விளம்பரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| கந்தபுராணச்சுருக்கம் செய்யுள் | 0 | 12 |
| பருவதராஜ புராணம் | 0 | 2 |
| சேந்தன்திவாகரம் 12-தொகுதி | 0 | 12 |
| நாஞ்சிவவாதகட்டளைகொத்து | 0 | 4 |
| சாதகாலங்காரம் மூலம் | 0 | 8 |
| சொரூபசாரம் | 0 | 1 |
| சத்தப்பிரகரணம் | 0 | 4 |
| குமரேசர் சதகம் | 0 | 2 |
| நல்வழிப் பதவுரை | 0 | 1 |
| ஔவையார் சரித்திரம் | 0 | 1 |
| ஔவைகுறள் மூலம் | 0 | 1 |
| காத்தவராயநாடகம் | 0 | 4 |
| நூதன விசித்ரகோலப்புத்தகம் | 0 | 2 |
| கீசகநாடகம் | 0 | 3 |
| சோணசைலமாலை | 0 | 1 |
| நந்தனார் சரித்திரக் கீர்த்தனை | 0 | 6 |
| சானந்தகணேசர் புராணம்உரை | 0 | 10 |
| தஞ்சை-பகவற்கீதை வசனம் | 1 | 8 |
| விநாயகர் பஜனை கீர்த்தனை | 0 | 2 |
| கீதாசாரத்தாலாட்டு | 0 | 1 |
| நாஞ்சிவவாதக்கட்டளை தனி | 0 | 1 |
| காலச்சக்கரம் | 0 | 1 |
| பட்டினத்துசுவாமிகள்பாடல் | 0 | 2 |
| கைவல்லியநவநீத வசனம் | 0 | 4 |
| கைவல்லியநவநீத மூலம் | 0 | 2 |
| சடாட்சரக்கோவை | 0 | 1 |
| உடலறி விளக்கம் | 0 | 1 |
| நித்தியகன்மஅநுட்டானவிதி | 0 | 2 |
| அரிச்சந்திரபுராணம் மூலம் | 0 | 8 |
| திருக்கடந்தைபுராணம் | 0 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| திருப்புகழ் 200-பாடல் | 0 | 5 |
| ஷை 150-பாடல் | 0 | 4 |
| கதாமஞ்சரி | 0 | 4 |
| பஞ்சதந்திரக்கதை | 0 | 3 |
| சப்தஸ்தலதேவாரம் | 0 | 4 |
| சின்னசாமிதாஸ் கீர்த்தனை | 0 | 2 |
| பாஸ்கரதாஸ் பக்திரசகீர்த்தனை | 0 | 5 |
| ஷை இரண்டாம்பாகம் | 0 | 5 |
| உடுமலை-முத்துசாமி கீர்த்தனை | 0 | 4 |
| பக்தி ஆனந்தக் கேலிப்பதங்கள் | 0 | 5 |
| பார்ஸீ சுந்தர் நாடகம் | 0 | 4 |
| கபிலைச்சரித்திரக்கீர்த்தனைபடத் | 0 | 8 |
| திருவரசு நாடகம் | 0 | 3 |
| அபிமன்னன் சுந்தரி நாடகம | 0 | 4 |
| காமாக்ஷியம்மன் தபசுமாலை | 0 | 4 |
| தாராசசாங்க நாடகம் | 0 | 6 |
| சோதிடபாலசிட்சை | 0 | 6 |
| செய்யுளிலக்கணம் | 0 | 8 |
| மஹாராஜா துறவு 16-சாஸ்திரம் | 0 | 8 |
| வள்ளலார் சாஸ்திரம்-20 | 1 | 4 |
| தத்துவராயர் பாடுதுறை | 0 | 12 |
| திருமுருகாற்றுப்படை மூலம் | 0 | 1 |
| ஷை பொழிப்புரை | 0 | 2 |
| பிரமசகசம் 11-சகசம் | 0 | 2 |
| சிவானந்தபோதம் | 0 | 2 |
| அவிரோதவுந்தியார் உரை | 0 | 6 |
| அபிராமியந்தாதி | 0 | 1 |
| சிவநாமசங் கீர்த்தனை | 0 | 4 |
| கந்தர்சஷ்டி கவசம் | 0 | 1 |
| அற்புத தேவாரத்திரட்டு | 0 | 3 |

இவை தவிர தங்களுக்குவேண்டும் பலவித புத்தகங்களும், ஸ்டேஷனெரி சாமான்களும், கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதினால் வி-பி, போஸ்டில் அனுப்பப்படும். 1-அணா ஸ்டாம்பு அனுப்பினால் கேட்லாக்கு இனாம். ஒரு ரூபாவிக்கு குறைந்த ஆர்டர் அனுப்பினால் வி-பி தபாலில் அனுப்பமுடியாது.

கொ. செல்வரங்கம் கம்பெனி,

M. A. சுப்பிரமணிய முதலியார்,

29-நெ, வைத்தியநாத முதலியார் வீதி, சென்னை.

உ

முருகன்றுணை.

# சாற்றுகவிகள்.

இஃது
துரைத்தனபாடசாலைகளுக்கு
மேல்விசாரணைக் கர்த்தராயிருந்த
நெல்வேலி
முருகேச முதலியாரால்
இயற்றப்பட்டது.

ஆசிரியப்பா.

சீர்செறி யுலகிற் சிறப்பமைந் தோங்கு
நீர்வளங் குடிவள நிலவள மென்று
சொலுமவை யெலாமுறுஞ் சோழ நாட்டுத்
திலகமா யிலகுந் திரிசிர புரத்தைச்
சார்ந்த பூவா ளூரென் னுந்தலம்
நேர்ந்த தவத்தா னிலைபெற வுதித்தோன்
கணிதக் கடலின் கரைகா ணிபுண
னிணையிற் புகழோ னிராம லிங்கப்
பிள்ளை யெனுமியற் பெயரை யுடையோ
னுள்ளத் தூய்மைய னுயர்குண சீலன்
முத்தமி ழுணர்ந்தோன் முழுதுணர் சோதிட
சித்தாந் தியெனுஞ் சிறப்புப் பெயரோ
னன்பர்க் கெளியனு மறுமுக னடிகளை
இன்புற் றென்று மேத்திப் புகழ்ந்து
பத்திக் கயிற்றுற் பற்றிக் கட்டு
முத்தமன் பலநூ லுணர்ந்ததின் சாரந்
தொட்டுச் சுருக்கிச் சோதிட பால
சிட்சை யெனும்பெயர் சீரா யமைத்து
கற்கப் புகுவோர் கருத்திற் பற்ற
நற்கருத் துடனே நல்கின னதனை
யிசைகொண் ணூர்மா ணிக்க நிருபன்
வசையற வாய்ந்து வையங் களிக்க
வச்சினி லியற்றி யாவருங் கற்க
வுச்சிதமாக வுதவினன் மாதோ.

அறந்தாங்கி
வக்கீல்

## அ. காத்தமுத்துபிள்ளை அவர்களால்

இயற்றியது.

---

மாதிடத்தின் கடவுளருள் குமரேச னிருசரண மறவான் மிக்க
சோதிடத்தின் கடல்குடித்த ராமலிங்க பிள்ளையெனுஞ்சுகவான்பால்
ரோதிடத்தின் மனமகிழ்ந்து சொற்றமுத னூலதனை யுணரின் [வெள்ளைப்
போதிடத்தின் வளர்மாதுந் தக்கபுக ழெய்திடுவள் போலுமாதோ.

இடங்கிடந்த விலக்கியமுஞ் சோதிடமுங் கற்றுணர்ந்த லின்பன்
வடங்கிடந்த முலைமாதர் மகிழ்ராம லிங்கமெனு மகிபனூலை [முத்து
மடங்கிடந்த மனத்தவரும் பார்க்கிலவர் தெளிவடைந்து மண்ணின் [கீழாய்
படங்கிடந்த சேடனையு மிகழ்ந்திடுவ ரெனிநாமுப் பகர்வதென்னே

## காப்பிரைட்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல கனவான்களுக்கும் அச்சுக்கூடத் ததிபருக்கும் அறிவிப்பது யாதெனில் (இந்தச் சோதிட பாலசிட்சை என்னும் நூலை அடியிற் கையொப்பமிட்ட என்னால் அச்சிற் பதித்து ரிஜிஸ்டர் செய்திருப்பதால், இப்புத்தகத் திற்கு அமைக்கப்பட்டிருக்கும் (சோதிடபால சிட்சை) என்னும் பெயரையாவது, அல்லது இதில் கண்ட யாதாமொரு பாகத்தையாவது, இதில்கண்டிருக்கும் பொருளை மொழிபெயர்த்தாவது என்னுடைய அனுமதியன்றியில் யாரேனும் அச்சிடுவா ராயின் 1867வரு த்திய 25-வது ஆக்ட்டு 20-வது பிரிவு 6-வது உட்பிரிவின்படி நான்கோரும நஷ்டத்திற்கும் இண்டியன் பினல்கோட்டு என்னும் ஆக்ட்டுப்படி குற்றத்திற்கும் உத்திரவாதிகளாக வேண்டுமென்பதைக் கவனிக்கக்கோருகிறேன்.

இப்படிக்கு.

M. A. சுப்பிரமணிய முதலியார்,
மனோன்மணி விலாச அச்சுக்கூடத் தலைவர்,
29-நெ. வைத்தியநாத முதலிவீதி,
சென்னை.

வேலுமயிலுந்துணை.

# சோதிடபாலசிட்சை.

## காப்பு.

அத்தி முகத்தனை நித்த நினைந்திட
முத்தி யளிப்பன் சத்திய மிதுவே.

## வெண்பா.

போற்றுகின்ற சோதிடநூல் பொய்யா தொருநாளுஞ்
சாற்ற லறியா தவர்க்கது பொய்—நேற்றியுள
வாசனைத் தேடி யவர்பதத்திற் றெண்டுசெய்து
பேசானைப் போலே பிழை.

## கேட்போரியல்பு.

கருங்கடல்சூழ்ந்தவைப்பில் காசினிமாந்தர்க்கெல்லாம்
வருமின்பதுன்மந்தன்னின் வகையதையறியவேண்டில்
பருதியோடொன்பான்கோளின் பண்புணர்ந்தறிவோர்தம்மை
குருவதாய்மனதிலெண்ணிக் கொண்டவரிடத்திற்சென்றே. (௧)
வெள்ளிலையடைக்காயோடு விரும்புதட்சணையும்வைத்து
உள்ளுளேயிவர்தானிந்த வுண்மைசொன்னவரேயென்று
கள்ளமில்லாதுகேட்கில் கதிரவன்முதலாய்நான்கு
வள்ளலினருள்பெற்றோர்கள் வருத்திடவழங்குந்தானே. (௨)

## நூல்.

யுகம் - ௪

| | | |
|---|---|---|
| கிரேதாயுக | ௵ | ௧௭ லட்சத்து ௨௮௲ |
| திரேதாயுக | ௵ | ௧௨ லட்சத்து ௯௬௲ |
| துவாபரயுக | ௵ | ௮ லட்சத்து ௬௪௲ |
| கலியுக | ௵ | ௪ லட்சத்து ௩௨௲ |

ஸ்ரீ

# சோதிடபாலசிட்சை.

## வருஷங்களாவன :—

| | | |
|---|---|---|
| பிரபவ | சர்வசித்து | பிலவங்க |
| விபவ | சர்வதாரி | கீலக |
| சுக்கில | விரோதி | சௌமிய |
| பிரமோதூத | விக்ருதி | சாதாரண |
| பிரஜோற்பதி | கர | விரோதிகிருது |
| ஆங்கீரஸ | நந்தன | பரீதாபி |
| ஸ்ரீமுக | விஜய | பிரமாதீச |
| பவ | ஜய | ஆநந்த |
| யுவ | மன்மத | ராக்ஷஸ |
| தாது | துன்முகி | நள |
| ஈஸ்வர | ஹேவிளம்பி | பிங்கள |
| வெகுதான்ய | விளம்பி | காளயுக்தி |
| பிரமாதி | விகாரி | சித்தாத்ரி |
| விக்கிரம | சார்வரி | ரௌத்திரி |
| விஷு | பிலவ | துன்மதி |
| சித்திரபானு | சுபகிருது | துந்துபி |
| சுபானு | சோபகிருது | உருத்ரோத்காரி |
| தாரண | குரோதி | இரக்தாக்ஷி |
| பார்த்திப | விசுவாவசு | குரோதன |
| விய | பராபவ | அக்ஷய |

ஆக வருஷம்-௬௰.

## மாதங்களாவன :—

| | | |
|---|---|---|
| சித்திரை | ஆவணி | மார்கழி |
| வைகாசி | புரட்டாசி | தை |
| ஆனி | ஐப்பசி | மாசி |
| ஆடி | கார்த்திகை | பங்குனி |

ஆக மாதம்-௧௨.

## வாரங்களாவன :—

| | | |
|---|---|---|
| ஞாயிறு | புதன் | சனி |
| திங்கள் | வியாழம் | |
| செவ்வாய் | வெள்ளி | |

ஆக வாரம ௭.

## நட்சத்திரங்களாவன:—

| | | |
|---|---|---|
| அக்சுவனி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |
| உரோகணி | அஸ்தம் | திருவோணம் |
| மிருகசீரிடம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி; ரேவதி |
| ஆயில்யம் | கேட்டை | |

ஆக நட்சத்திரம்-௨௭

## திதிகளாவன:—

| | | |
|---|---|---|
| பிரதமை | சப்தமி | திரையோதசி |
| துதியை | அஷ்டமி | சதுர்த்தசி |
| திருதியை | நவமி | பௌர்ணமி |
| சதுர்த்தி | தசமி | அல்லது |
| பஞ்சமி | ஏகாதசி | அமாவாசை |
| சஷ்டி | துவாதசி | ஆக திதி-௧௫. |

## அயனம்—௨

உத்தராயனம் தக்ஷிணாயனம்.

| | | |
|---|---|---|
| தை௴ முதல் | ஆறுமாதம் | உத்தராயனம். |
| ஆடி௴ முதல் | ஆறுமாதம் | தக்ஷிணாயனம். |

## ருது—௬

| | | | |
|---|---|---|---|
| சித்திரை௴, வைகாசி௴ | வசந்தருது. | ஐப்பசி௴, கார்த்திகை௴ | சரருது. |
| ஆனி௴, ஆடி௴ | கிரிஷ்மருது | மார்கழி௴, தை௴ | எமந்தருது. |
| ஆவணி௴, புரட்டாசி௴ | வருஷருது. | மாசி௴, பங்குனி௴ | சிசிருது. |

## பக்கம்—௨.

பூர்வபக்கம், அல்லதுசுக்கிலபக்கம்-வளர்பிறை.

அமரபக்கம்,அல்லது கிருஷ்ணபக்கம் தேய்பிறை.

## யோகங்களாவன :—

| | | |
|---|---|---|
| விட்கம்பம் | கண்டம் | பரீகம் |
| பிரீதி | விருத்தி | சிவம் |
| ஆயுஷ்மான் | துருவம் | சித்தம் |
| சௌபாக்கியம் | வியாகாதம் | சாத்தியம் |
| சோபனம் | அர்ஷணம் | சுபம் |
| அதிகண்டம் | வச்சிரம் | சுப்பிரம் |
| சுகர்மம் | சித்தி | பிரமம் |
| திருதி | விதிபாதம் | மாகேந்திரம் |
| சூலம் | வரியான் | வைதிருதி |

ஆக யோகம்-௨௭.

## கரணங்களாவன :—

| | | |
|---|---|---|
| பவம் | கரசை | சதுஷ்பாதம் |
| பாலவம் | வணிசை | நாகவம் |
| கௌலவம் | பத்திரம் | கிந்துக்கினம் |
| தைதுலம் | சகுனி | ஆக கரணம்-௧௧. |

## இராசிமாதங்களாவன:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மேடம் | — | சித்திரை | துலாம் | — | ஐப்பசி |
| இடபம் | — | வைகாசி | விருச்சிகம் | — | கார்த்திகை |
| மிதுனம் | — | ஆனி | தனுசு | — | மார்கழி |
| கர்க்கடகம் | — | ஆடி | மகரம் | — | தை |
| சிங்கம் | — | ஆவணி | கும்பம் | — | மாசி |
| கன்னி | — | புரட்டாசி | மீனம் | — | பங்குனி |

ஆக இராசிமாதம்-கஉ.

## திக்குகளாவன —:

| | |
|---|---|
| | மேற்கு |
| கிழக்கு | வடமேற்கு |
| தென்கிழக்கு | வடக்கு |
| தெற்கு | வடகிழக்கு |
| தென்மேற்கு | ஆக திக்கு-அ |

## திக்குப்பாலர்களாவன:—

| | |
|---|---|
| இந்திரன் | வாயு |
| அக்கினி | குபேரன் |
| இயமன் | ஈசானன் |
| நிருதி | ஆக திக்குப் |
| வருணன் | பாலர்கள்-அ. |

## நட்சத்திரநிகண்டுகளாவன:—

### அச்சுவினியின்பெயர்.

பரி மருத்துவநாள், வாசி. ஐப்பசி யாழ், ஏறு, இரலை. முதனாள் சென்னி.

### பரணியின்பெயர்.

கிழவன், சோறு, பகலவன், தராசு தாழி, தருமநாள், அடுப்பு, பூதம், தாசி, முக்கூட்டு, காடு, பாகு:

### கார்த்திகையின்பெயர்.

எரிநாள், ஆரல். இருள், அறுவாய் அளக்கர், நாவிதன், அங்கி, அழகு.

### உரோகணியின்பெயர்.

பிரமனாள், சகடு பண்டி. சதி, வையம். உருள். விமானம், தேர், ஊற்ருல். உரோகிணி, பார்.

### மிருகசீரிடத்தின்பெயர்.

திங்கணாள், மதி, பேராளன். மான்றலை, மாழ்கு, மார்கழி, மும்மீன், நரிப்புறம். பாலை, இந்திரன்.

### திருவாதிரையின்பெயர்.

செங்கை, மூதிரை, யாழ், ஈசன் றினம், ஆதிரை.

### புனர்பூசத்தின்பெயர்.

அதிதிநாள், கழை, புனர்தம், கரும்பு, புனிதம், பிண்டி, ஆவணம்.

### பூசத்தின்பெயர்.

குருவினாள், கொடிறு, வண்டு, காற்குளம், தை.

### ஆயிலியத்தின்பெயர்

அரவினாள், கௌவை, பாம்பு, ஆயில்.

### மகத்தின்பெயர்.

கொடுநுகம், வேள்வி, வாய்க்கால் வேட்டுவன், மாசி, முதலிவருஞ்சனி

### பூரத்தின்பெயர்.

இடையெழுஞ்சனி, துர்க்கை, எலி, பகவதிநாள், நாவிதன், கணை.

### உத்தரத்தின்பெயர்.

பங்குனி, கடையெழுஞ்சனி, செங்கதிர்நாள், மானேறு.

### அத்தத்தின்பெயர்.

காமரம், அங்கிநாள், கௌத்துவம் கைம்மீன், களிறு, நவ்வி, ஐவிரல்.

### சித்திரையின்பெயர்.

நெய், பயறு; மீன், அறுவை, ஆடை, தூசு, நடுநாள், தச்சன், துவட்டாநாள், சுவை, செவ்வி.

### சோதியின்பெயர்.

விளக்கு; மரக்கால், வீழ்க்கை; வெறுநுகம், காற்றினாள், காற்று, தீபம்.

### விசாகத்தின்பெயர்.

முற்றில்; வைகாசி, காற்றுநாள்; முறம், சுளகு, சேட்டை,

### அனுடத்தின்பெயர்.

புல், தாளி, பெண்ணை, தேள், போந்தை, மித்திரநாள், பனை.

### கேட்டையின்பெயர்.

சேட்டை, இந்திரநாள், வேதி தழல், எரி, வல்லாரை.

### மூலத்தின் பெயர்.

தேட்கடை, குருகு, கொக்கு, சிலை, அன்றில், ஆணி, அசுரநாள்

### பூராடத்தின்பெயர்.

உடைகுளம், முற்குளம், நீர்நாள்.

### உத்திராடத்தின்பெயர்.

கடைக்குளம், ஆனி, விச்சுவநாள்.

### திருவோணத்தின்பெயர்.

மாயோநாள். உலக்கை, முக்கோல், சிரவணம், சோனை, ஓணம், நள்ளு, வைரம்.

### அவிட்டத்தின்பெயர்.

காகப்புள், வசுக்கனாள், பறவை, புள், ஆவணி.

### சதயத்தின்பெயர்.

செக்கு, சுண்டன், போர், குன்று, வருணனாள்.

### பூரட்டாதியின்பெயர்.

முற்கொழுங்கோல், நாழி, புரட்டை.

### உத்திரட்டாதியின்பெயர்

முரசு, பிற்கொழுங்கோல், மன்னன்.

### இரேவதியின்பெயர்.

இரவிநாள், கலம், தோணி, தொழுநாவாய், கடைநாள், சூலம், பெருநாள்.

## இராசிநிகண்டுகளாவன:—

### மேடத்தின் பெயர்.

மை, வருடை, ஆடு, கொறி, மறி.

### இடபத்தின்பெயர்.

குண்டை, சே, மூரி, புல்லம், சோவிடை.

### மிதுனத்தின்பெயர்.

தண்டு, யாழ், விழவு, இரட்டை, சவைமகள், பாடவள்.

### கற்கடகத்தின்பெயர்.

நண்டு, ஞெண்டு, அலவன், சேக்கை, நள்ளி, கள்வன், மதி.

### சிங்கத்தின்பெயர்.

அரி, யாளி, மா, கொடும்புலி.

### கன்னியின்பெயர்.

மடந்தையர்பேரெல்லா மொழிந்திடும்.

### துலாத்தின்பெயர்.

துலை, நிறை, நிறுப்பான், சீர், கோல், தூக்கு, வாணிகன்.

### விருச்சிகத்தின்பெயர்.

தெறுக்கால், தேள், பரப்பன்.

### தனுவின்பெயர்.

கொடுமரம் துரோணம், சாபம், சிலை, காண்டீபம்.

### மகரத்தின்பெயர்.

மான், கலை, சுறு, தை.

### கும்பத்தின்பெயர்.

குடம், கரீரம், சாடி, குடங்கர்.

### மீனத்தின்பெயர்

மீன், மயிலை, மச்சம், சலசரம்

## கிரகநிகண்டுகளாவன:—

### சூரியன்பெயர்.

பரிதி, பாஸ்கரன், ஆதித்தன், பனிப்பகை, சுடர். பதங்கன், இருள்வலி, சவிதா, சூரன், எல், மார்த்தாண்டன், என்றூழ், அருணன், ஆதவன், மித்திரன், ஆயிரஞ்சோதியுள்ளோன், தரணி, செங்கதிரோன், சண்டன். தபனன். ஒளி, சான்றோன், அனலி, அரி, பானு அலரி, அண்டயோனி, கனலி, விகர்த்தனன், கதிரவன், பகலோன், வெய்யோன், தினகரன், பகல், சோதி, திவாகரன், அரியமா, இனன், உதயன், ஞாயிறு, எல்லை, கிரணமாலி, எழ்பரியோன், வேந்தன், விரிச்சிகன், விரோசனன், இரவி, விண்மணி, அருக்கன்.

### சந்திரன்பெயர்.

நிலவு, சோமன், களங்கன், நிசாபதி, பிறை, கலையினன், உடுவின்

வேந்தன், கலாநிதி, குபேரன், அலவன், சசி. திங்கள், அம்புலி, நிசாகரன், இமகிரணன், தண்ணவன், குரங்கி, மதி, இராக்கதிர், இந்து, தானவன், அல்லோன், விது, குமுதநண்பன், சுதாகரன், வேந்தன்,ஆலோன் முயலின்கூடு, பசுங்கதிர்த்தே.

### சேவ்வாயின்பேயர்.

செந்தீவண்ணன், அங்காரகன், சேய், குருதி, வக்கிரன், பௌமன், குசன், நிலமகன், அரத்தன் அழலோன், மங்கலன், ஆரல் உதிரன்.

### புதன்பேயர்.

சிந்தைகூரியன், கணக்கன், தேர்ப்பாகன், அருணன், சாமன், தூதுவன், மால், மதிமகன், அறிஞன் பாகன், புலவன், அனுவழி, மேதை, பச்சை, புந்தி, பண்டிதன்.

### வியாழன் பேயர்.

தெய்வமந்திரி, சிகண்டிசன், அமைச்சன், சீவன், வேதன், ஆண்டளப்பான், ஆசான்,வேந்தன், பொன்

### வேள்ளியின்பேயர்.

அசுரமந்திரி,உசனன், பார்க்கவன் சுங்கன், சுக்கிரன், பளிங்கு, புகர், கவி, மழைக்கோள்.

### சனியின்பேயர்.

கதிர்மகன், மந்தன். காரி, கரியவன், சௌரி, மேற்கோள், முதுமகன், பங்கு, நீலன், முடவன், நோய்மகன், சுன்.

### இராகுவின் பேயர்.

தமம், கறுப்பு.

### கேதுவின்பேயர்.

செம்மை, சிகி, கதிர்ப்பகை.

### ஆண்பேண்ணறியும் விபரமாவன:—

| ... | ஞாயிறு. | திங்கள். | செவ். | புதன். | வியாழ. | வெள். | சனி. |
|---|---|---|---|---|---|---|---|
| ௧வ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௨ஹ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௩ஜூ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௫ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௬வ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௭ஹ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௮ஜூ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௧௦ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௧௧வ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௧௨ஹ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௧௩ஜூ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௧௫ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௧௬வ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௧௭ஹ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௧௮ஜூ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௨௦ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௨௧வ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௨௨ஹ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௨௩ஜூ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௨௫ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௨௬வ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௨௭ஹ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௨௮ஜூ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௩௦ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண |

வேளையறியும்விபரமாவன —:

| வரை. | ஞாயிறு. | திங்கள். | செவ். | புதன். | வியாழ. | வெள். | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| ஙஜ | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |
| எஉ | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ |
| ககவ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத |
| கரு | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |
| கஅஜ | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ |
| உஉஉ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத |
| உசுவ | தாமத | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |
| ங0 | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ |
| ஙஙஜ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத |
| ஙஎஉ | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |
| சகவ | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ |
| சரு | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத |
| சஅஜ | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |
| ருஉஉ | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ |
| ருசுவ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத |
| சு0 | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |

ஓரையறியும் விபரமாவன :—

| கடிகை. | ஞாயிறு. | திங்கள். | செவ். | புதன். | வியாழ. | வெள். | சனி. |
|---|---|---|---|---|---|---|---|
| உஉ | ரவி | சந்தி | குசன் | தன் | குரு | சுக்கி | சனி |
| ரு | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு |
| எஉ | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் |
| க0 | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி |
| கஉஉ | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி |
| கரு | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் |
| கஎஉ | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி |
| உ0 | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி |
| உஉஉ | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு |
| உரு | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் |
| உஎஉ | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி |
| ங0 | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி |
| ஙஉஉ | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் |
| ஙரு | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி |
| ஙஎஉ | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி |
| ச0 | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு |
| சஉஉ | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் |
| சரு | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி |
| சஎஉ | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி |
| ரு0 | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் |
| ருஉஉ | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி |
| ருரு | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி |
| ருஎஉ | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு |
| சு0 | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் |

## தினபலனறியுமாறு:—

ஜென்ம நட்சத்திரமுதல் அன்றைய நட்சத்திரம்வரையில் எண்ணிக் கண்டதொகையுடன் ஞாயிறுமுதல் அன்றையவாரம்வரையிலும், பிரதமை முதல் அன்றைய திதிவரையிலுங்கண்ட தொகையைச்சேர்த்து ஒன்பதிற் கழித்த மிச்சம்-௧-க்கு வியாகுலம். ௨-க்கு சுபம். ௩-க்கு துர்வார்த்தை. ௪-க்கு பந்து. ௫-க்கு பெண்போகம். ௬-க்கு சுபம். ௭-க்கு கலசம். ௮-க்கு லோபம். ௯-க்கு ஞானவாக்கியம்.

## தாராபலனறியுமாறு:—

ஜென்மநட்சத்திரமுதல் அன்றைய நட்சத்திரம் வரையில் எண்ணிக் கொண்டுவந்த தொகையை ஒன்பதிற்கழித்து நின்றமிச்சத்தில் ௨-௪-௬ ௮-உத்தமம்,

௧-வது ஜென்மம். ௨-சம்பத்து ௩-விபத்து. ௪-க்ஷேமம். ௫-பிரத்தியக்கு. -௬-சாதகம். ௭-வதை ௮-மைத்திரம். ௯-பரமமைத்திரம்.

சிலர் ௯-வது தாரை சுபமென்பர். சிலர் முதற்பரியாயத்தில் ஜென்ம தாரையும், இரண்டாம் பரியாயத்தில் விபத்துதாரையும், மூன்றும் பரியாயத்தில் பிரத்தியக்குத் தாரையும், மூன்றுபரியாயத்திலும், வதைதாரையும் ஆகாவென்பர். மற்றவைக் கூடுமென்பர்.

ஒன்றுக்குச் சூரியனும், ௨-க்கு புதனும், ௩-க்கு ராகுவும், ௪-க்கு குருவும், ௫-க்கு கேதுவும், ௬-க்கு சந்திரனும்; ௭-க்கு சனியும், ௮-க்கு சுக்கிரனும், ௯-க்கு செவ்வாயும், அதிபதியாகக் கொள்வது பலன்முறையே தாபம், லாபம், நாசம், தைரியம், கீர்த்தி, லயம், ஆனி, பிரமோதம், மிருத்தியுமாம்.

## இடவிபரமாவண:—

௧-௫-௯-திரிகோணம்.

௧-௪-௭-௰-கேந்திரம்.

௬-௮-சஷ்டாஷ்டகம்.

௩-௬-௮-௧௨-மறைவிடம்.

௨-௫-௮-௧௧-பணபரம்.

௩-௬-௰-௧௧-உபசெயம்.

௩-௬-௯-௧௨-ஆபோக்கிலீபம்.

| நட்சத்திரம். | கணம். | மிருகம். | பட்சீ | விருக்ஷம். | பரம நாழி. |
|---|---|---|---|---|---|
| அச்சுவனி | தேவம் | ஆண் குதி | இராஜாளி | எட்டி | சுரு |
| பரணி | மானுஷம் | ஆண் யானை | காக்கை | நெல்லி | ருசு |
| கிருத்திகை | ராக்ஷஸம் | பெண் ஆடு | மயில் | அத்தி | ருசு |
| ரோகணி | மானுஷம் | ஆண் நாகம் | ஆந்தை | நாவல் | ருசு |
| மிருகசீரிட | தேவம் | அலிசாரை | கோழி | கருங்காலி | ருசு |
| திருவாதி | மானுஷம் | ஆண் ஞாய் | அன்றில் | செங்கருங் | ருசு |
| புனர்பூசம் | தேவம் | பெண் பூனை | அன்னம் | மூங்கில் | சுஉ |
| பூசம் | தேவம் | ஆண் ஆடு | நீர்க்காக்கை | அரசு | ருஉ |
| ஆயிலியம் | ராக்ஷஸம் | ஆண் பூனை | சிச்சிலி | புன்னை | ருசு |
| மகம் | ஷை | ஆண் எலி | ஆண் கழுகு | ஆல் | ருச |
| பூரம் | மானுஷம் | பெண் எலி | பெண் கழுகு | பலாசு | ருங |
| உத்திரம் | ஷை | எருது | சிறுவண்டு | அலரி | ருசு |
| அஸதம் | தேவம் | எருமை | பருந்து | ஆத்தி | ருஎ |
| சித்திரை | ராக்ஷஸம் | ஆண் புலி | மரங்கொத் | வில்வம் | சு0 |
| சுவாதி | தேவம் | எருமைகடா | தேனீ [ருவி | மருதமரம் | சுரு |
| விசாகம் | ராக்ஷஸம் | பெண் புலி | செவ்வாலகு | விளா | சுக |
| அனுஷம் | தேவம் | பெண் மான் | சாதகம் | மகிழமரம் | சு0 |
| கேட்டை | ராக்ஷஸம் | ஆண் மான் | சுக்கரவாகம் | பிராயம் | சுஉ |
| மூலம் | ஷை | பெண் ஞாய் | செம்போத் | மரா | சுஙஉ |
| பூராடம் | மானுஷம் | ஆண் குரங் | பகண்டை | வஞ்சி | சுஉ |
| உத்திராட | மானுஷம் | மலட்டுப்பசு | வலியன் | பலா | ருரு |
| திருவோண | தேவம் | பெண் குரங் | நாரை | எருக்கு | சுருஉ |
| அவிட்டம் | ராக்ஷஸம் | பெண் சிங் | பெண் வண் | வன்னி | சுசுஉ |
| சதயம் | ஷை | பெண் குதி | அண்டகாக் | கடம்பு | ருஙஉ |
| பூரட்டாதி | மானுஷம் | ஆண் சிங்கம் | உள்ளான் | தேமா | சுசுஉ |
| உத்திரட் | ஷை | பசு | கோட்டான் | வேம்பு | சுஙஉ |
| ரேவதி | தேவம் | பெண் யா | வல்லூறு | இலுப்பை | சுச |

## கிரகசமயங்களாவன :—

க—ஸ்நானம்
உ—அலங்காரம்
ங—விபூதிசந்தனமிடல்
ச—செபம்
ரு—சிவபூசை
சு—அவுபாசனம்
எ—விஷ்ணுபூசை
அ—பிராணபூசை
கூ—நமஸ்காரம்
க0—பிரதக்ஷிணம்
கக—வைசுவதேயம்
கஉ—அதிதிபூசை
கங—போசனம்
கச—புராணப்பிரசங்கம்
கரு—கோபம்
கசு—தாம்பூலம்
கஎ—இராசாங்கம்
கஅ—கிரீடம்பூணல்
ககூ—சலபானம்
உ0—ஆலிங்கனம்
உக—சயனம்
உஉ—அமுதபானம்
உங—மதனலங்காரம்
உச—லீலை
உரு—போகம்
உசு—நித்திரை
உஎ—ரத்தினபரிட்சை.

மேஷமுதல் சாதகனுடைய சன்மலக்கினம் வரையும் எண்ணினதொகைக்கும் லக்கினமுதல் அந்தந்தக்கிரக மிருக்கிற லக்கினம்வரையில் எண்ணின தொகைக்கும் பெருக்கி உஎ-ல் கழித்துநின்ற மிச்சத்தையும் அவரவர்கள் திசைவருஷத்தையும் பெருக்கி உஎ-ல் கழித்துநின்றமிச்சம் சமயமாம்.

## வாரசூனியங்களாவன:—

ஞாயிறு.—அனுஷம்-கேட்டை-மகம்-விசாகம்-பரணி-மிருகசீரிடம்.
திங்கள்.—பூராடம்-அனுஷம்-மகம்-பூரட்டாதி-கார்த்திகை- விசாகம்.
செவ்வாய்.—அவிட்டம்-திருவோணம-சதயம்-கேட்டை-திருவாதிரை.
புதன்.—திருவோணம்-கார்த்திகை-அவிட்டம்-அச்சுவனி-பரணி-மூலம்.
வியாழம்.—மிருகசீரிடம்-பூராடம-ரேவதி-புனர்பூசம்- பூசம்.
வெள்ளி.—பூசம் விசாகம-உரோகணி-அவிட்டம்-மிருகசீரிடம்-அஸ்தம்-அனுடம்
சனி.—அஸ்தம-பூசம்-புனர்பூசம்-உத்திரம் ரேவதி.

## வார இராகுகாலங்களாவன:—

### கலிவிருத்தம்.

அரியிரு பத்தா றேகா லம்புலி மூன்றே முக்கா
லெரிவண்ண னிருப தோடு மிரண்டரை புதன்மூ வைந்து
குருபதி னெட்டே முக்கால் குளிர் வெள்ளி பதினொன் றேகால்
கரியனே ழரையீ ராகு காலமென் றறிந்து கொள்ளே.

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு — | உகூவ | வியாழம — | கஅஜ |
| திங்கள் — | ஙஜ | வெள்ளி — | ககவ |
| செவ்வாய் — | உஉஉ | சனி — | எஉ |
| புதன் — | கரு | இந்த நாழிகைக்குமேல் ஙஜ-நாழிகை இராகுகாலமாம். | |

## வாரசூலங்களாவன:—

கிழக்கு—திங்கள், சனியில்-அ-நாழிகையும்,
வடக்கு—செவ்வாய்-கஉ-நாழிகையும், புதன்-ககூ-நாழிகையும்,
மேற்கு—வெள்ளி, ஞாயிறில்-கஉ-நாழிகையும்;
தெற்கு—வியாழத்தில்-உ௦-நாழிகையும உருத்திரமூர்த்தியின் சூலமிருப்பதால் அந்தந்த நாழிகைக்குமேல் சூலதோஷமில்லையாம்.

## சூலபரிகாரங்களாவன:—

### கலிவிருத்தம்.

திங்களுஞ் சனியு மிந்தரன் றிசையிலோ ரெட்டதாகும்
பொங்குபொன் னிருபான் றெற்குப் புகர்கதிர் மேற்கீ ராறு

தங்குசேய் வடக்கீ ராறுஞ் சார்புத னதிலீ ரெட்டுச்
சங்கரன் கையிற் சூலந் தரணியில் வைக்குங் கன்னல்.

வெண்பா.

சூலத் திசையினிலே சொற்பயணம் போகவெனின்
சீலத் துடனுண்டு செல்வடக்குப்—பாலாம்
தயிர்கிழக்குத் தெற்குத் தயிலமா மேற்குச்
செயிர்தீர்ந்த வெல்லமெனச் செப்பு.

வாரமுக்குணவேளைகளாவன:—

திங்கள்.வியாழம்-சாத்வீகம். வெள்ளி, செவ்வாய்-இராசதம், புதன் ஞாயிறு, சனி-தாமதம, உதயாதி நாலுநாழிகைவரையில் கொள்ளவும்.

வாரவிழிப்புகளாவன:—

புதன், வியாழம, வெள்ளி-இருகண்களுள்ள நாள்கள்
ஞாயிறு, திங்கள்-ஒருகண் ணுள்ளநாள்கள்,
செவ்வாய், சனி-குருட்டுநாள்கள்:

பகற்குளிகன் விபரமாவன:—

விருத்தம்.

ஞாயிறு முகூர்த்த மேழா நன்மதிக் காறுஞ் செவ்வாய்க்
கேயவைந் தாகும் புந்திக் கீரிரண் டாம்பொன் மூன்றும்
தூயநற் புகர்க் கிரண்டாஞ் சுன்னினுக் கொன்ற தாகும்
ஆயவிம் முகூர்த்தத் தோடே யற்றிடுங் குளிக னெல்லில்.

இராக்குளிகன் விபரமாவன:—

விருத்தம்.

கதிரவன் றனக்கு மூன்றுங் கவின்மதிக் கிரண்ட தாகும்
கதிர்பெறு செவ்வாய்க் கொன்றுஞ் சாற்றிய புதற் கேழாகும்
மதிவளர் பொன்னுக் காறு மணம்புகர்க் கைந்தா நாங்கு
கதிர்மகற் காமுகூர்த்தங் காட்டிய பகற்போற் கொள்ளே.

| | [பகல்] | | [இரவு] | |
|---|---|---|---|---|
| ஞாயிறு | — | உகூவ | ” | ககவ |
| திங்கள் | — | உஉ௦ | ” | எ௦ |
| செவ்வாய் | — | கஅஜ | ” | ௱ஜ |
| புதன் | — | கரு | ” | உகூவ |
| வியாழம் | — | ககவ | ” | உஉ௦ |
| வெள்ளி | — | எ௦ | ” | கஅஜ |
| சனி | — | ௱ஜ | ” | கரு |

இந்நாழிகைகளோடே குளிகன்காலம் முடிவாம்.

### வாரத்தியாச்சியங்களாவன:—

ஞாயிறு-௩உ, திங்கள்-௪உ, செவ்வாய்-௩௧, புதன்-௪உ, வியாழம்-௩௧, வெள்ளி-உ௧, சனி-௧௬, இந்நாழிகைகளுக்குமேல் ௩-ஞ-நாழிகை வாரத்தியாச்சியமாம்.

### மலமாதங்களாவன:—

இரண்டமா வாசியையாவது இரண்டு பௌர்ணிமியாவது வரும் மாதங்கள் மலமாதம்

### மாதசூனியங்களாவன:—

சித்திரையில்-அஷ்டமி, ஏகாதசி; ரோகணி; கும்பம்.
வைகாசியில்-துவாதசி; சித்திரை, சுவாதி, உத்திராடம், மீனம்.
ஆனியில்-திரயோதசி; புனர்ப்பூசம்; ரிஷபம்.
ஆடியில்-சஷ்டி; பூரம், அவிட்டம், மிதுனம்.
ஆவணியில்-அமாவாசியை, பூரணை; பூராடம்; மேஷம்.
புரட்டாசியில்-சத்தமி; சதையம், பூரட்டாதி, ரேவதி; கன்னி, தனுசு
ஐப்பசியில்-நவமி; பூரட்டாதி; விருச்சிகம்.
கார்த்திகயைில் பஞ்சமி; கார்த்திகை, பூசம் மகம் துலாம்.
மார்கழியில்-துதியை, நவமி; அனுஷம், உத்திரட்டாதி, விசாகம்; தனுசு.
தையில்-பிரதமை; அஸ்தம், திருவாதிரை, ஆயிலியம்; கர்க்கடகம்.
மாசியில்-சதுர்த்தி தசமி; மூலம், திருவோணம்; மகரம்.
பங்குனியில்-சதுர்த்தி; பரணி, கேட்டை; சிங்கம்.

இப்படிவரின் சுபகாரியங்களுக்கு விலக்காம்.

அலிநட்சத்திரங்களாவன:—மிருகசீரிடம்-மூலம்-சதயம்.

இவை சுபகன்மங்களுக்கு விலக்கப்படும்

### மாதாந்தவருடாந்த தோஷங்களாவன:—

மாதாந்தரத்தில் மூன்றுநாளும், வருடாந்தரத்தில் பதினைந்துநாளும் கிரணந்தீண்டினநாளும் அதற்குமுன் மூன்றுநாளும், பின் மூன்றுநாளும் நட்சத்திரத்தில் அந்த இரண்டு நாழிகையும் சுபகன்மங்களுக்கு விலக்கப்படும்.

### மாதத்தியாச்சியம் (அல்லது) கரிநாள்களாவன:—

| | |
|---|---|
| சித்திரை-௬ ௧௫ | ஐப்பசி-௬-௨0 [௧ ௧0-௧எ |
| வைகாசி-எ-௧௬-௧எ | கார்த்திகைமுதல் சோமவாரம்- |
| ஆனி-௧ ௬ | மார்கழி-௬-௯-௧௧ |
| ஆடி-௨-௧0-௨0 | தை-௧-௨-௩-௧௧-௧எ |
| ஆவணி-௨-௯-௨அ | மாசி ௧௫-௧௬-௧எ |
| புரட்டாசி-௧௬-௨௯ | பங்குனி-௬-௧௫ ௧௯. |

ஆகக் கரிநாள்-௩௪.

## நட்சத்திர விஷகடிகைகளாவன:—

திருவாதிரை-உக; பூரட்டாதி-கசு; அஸ்தம்-உஉ-; உத்திரம்-சதயம்-கஅ;கார்த்திகை-மகம்-புனர்பூசம்-ரேவதி-ங0; சுவாதி-விசாகம்-கேட்டை-மிருகசீரிடம்-கச; உத்திரட்டாதி-பரணி-பூராடம்-உச; அச்சுவனி-ரு0; ஆயிலியம்-ங உ; பூரம்- பூசம்-சித்திரை-உத்திராடம்-உ0; ரோகணி-ச0; அவிட்டம்-அனுஷம்-திருவோணம்-க0; மூலம்-உ0-ருசு; நாழிகைக்குமேல் நாலுநாழிகையாம் இவை சுபகன்மங்களுக்கு விலக்கபடும்.

## திதிவிஷகடிகைகளாவன:—

பிரதமை-உச; துதியை-ருரு; சஷ்டி-சதுர்த்தி,ரு; பஞ்சமி-கரு;அஷ்டமி-சப்தமி க0; நவமி-உஉ; தசமி-எ; ஏகாதசி-ஙக; துவாதசி-பௌர்ணமி-கூ; திரயோதசி-ங0; சதுர்த்தி-ருக; அமாவாசை ஙஉ; நாழிகைக்குமேல் ஒருநாழிகை விஷகடிகை, சுபகன்மங்களுக்கு விலக்கபடும்.

## அமிர்தகடிகைகளாவன:—

அச்சுவனி-உக; பரணி-மிருகசீரிடம்-பூரம்-ங0 கார்த்திகை-ருக; திருவாதிரை-ஆயிலியம்-ச0; ரோகணி-புனர்பூசம்-அவிட்டம்-அனுஷம்-மூலம்-உத்திராடம்-கச; பூசம்-சித்திரை-கசு;விசாகம்-சதயம் திருவோணம்-உக;உத்திரம்-ஙங; மகம்-எ; பூரட்டாதி-க0; உத்திரட்டாதி-கஅ ரேவதி-கஉ;நாழிகைக்குமேல் ச-நாழிகைவரையில் அமிர்தகடிகை.

## முகுர்த்தகாலத்தின் விபரங்களாவன:—

குறைக்கொள்ளி, இடி, நட்சத்திரம், ஆலங்கட்டி இவைவிழுதல்; கருவி; அக்கினி; வியசனபடல்; மழைபெய்தல்; வீட்டிலுள்ளவள் மாதருதுவர்து வெளிபடல்; அசரீரிவாக்கு; துர்வசனம்; பூரணகும்பங் கவிழ்தல்; பால்கவிழ்தல்; தேங்காய்சிதறல்; போர்செய்தல்; தெய்வபிராமணர்; குருவர்க்கம்; மனோசாஞ்சலியப்படல்; தேவாலயத்தில் திருவிழாநடத்தல்; இவை சுபகன்மங்களுக்கு விலக்கப்படும்.

## பெண்களின்பெயர்களாவன:—

சர்ப்பம், சலம், பருப்பதம், தருவர்க்கம், மிருகம், சங்கு,இப்பெயருள்ள கன்னிகையை விவாகத்துக்குக் கூட்டுதல் கூடாவாம்.

## முகுர்த்தங்கூறும் விபரமாவன:—

நட்சத்திர அவயோகம், கிரகவேதை, அபிசித்து,நட்சத்திராந்தியம், விடகடிகை, கெண்டாந்தம், வைநாசியம், உதைப்பு, ஆபத்து, அனற்சிகை, சூலம், மகாசூலம்,கும்பபூர்த்தி, நட்சத்திரமாரணம், சாலாவேதை பாபமத்தியம், கிரகணதினம், ஆகுலம், ரோகம், மிருத்து, அலி, விதந்து, சத்துரு, வாயுமண்டலம், அனமண்டலம், கலைக்கியானபாதம், புரட்டாசி, மாசி, மார்கழி, ஆடி, மலமாதம், பூகம்பமுண்டானமாதம், குளிகன்தொட்டலக்கினம், சு.அ-கஉ-ல் சந்திரனிருக்கும்லக்கினம், பாபர் இருக்கும்

லக்கினம், பாபர்பார்க்கும்லக்கினம், பாபர்விட்டலக்கினம், குருசுக்கிரர் சமசத்தமலக்கினம், குருசுக்கிரர் மகாஸ்தமானத்துக்கு முன்னேழு பின்னேழுநாள்கள், இவர்கள் வக்கிராஸதமானத்துக்கு முன்மூன்று பின்மூன்றுநாள்கள், இவர்கள் அஸ்தமானநாள், சாயன்னகாலம், சந்தியாகாலம், கண்டாந்தம், உஷ்ணம், தியாச்சியந், தொட்டலக்கினம், பவம்-பாலவம்,கரசை-பத்திரைநீங்கிய கரணங்கள், ஞாயிறு, சனி, செவ்வாய் வாரமும், இராகுகாலம், பஞ்சதோஷம், படுபக்ஷி இவைகளைநீக்கி முகூர்த்தஞ் சொல்லுக.

## விவாககாலம் அறியும் விபரமாவன:—

ருதுவாகில்-அக்கினிக்குப்பாரி, தனம் அரும்பில்-சந்திரனுக்குப்பாரி, ரோமோற்பத்தியாகில் - கேதுவுக்குப்பாரி, ஆகையால் இவற்றிற்குமுன்னதாக விவாகமுகிப்பது பதிவிரதா தன்மமென்ப.

## அமிர்தயோகங்களாவன:—

### விருத்தம்.

இரவியிற் றிருவோண முத்திரத் திரையமொ டிரேவதி நலத் தமூலம்[மே
இந்துவிற் புனர்தஞ் சுவாதிதிரு வோணமுடனெழில்ரோகணிமிருக சிர
மருவுசேய்க் குத்திரத் திரைமூ லத்துடன் வயங்குரோ கணியு மாகும்
வளர்புந்த குத்திரா டத்தினெடு முப்பூர மன்னுகார்த் திகையுத் திரம்
குருவினுக்கச் சுவினி புனர்பூச மகமுடன் குலவுபூ சஞ்சு வாதி
கூறுவெள் ளிக்கிரே வதிமூல மச்சுவினி கோலமிகு மஸ்த மாகும்
பரவிய சனிக்குரோ கனிசோதி கார்த்திகை பண்புமிகு சதயமகமே
பகரமிர்த யோகமா நறவுண்டு செவ்வழி பயின்றளி யிறங்குகுழலே

## மரணயோக சித்தயோகங்ளாவன:—

### விருத்தம்.

செங்கதிர்க்கிழமையி லவிட்டமக மனுஷமொடு திகழ்விசாகங்கேட்டையே
திங்களில் விசாகம் புரட்டாதி யோடுகார்த் திகையுத்தி ராட மகமே
பொங்குசெவ் வாயினில் விசாகம் புரட்டாதி போற்றுமா திரைச தயமே
புந்திய லவிட்டமச் சுவினியத் தத்துடன் புகலிரே வதிமூ லமே
அங்குருவி லாதிரை யுரோகணிகார்த் திகையுத்தி ரஞ்சதய மிருக சிரமே
அவிர்சுக் கிரற்குரோ கணிகேட்டை பூசமுட மாயிலிய மகமோ ணமே
மங்குசனி சித்திரைபுரட்டையுத் திரமிரே வதியாயி லியமஸ் தமே
மரணயோ கமிதா மிரண்டினு முருதநாள் வளர்சித்த யோக மாமே

## பஞ்சகம்பார்க்கும் விபரமாவன:—

பஞ்சகப்பார்க்க வேண்டியகாலம்வரையில்ஞாயிறுமுதலாக அன்றைய வாரம்வரையிலும், பிரதமைமுதலாக அன்றையத்திதிவரையிலும், அச்சுவினிமுதல் அன்றயநட்சத்திரம்வரையிலும், மேஷமுதல் அப்போதுதய லக்கினம்வரைலும், எண்ணிக்கண்டதொகையை ஒன்பதிற்கழித்த மிச்சம்-ங-ஞ-எ-கூ-உத்தமம் மற்ற க-உ-ச-சு-அ-நீக்கப்படும்.

ஒன்றுமிருத்தியுபஞ்சகம், உ-அக்கினிபஞ்சகம், ௪-ராசபஞ்சகம், ௬-சோரபஞ்சகம், அ-ரோகபஞ்சகம் இவ்வாறு கண்டுகொள்க.

அவசியமாய்ப் பார்க்கவேண்டும்பொழுது மத்தியானத்தில் ராஜபஞ்சகமும், அக்கினிபஞ்சகமும்; இராத்திரியில் சோரபஞ்சகமும்,ரோகபஞ்சகமும்;எல்லாக்கர்மங்களிலு மிருத்தியுபஞ்சகமும், ஆகாவாம்.

புதனில் மிருத்தியுபஞ்சகமும், சனியில் சோரபஞ்சகமும், வியாழம் வெள்ளியில் இராஜபஞ்சகமும்; செவ்வாயில் அக்கினிபஞ்சகமும், ஞாயிறில் ரோகபஞ்சகமும்ஆகாவாம்.

சிலர் திங்களில்இராஜபஞ்சகமும்;புதன்வியாழங்களில் சோரபஞ்சகமும்; வெள்ளி சனியில் மிருத்தியுபஞ்சகமும்; ஆகாவென்பார். முக்கியமாய் விவாகத்துக்குத் துருவங்கூட்டிப்பார்க்கவேண்டும். வடதேசங்களில்சுக்கில பக்கம் பிரதமைமுதலாகக் கூட்டவேண்டுமென்பார்.இப்படிப்பலவிதமாகக் கூறினும தேசவழக்கப்படியே பார்க்கவேண்டுமென்பதே சித்தாந்தம்.

### பஞ்சிகதுருவமாவன:—

ஞாயிற்றுக்கிழமைக்கு-கு; திங்களுக்கு-க௦; செவ்வாய்க்கு-க௬; புதனுக்கு-ரு; வியாழத்துக்கு-அ; வெள்ளிக்கு-அ; சனிக்கு-ரு; இவ்வாறு துருவங் கூட்டிப்பார்க்கவும்.

### தோஷந்தீர்த்தவிபரங்ளாவன:—

### விருத்தம்.

பொரியரவின் றோடமதைப் புதன்தீர்ப்பன் பாம்பு
புதன்றோடந் தனைச்சனியன் றீர்ப்பனிவர் மூவர்
பறிபடுதோ டந்தனையங் காரகனே தீர்ப்பன்
பாரிலிவர் நாலவர்களின் றோடம் வெள்ளி தீர்ப்பன்
செரியுமிவ ரைவர்களின் றோடமதைப் பொன்னேன்
றீர்ப்பனிவ ரறுவர்களின் றோடமதை மதிதா
னறிவினொடு தீர்ப்பரிவ் வெழுவர்களின் றோட
மருக்கனே தீர்ப்பனென வருளினர்வின் ணவரே.

### உடுக்கிரகதிசைப்பிரிவுகளாவன:—

### வெண்பா.

சென்மநா ளாழிதனிற் சென்றதொகை நாளுடையான்
மன்வருஷத் தாற்பெருக்கி வந்ததொகை—சென்மநா
ளின்னுத்யந் தக்கன்னற் கீயில்வருஷம்சேஷம்
பன்னிரண்டான் மாறிப் பகர்.

### இதுவுமது.

பன்னுமா தங்குறைவைப் பார்முப்ப திற்பெருக்கி
முன்கொடுக்க நாள்குறைவை முப்பதிரண்—டின்மாறி

மீயக்கன் னற்சேஷ மெண்ணறுப திற்பெருக்கி
யீயவது காலநுட்ப மே.

**கிரகமறைவுகளாவன:—**

செங்கதிரும் பாம்புகளும் செவ்வாயும் நீலனுமே
தங்கியெட் டுப்பனிரெண் டில்லமைச்சன்—பைங்கதிரும்
புந்திமூன் றுறைட்டுப் பொல்லா வியம்புகரோன்
வந்திடமூன் றெட்டு மறைவர்.

**நோக்கினியல்புகளாவன:—**

மதிபொன் னெதிர்முக நோக்குமே ஞேக்குங்
கதிர்சேய் கடைக்கண்ஞேக்கு—மதிராத
பாகன் புகர்கவிழ்ந்து நோக்குமாம் பாம்புசனி
யேக விழிநோக்கு மென்.

**நோக்கின்கணிதங்களாவன;—**

எழுவது மேழு முழுநோக்கையுந் தொன்பான்
வழுவா வரைநான்கி ரைந்துந்—தழுவாத
முக்கால் பதினொன்று மூன்றுமே காஞேக்கா
மெக்காலு நோக்கத்தி னெண்.

**நோக்கின்வலிதுகளாவன:—**

வெய்யோன் மதிபுகர்மால் வென்றி முழுநோக்கிற்
செய்யோனு முக்காலிற் சீரியனு —மையோனுங்
காஞேக்கில் வெற்றி கனக னரைநோக்கின்
மாஞேக்கின் கண்ணுய் மதி.

**கோட்களிற் காதமாவன:—**

இருபான் சனியற் கிளந்திங்கட் கொன்று
குருவுக்கொன் பானுங் குசற்கேழ்—தெரியுங்கா
லீரெட்டாம் வெள்ளிக் கெரிகதிரோன் மாலிவர்கட்
கோரெட்டாங் காதமென வோர்.

**நாடிகளின் விபரமாவன:—**

மானும் புதன்குருசுன் வாதநா டிக்கோளாய்
பானுகுஜன் பாம்பு பயித்தியமாம்—வானில்
திரிமதியுஞ் சுக்கிரனுஞ் சேஷ்ப்பந்தான் சொல்லு
பரிகாரிக் குளள படி.

## நட்சத்திரவடிவங்களாகிய.

அகவல்.

அசுபதியறுமீன் குதிரைதலைபோல்
பரணிமூன்று மடுப்பதுபோல

கார்த்திகையறுமீன் கற்றைப்போலே
ரோகணியூற்றல் பன்னிருமீனும்

மான்றலைமூன்றுந் தேங்காய்க்கண்போல்
ஆதிரையொருமணி அழகியமீனே
ஓதியபுனர்த மோடங்கோலரை
பூசம்புடலம் பூவதுபோலே

ஆயிலியம்நான்கு மம்மிபோல
மகமொருநான்கு முடநுகம்போல
பூரமுத்திரம் பொற்கால்கட்டில்
அஸ்தமைமீன் கைத்தலம்போல

சித்திரையிருமீன் சிறுபுலிக்கண்போல்
சுவாதியொருமீன் சுடர்மணியாகும்
விசாகமாறு மிடிவிழுந்துரவாம்
அநுஷமாறு முடப்பனைபோல

கேட்டைநான்கு மீட்டிபோல
மூலமாறு மெக்காளம்போல்
பூராடமுத்ராடம் பொன்னமிர்தோட்டம்
ஓணமூன்று முழக்கோல்போல

அவிட்டம்பனிரண்டு தவிட்டுக்கூட்டம்
சதையநான்கும் சாற்றம்மிபோல
பூரட்டாதிஉத்திரட்டாதி பொற்கால்கட்டில்
ரேவதிநாவாய் பின்னமீனே.

## திக்குகளாவன:—

### வேண்பா.

பானுவுக்குத் தானடு பார்க்கவற்குப் பூர்வமிந்து
தானந்தீ சேய்தட்ச ணம்ராகுக்—கேதிருதி
மந்தன்மேற் பாற்கேது வாயுகுரு வுக்குத்ர
புந்திக்கீ சானமெனப்போற்று.

## தூபதீபங்களாவன:—

### வேண்பா

சந்தனமுஞ் சாம்ப்ராணி தான்குங்கல் யம்பூரம்
நந்தலிலா வாம்ப லிலவங்கம்—முந்தக்
கறுப்புள்ள காலி கடுகுசெம்ம ரத்தூள்
சிறப்பிரவி முன்புகைதீபம்:

## ஐம்பூதங்களாவன:—

### வேண்பா

பார்சேய் பிரிதிவாம் பைங்கதிர்க்கோ ளப்பாகும்
சீர்கதிருஞ் சீவனுமே தேயுவாம்—தேர்ப்பாகன்
வாயுவாங் காரிதலை வாலரவா காயர்தான்
ஆயிலிவை யைம்பூத மாம்,

## சப்ததாதுக்களாவன:—

வெண்பா

பானெலும்பிர் தேயுதிரம் பார்புத்தி ரன்மச்சை
யீனமிலாப் புந்திதோ லென்றறிவி—தேனிதழி
துய்மாமி சஞ்சுங்கன் சுக்கிலஞ் சுன்னரம்பு
மெய்சத்த தாதுவெனவிள்.

## இராசிநாழிகைகளாவன:

வெண்பா

ஆடுமீ ஞலேகோலான்சாஞ லேமுக்கால்
பீடுபெண் கோலந்து பேசுமியா—ழோடரியுர்
தேள்மகர மைந்தேகால் செப்புநளிர் விற்கன்னல்
தோள்வனிதை யைந்தரையாகும்,

## நட்பு-ஆக்ஷி-உச்சம்-பகை-நீசம்-சமன்

## மூலதிரிகோணங்கள்.

விருத்தம்.

### சூரியன்.

ஆதவனுக்குறவுதனுமீன் குருசேய்சந்திரனுமாக்ஷிசிங்கம்
கோதகலுங்கொறியுச்சம் பகைவிடையாழ்தேள்கடகங்குடமான்கன்னி
நீதகலும்புகர்சனியேதுலநீசம் புதன்சமனுஞ்சிறந்தசீயங்
காதன்மிகுமூலதிரிகோண மதாமதர்த்தமழைக்கருங்கண்மாதே.

### சந்திரன்.

சந்திரனுக்குறவுமிதுனந்தனுமீன் கன்னிபுதன்றபனுருகுஞ்
சுந்தரநண்டாக்ஷிவிடையுச்சமதாங் குடமேடந்துலமான்சிங்கம்
இந்தவிராசிகள்பகையாங் கோட்பகையேயிலநீசமியம்புதேளாம்
மந்தனுடுபொன்புகர்சேய் சமன்மூலதிரிகோணம் வயங்குமேறே.

### அங்காரகன்.

மங்கலனுக்குறவுகுடந்துலவிடையாழ் கன்னிகுருமதிவெய்யோனுர்
துங்கவிருச்சிகமேடமாக்ஷியதாம் வளருச்சஞ்சுறவேயாகுங்
தலகு-கையரிதனுமீன்புதனுகுங் கற்கடகஞ்சாற்றுநீசம்
பொலகு-புகர்சனிசமனுங் கொறிமூலதிரிகோணம்பொலிமுகத்தாய்.

### புதன்.

புதற்குறவுதனுமேடம்விடைமகரந் துலநடகம்பொருதேள்கும்பம்
விதுப்புறுசெங்கதிர்புகராம்பொலியாக்ஷி கன்னியொடுமிதுனமாகும்
மதித்தசுரிகுழலுச்சம்பகையரியு மதியுமாம்வருமீனீசம்
கதித்தசமன்சேய்சனியாம்பெண்மூல திரிகோணங்கழைமென்றேளாய்.

## குரு.

பொன்னவனுக்குறவுதுலைகன்னிகுடந் தண்டுவிடைபொருந்துசிங்கர்
துன்னிரவிமதிகுஜனுமாஷிதனு மீனகுஞ்சொலுநண்டுச்சம்
மன்னுடகைதேள்வருடை புதன்புகரேயாநீசமகரமாகும்
பன்னுசமன்சனிமூலதிரிகோணம் வில்லாகும்பவளவாயாய்.

## சுக்கிரன்.

சுக்கிரனுக்குறவுவிருச்சிகமேடஞ் சிலைகுடம்யாழ்சுறவுநண்டு
மிக்கபுதன்சனியாகுமாஷிவிடை கோலாகுமீனையுச்சந்
தக்கபகைதேளரியம்புலியிரவி யாநீசந்தையலாகுங்
சொக்குலவுசமன்குருசேய்துலைமூல திரிகோணஞ்சுடர்பைம்பூணாய்

## சனி.

சனிக்குறவுயாழ்விடைமீன்கன்னி சிலபுதன்புகராஞ்சாற்றுமாஷி
கனக்குமெழிற்குடஞ் சுறவாங்கோலுச்ச மாம்பகைகர்க்கடகஞ்சிங்கம்
தினைக்கும்விருச்சிகங்கதிர்சேய் மதியாகும்புகல்கருடைநீசமாகும்
தனிக்குருவேசமன்மூலதிரிகோணங் கும்பமிளந்தளத்தினளே.

## இராகு.

கரும்பாம்புக்குறவுதுலைமீன்மகரங் குருவெள்ளிகாரியாகும்
விரும்பாஷிதனுமிதுனங்கன்னியாம் பகைகடகமேடஞ்சிங்கம்
இரும்பானுசேய்மதியாங்குடமூல திரிகோணமெறிதேளுச்சம்
பெரும்பாண்டிநீசமதரங்கேதுபுதன் சமனாகும்பிறழுங்கண்ணாய்.

## கேது;

செம்பாம்புக்குறவுகுடங்கோல்விடைமான் கன்னிசனிசெவ்வாய்வெள்ளி
நம்பாஷிமீனாகும்பகைகடகஞ் சிங்கமதிஞாயிறாகும்
வெம்பாரத்தேள்மூலதிரிகோணந் தண்டுச்சம் வில்லேநீசம்
அம்பாருங்கூர்விருயாய்சமன்கோறிபொன் புதன்ராகேயாகுந்தானே.

## குளிகசாரங்களின் விபரமாவன:—

## விருத்தம்.

வருமிரவிக் கையைந்து கலையிருப தென்பரர்
மதிக்கிருபத் திரண்டேனே கலைநாலாக தாகும்
பொருசேய்க்குப் பாகைபத்து கலைநாற்பத் தோன்பான்
புதனுக்குப் பாகைபன்னேழ் கலையிருபத்தேழாங்
குருவாறு பாகையுடன் கலையொன்றே யாகுங்
கொடும்புகர்க்குப் பாகையைந்து கலையைம்பத் தைந்தாம்
கருதுசனிக் கொருபாகை கலைமூப்பத் தொன்பான்
கலைக்குளிக னுதிக்கின்ற ராசியிற்காண் பதுவே.

## கிரகதேவதைகள்முதலிய விபரமாவன:—

சூரியன்—சிவன்
சந்திரன்—ஈஸ்வரி
செவ்வாய்—சுப்பிரமணியர்
புதன்—விஷ்ணு
குரு—பிர்ம்மா
சுக்கிரன்—இந்திரன்
சனி—யமன்
இராகு—காளி
கேது—சித்திராபுத்திரன்

### ஜாதிகளாவன:—

குரு-சுக்கிரன்—பிராமணர்
சூரியன்-செவ்வாய்—க்ஷத்திரியர்
சந்திரன்-புதன்—வைசியர்
சனி—சூத்திரன்
இராகு-கேது—சங்கிரமஜாதியாம்

### கிரகபுஷ்பங்களாவன:—

சூரியன்—செந்தாமரை
சந்திரன்—வெள்ளல்லி
செவ்வாய்—சண்பகம்
புதன்—வெண்காந்தள்
குரு—முல்லை
சுக்கிரன்—வெண்தாமரை
சனி—கருங்குவளை
இராகு—மந்தாரை
கேது—செவ்வல்லி

### கிரகதானியங்களாவன:—

சூரியன்—கோதுமை
சந்திரன்—நெல்
செவ்வாய்—துவரை
புதன்—பச்சைப்பயறு
குரு—கடலை
சுக்கிரன்—மொச்சை
சனி—யெள்ளு
இராகு—உளுந்து
கேது—கொள்

### கிரகசமித்துகளாவன:—

சூரியனுக்கு—எருக்கு
சந்திரனுக்கு—முருக்கு
செவ்வாய்க்கு—கருங்காலி
புதனுக்கு—நாயுருவி
குருவுக்கு—அரசு
சுக்கிரனுக்கு—அத்தி
சனிக்கு—வன்னி
இராகுக்கு—அறுகு
கேது—தருப்பை

### கிரகபாஷைகளாவன:—

சூரியன் குரு சுக்கிரன் }—சமஸ்கிருதம்
சந்திரன்—தமிழ்
செவ்வாய்—மந்திரம்—தெலுங்கு
புதன்—சோதிடம்
சனி இராகு கேது }—அன்னியபாஷை

## தினப்பொருத்தங்களின் விபரம்.

பெண் நட்சத்திரமுதல் வரனட்சத்திரம் வரையிலெண்ணிக் கண்ட தொகையை ஒன்பதிற்கழித்தசேடம் உ-ச-சு அ-கூ இவை உத்தமமாகும். க-ங-ரு எ இவைதீதாகும்; பெண்ராசியும், வான்ராசியு மொன்ருகில் நன்மையாகும்; ஒருராசியாக யிருப்பதிலும், ஒருராசியிலடங்கிய இரண்டு நட்சத்திரங்களில் வரனுடைய நட்சத்திர முன்னும் பெண்ணுடைய நட்சத்திரம் பின்னுமாக விருக்கினும், நட்சத்திரங்களில் வரனுக்குமுதற்பாதமும், பெண்ணுக்கு நான்காம்பாதமுமாக விருந்தாலும், பெண்ணுக்கு முதற்பாதமும் வரனுக்கு மூன்ரும்பாதமுமாக விருந்தாலும் வரனுக்கு முன்னிரண்டுபாதமும் பெண்ணுக்குப் பின்னிரண்டு பாதமுமாகவிருந்தால்நன்மையாகும் வேறுபட்டிருந்தால்கெடுதி இவையல்லாது ஒருராசியிலடங்கியவிரண்டு நட்சத்திரங்களில், கார்த்திகை, பரணி, பூசம், ஆயிலியம்

அவிட்டம், சதயம், இவைதீது; அச்சுவனி; சதயம்; அஸ்தம், சுவாதி, பூராடம். மகம், உரோகணி; இவை; பெண் நட்சத்திரமாதமாக முந்தியிருக்கில் நன்மையுண்டாம்.

## கணப்பொருத்தங்களாவன;—

மனுஷியகணம், தேவகணம், இராக்ஷதகணம் என்று சொல்வதில் பெண்ணுடைய நட்சத்திரமும், புருஷனுடைய நட்சத்திரமும், ஏககணமாகில் உத்தமம், மனுஷியகணமுந் தேவகணமுமாகில் மத்திமம், இராக்ஷதகணமுந் தேவகணமுமாகில் கெடுதி, மனுஷிய கணமும் இராக்ஷதகணமுமாகில் மரணமுண்டு. பெண் நட்சத்திரமுதல் பதினான்கு நட்சத்திரங்களுக்கு மேற்பட்டு, வரனட்சத்திர மிருக்குமாகில் எல்லாக் கணங்களும் உத்தமம்.

## மகேந்திரப்பொருத்தங்களாவன:—

பெண் நட்சத்திரமுதல் வரன்னட்சத்திரமானது க, ச; எ, க0, கக, கச கக, உஉ, உரு வது நட்சத்திரங்களாகில் மகாஉத்தமம். இவை மாறுமாகில் மத்திமமாம்.

## ஸ்ரீதீர்க்கப் பொருத்தங்களாவன:—

பெண் நட்சத்திரமுதல் வரனட்சத்திரம் பதின்மூன்று நட்சத்திரங்களுக்கு மேலிருக்குமாகில் ஸ்திரீதீர்க்கம், உத்தமம்.

## யோனிப்பொருத்தங்களாவன;—

பெண் நட்சத்திரயோனியும்; வரனட்சத்திரயோனியும்; ஆண்யோனியாகில் பகையுண்டு, பெண்யோனியாகில் நன்மை. வரனுக்கு ஆண்யோனியும், பெண்ணுக்குப் பெண்யோனியுமாகில் நன்மையுண்டு, வரனுக்குப் பெண்யோனியும், பெண்ணுக்கு ஆண்யோனியுமாகில் உத்தமம்.

## இராசிப்பொருத்தங்களாவன;—

பெண்ணினது சந்திரலக்கினமுதல், வரனது சந்திரலக்கினம் எழுக்கு மேலானால் உத்தமம், பெண்ணின்ராசி இரண்டும்; வரன்ராசி பன்னிரண்டாகவும், பெண்ராசி மூன்றும், வரன்ராசி பதினொன்றாகவும், பெண்ராசி நான்கும், வரன்ராசி பத்தாகவும், பெண்ராசி ஐந்தும், வரன்ராசி ஒன்பதாகவும், பெண்ராசி ஆறும்; வரன் ராசி எட்டாகவுமிருக்கில் கெடுதி. இவ்வைந்தும் அந்தர்த முறையாகவேமாறில் உத்தமம்.

# இராசி அதிபதிப் பொருத்தங்களாவன,—

## மேடவிருச்சிக மிரண்டிற்கும் விபரம்:—

மகரம்; விருஷபம், கன்னி, துலாம், மிதுனம் இவ்வைந்தும் உறவாகும்.

## விருஷப துலாமிரண்டிற்கும் விபரம்:—

மிதுனம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேடம், இவ்வேழும் உறவாகும்.

## மிதுனம் கன்னி யிரண்டிற்கும் விபரம்:—

சிம்மம், மீனம், மேடம், விருஷபம், கடகம், துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் இப்பத்தும் உறவாகும்.

### கடகராசிக்கு விபரம்:—

விருஷபம், மிதுனம், தனுசு, மீனம், கன்னி, இவ்வைந்தும் உறவாகும்.

### சிங்கராசிக்கு விபரம்:—

மீனம், மேடம், இவ்விரண்டிற்கும் உறவாகும்.

### தனுசு மீனம் இவ்விரண்டிற்கும் விபரம்:—

கும்பம், விருஷபம், மிதுனம், கடகம்; சிங்கம், கன்னி, துலாம் இவ்வேழும் உறவாகும்.

### மகரம் கும்பம் இரண்டிற்கும் விபரம்:—

மிதுனம், கன்னி, தனுசு, மீனம்; விருஷபம, துலாம், இவ்வாறும் உறவாகும். பெண்ராசியாதிபதியும், வரன் ராசியாதிபதியும் பகையில்லாமல் உறவாகில் உத்தமம்.

### வசியப்பொருத்தங்களாவன:—

| | | |
|---|---|---|
| பெண்ராசி, மீனம் | — | வரன்ராசி, துலாம் |
| பெண்ராசி, மிதுனம் | — | வரன்ராசி, விருச்சிகம் |
| பெண்ராசி, கும்பம் | — | வரன்ராசி, கடகம் |
| பெண்ராசி, மேடம் | — | வரன்ராசி, கன்னி |
| பெண்ராசி; விருஷபம் | — | வரன்ராசி; தனுசு |
| பெண்ராசி, மகரம் | — | இவை தீதாகும். |

இவையல்லாமல் வேறு எந்தவிதமாகயிருந்தாலும் உத்தமம்.

### இரச்சுப்பொருத்தங்களாவன;—

சிரரச்சு, கண்டரச்சு, நாபிரச்சு, ஊருரச்சு, பாதரச்சு, இவ்வைந்துள் பெண்நட்சத்திரமும் வரனட்சத்திரமும் ஒருவரையிலிருந்தால் கெடுதி. அப்படியிருப்பதில்,—

| | | |
|---|---|---|
| சிரரச்சுவாகில் | = | பெண் மரணம் |
| கண்டரச்சுவாகில் | = | வரன்மரணம் |
| நாபிரச்சுவாகில் | = | அவ்விருவருக்கும் பிறக்குங்குழந்தை மரணம் |
| ஊருரச்சுவாகில் | = | மலடு |
| பாதரச்சுவாகில் | = | பொருள்நாசம் |

இறங்கு முறையிலொன்றும், ஏறுமுறையிலொன்றுமாக மாறிவரில் மிகுந்த நன்மை.

### வேதைப்பொருத்தங்களாவன:—

பெண் நட்சத்திரம் அச்சுவனி, வரனட்சத்திரம் கேட்டை, பெண் பரணி, வரன் அனுஷம், பெண் கார்த்திகை, வரன் விசாகம்; பெண் உரோகணி, வரன் சுவாதி, பெண் திருவாதிரை, வரன் திருவோணம், பெண் புனர்பூசம், வரன் உத்திராடம், பெண் பூசம், வரன் பூராடம், பெண் ஆயிலியம், வரன் மூலம், பெண் மகம்; வரன் ரேவதி; பெண் பூரம்;

வரன் உத்திரட்டாதி, பெண் உத்திரம், வரன் பூரட்டாதி; இவை வேதை கயிருகும். அஸ்தம்; சதயம்; மிருகசீரிடம்; சித்திரை; அவிட்டம் இவை ஒன்றுக்கொன்று வேதையாம்.

### நாடிப்பொருத்தங்ககளாவன:—

அச்சுவினி, திருவாதிரை; புனர்பூசம்; உத்திரம், அஸ்தம், கேட்டை; மூலம்; சதயம்; பூரட்டாதி-ஆவ்வொன்பது நட்சத்திரங்களும் ஏகநாடியாம் பரணி, மிருகசீரிடம், பூசம்; பூரம்; சித்திரை: அனுஷம்,பூராடம், அவிட்டம் உத்திரட்டாதி, இவ்வொன்பது மத்தியோகநாடி, கார்த்திகை ரோகணி ஆயிலியம், மகம், சுவாதி,விசாகம், உத்திராடம் திருவோணம் ரேவதி இவ்வொன்பதும் பார்சுவேகநாடி பெண் நட்சத்திரமும் வரநட்சத்திரமும் ஒரே நாடியாக விருக்கில் தீங்கு.

### விருட்சப்பொருத்தங்களாவன;—

வரனட்சத்திரம் வயிரமும் பெண் நட்சத்திரம் பாலுமாக விருக்கில் நன்மை. வரனது நட்சத்திரம் பாலும், பெண் நட்சத்திரம் வயிரமுமாகில மலடு; வரன் நட்சத்திரமும் பெண் நட்சத்திரமும் வயிரமாகில் புத்திரநட்டம் பெண் நட்சத்திரமும் வரனட்சத்திரமும் பாலாகில் மிகுந்த நன்மை.

### பட்சிப்பொருத்தங்களாவன:—

பெண்ணின் பட்சியும், வரன் பட்சியும் உறவாகில் மிகுந்த நன்மையுண்டு.

மேற்கூறிய பொருத்தங்களில் ஐந்து பொருத்தங்கள் பிரதானமாகும் பிராமணர்களுக்குத் தினப்பொருத்தமும் க்ஷத்திரியர்களுக்குக் கணப்பொருத்தமும் வைசியர்களுக்கு இராசிமைத்திரபொருத்தமும் சூத்திரர்களுக்கு யோனிப்பொருத்தமுஞ் சிரேஷ்டம்.

---

## விவாவகமுகூர்த்தஞ் செய்வதற்கு விபரமாவன—

உத்திராயணத்தில் சித்திரை வைகாசி ஆனி ஆவணி ஐப்பிசி கார்த்திகை தை பங்குனி இ ட மாதங்களில பூர்வபக்கத்தில் திங்கள் புதன் வியாழம் வெள்ளி இவ்வாரங்களில் துதியை திருதியை பஞ்சமி தசமி ஏகாதசி திரையோதசி இத்திதிகளில் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி அஸ்தம் ரேவதி உரோகணி மிருகசீரிடம் மகம் அனுஷம் மூலம் சுவாதி இப்பதினொரு நட்சத்திரங்களில் மிதுனம் துலாம் தனுசு இந்த லக்கினங்களில் உதயலக்கினத்தில் குரு புதன் சுக்கிரனும் உ-மிடத்தில் சுபகிரகங்களும் ௩-மிடத்தி லெந்தக் கிரகங்களு மிருக்கலாம் ௪ மிடத்தில் சுக்கிரன் குரு புதனும் ரு மிடத்தில் சுபகிரகங்களும் ௬-மிடத்தில் சந்திரன் புதன் இராகு கேதுக்கள் நீங்கலாகவும் எ-மிடஞ் சுத்தமாகவும் அ மிடத்தில் சந்திரன் சூரியன் அங்காரகனும் கூ-மிடத்தில் சனி அங்காரகனிருக்க இராகு கேதுக்கள் நீங்கலாகவும் ௰-மிடம் சுத்தமாகவும் கக-மிடத்தில் எந்தக்கிரகங்களிருந்தாலும் ௨ மிடத்தில் சுக்கிரன் குரு புதனிருக்க

உதயலக்கினத்திற் குருவும் எ-மிடத்திற் சந்திரனும் அ-மிடத்திற் சுக்கிரனும் கூ-மிடத்திற் சூரியனும் ௩ மிடத்திற் சனியும் ௬ மிடத்திற் புதனும் கக மிடத்தில் சூரியனும் அ மிடத்தில் சுக்கிரனும் ௬ மிடத்தில் புதன் சுக்கிரனும் கூ மிடத்தில் பாவகிரகங்களும் அ மிடத்தில் சுக்கிரனும் கூ மிடத்தில் சூரியனும் லக்கினத்தில் சுக்கிரனும் கக மிடத்தில் குரு அல்லது சந்திரன் லக்கினத்தில் சுக்கிரன் குருவும் க:௪:எ:க0 யென்னுங் கேந்திரங்களிலும் ரு கூ யென்னுந் திருகோணங்களிலும் சுபகிரகங்களும் கக-மிடத்தில் அங்காரகனும் லக்கினத்தில் சுக்கிரன் புதனும் க0 மிடத்தில் சூரியனும் ரு மிடத்தில் குருவும்: லக்கினத்தில் சுக்கிரன் புதன் குருவும் லக்கினத்தில் புதனும் கூ மிடத்தில் சனியும் கக மிடத்தில் செவ்வாயும் கூ மிடத்தில் குருவும் க0 மிடத்தில் சூரியனும் லக்கினத்தில் புதனும் குருவும் உ மிடத்தில் சந்திரன் ௩ கூ க0 கக ல் பாவகிரகங்களும் லக்கினத்தில் புதன் சுக்கிரன் உ மிடத்தில் சுக்கிரன் கஉ மிடத்தில் குரு அ மிடத்தில் சூரியன் லக்கினத்தில் சுக்கிரன் ரு மிடத்தில்புதன் கக மிடத்திற் சூரியன் இவ்வகையாகப் பார்த்து முகூர்த்தம் வைப்பது மிகுந்தநன்மையுளது.

கிருஷ்ண பக்கம்: அட்டமிக்கு மேல் வருகின்ற எல்லாத்திதிகளு மரணத்தையே உண்டாக்கும்.

---

நவாம்சக்கோள்களாவன:—

வெண்பா

விளம்பெந்தக் கோள்கடா மேவுநாற் பாதந்
தளர்விலொவ் வோர்வீட்டுக் குத்தா—னளிக்கவகை
மூவோன்பா னுட்களையே முன்மூன்று கூறுக்கி
மாகூருடை மூன்கொடுக்க வந்து.

துவாதசாம்சக்கோள்களாவன;—

வெண்பா

கோள்நிலைநாட் பன்னிரண்டு கூறிற் கொடுக்கவரு
நாள்வர்க் கெததற்கென் னுங்கணக்குக்—கோள்பொருந்து
மந்தக் கணக்கி னகத்தி லவரவரை
முந்தி யடைக்க மொழி.

திரிம்சாம்சக்கோள்களாவன;—

வெண்பா

கோள்நிலைநா ளாறைந்து கூறிற் கொடுக்கவரு
நாள்தொகையார் பங்கதனி னுடியெந்தக்—கோள்பொருந்து
மான வவர்வீத மகத்தி லவரவரை
யூனமிலா தேயடைப்பா யோர்ந்து.

## இராசிமானசங்கைகளாவன:—

### விருத்தம்.

வேண்டியமே டம்நாலே காலென் றேதும்
மேன்மையிலங் கைக்கஞ்சா மிருஞ்சோ றெட்டில்
ஈண்டியதோர் சாயைரெண்டுங் கூட்டிக் கண்ட
விலக்கமா மதுரையெழிற் காசி காஞ்சி
நீண்டடிக்கும் பெங்களூர் தனக்குஞ் சாயை
நின்றதுபார்த் தாற்குறைந்து நிற்கு மேடம்
மாண்டகசேர் விழுச்சாயைக் கண் டாற் சன்ம
மாகுகலா லக்கினசுத்தி யறிந்து செப்பாய்,

## நட்சத்திரபாத ராசிகளாவன:—

### விருத்தம்.

சீர்பூத்தபரியடுப்போடெரிநாளின் முதற்காலுஞ் சிறந்தமேடம்
ஆர்பூத்தகார்த்திகைமுக்காற்சகடு மான் றலைமுன்னரையும்பாண்டில்
ஏர்பூத்தமதிப்பினரையாதிரைநற் புனர்தமுக்காலெழிலார்தண்டாம்
வார்பூத்தபுகழ்ப்புனர்தக்கடைக்காலும் வண்டரவுமன்னுசேக்கை.

### இதுவுமது.

மன்னியமாமகம்பூரமுத்திரத்தின் முதற்காலும்வயங்குசீயம்
மின்னியவுத்திரத்தின்முக்கா லத்தநடுநாண் முனரைவிளங்குகன்னி
துன்னியசித்திரைப்பினரை சோதிவிசாகத்தின்முக்காற்றுலையதாகும்
பன்னியவிசாகத்தின் கடைக்காலனுடங்கேட்டைபகருந்தேளே.

### இதுவுமது.

பகர்குருகுபூராடம்விச்சுவநாண் முதற்காலும்பரவுவில்லாம்
புகழுமுத்திராடமுக்காலுலக்கைவிட்ட முன்னரையும்பொலிசுறுவா
நிமழ்விட்டப்பின்னரையுஞ்சதயமொடு புரட்டைமுக்காணிறைந்தகும்பந்
திகழுபுரட்டைக்கடைக்காலும் பிற்கொழுங்கோலிரேவதியுஞ்சீரார்மீனம்.

## ஓரைக்கோள்களாவன :—

### வெண்பா.

ஓரைக்கே கோணிலைநா ளோரிருகூ றுக்கவதிற்
றுரைபதி யோரைக்கோள் சாருநளிர்—சூரியன்ற
ஞேரைக்கோ டர்ன்சிங்க முற்றுவர முன்போல
நேரையறிந்த டைப்பாய் நீ.

## திரேக்காணக்கோள்களாவன:—

### வெண்பா

ஓதுகிர கம்மிருக்கு மொவ்வோ ரிரர்சிநாட்
பாதநவ முக்கூறுப் பாகித்தப்—போதுவருங்
கோட்சார வோர்மைதனைக் கொண்டுபா கப்படிக்குத்
தாட்சியில் லாதடைக்கத் தான்,

### நவாம்சங்களாவன:—

#### வெண்பா.

ஆடரிவின் மேடாதி யான்பெண் மான்மாறுதி
கூடுசெவை சீர்கும்பங் கோலாதி—பீடுள்
நளிர்தேண் மீனண்டாதி காட்டி நவபாக
மிளிர்நவாம் சந்தான் விளம்பு.

### துவாதசாம்சங்களாவன—

#### வெண்பா.

இலக்கினத்து நாழிகளை யீராறு கூறுய்க்
கலக்கமிலா மற்கணக்கைக் கண்டே—இலக்கினமுன்
னீரா றிராசிகண்மே லீத்வா தசாம்சத்தைக்
கூறார் விழிக்கோதாய் கூறு.

### திரிம்சாம்சங்களாவன:—

#### வெண்பா.

ஆணிலக்கி னந்தன்னை யாறைந்து கூறுக்கிச்
சேணைந்தைந் தெட்டேழுஞ் சீரைந்துஞ்—காணுஞ்சே
யாதிசனி குருமா லஞ்சுங்க ணந்தம்பெண்
கோதிறலை கீழாகக் கொள்.

---

### இலக்கினோதயங்களாவன:—

கிரேதா யுகத்துக்கு—அபிஷேகமுகுர்த்தமே சென்மலக்கினம்.
திரேதா யுகத்துக்கு—ஆதானமுகுர்த்தமே சென்மலக்கினம்.
துவாபரயுகத்துக்கு—சிரோதயமே சென்மலக்கினம்.
கலியுகத்துக்கு—பூவோதையமே சென்மலக்கினமாம்.

### இலக்கினங்களாவன:—

#### வெண்பா.

எல்லோ னுதயமுத லேர்சனன காலவரை
நல்லாய் கணக்காக்கி ஞாயிறோன்—செல்லுமதி
யோரையிலே செல்போக வுற்றதையுங் கூட்டிப்பின்
சாரவரு லக்கினமாச் சாற்று.

### ஓரைகளாவன:—

#### வெண்பா.

சென்ம மிரண்டாகச் செய்தோரை ராசிக்கு
முன்னிரவி தன்னோரை மொய்பின்னர்—நன்னிலவு
தன்னோரை யுக்குமமே சார்மூன் சசியோரைப்
பின்னோரை சூரியனுப் பேசு.

திரேக்காணங்களாவன:—

வெண்பா.

சரமுதற்பா கந்தனது சாரிடைக்கோ வைந்தாம்
பொருகடைக்கே யொன்பான் பொருந்தும்—திரமதற்கு
ஒன்பானென் றைந்தா முபயத்திற் கைந்தொன்பா
னென்றுந் திரேக்காண மோது.

கால்முன்னாய்ப்பிறக்கும் கோடி நின்றுபிறக்கும் விபரமாவன—

விருத்தம்.

பாம்புத யத்தி னிற்கப் பத்தினிற் சாமி மேவிற்
றேம்பிக்கான் முன்னாய்த் தோன்றுஞ் செய்யகேந் திரத்தோன் பாம்பு
மாம்பரி யுடனே கூடி யானலக் கினத்தி னிற்கிற்
றாம்புறுங் கொடியே சிற்கத் தரணியில் பிறக்குந் தானே.

கோடிசுற்றிப்பிறக்கும் விபரமாவன:—

விருத்தம்.

குறித்தலக் கினத்தில் ராகுங் குளிகனுங் கூடி நிற்க
வெறித்தலக் கினத்தோ னெட்டா மிடத்துடை யவனுங் கூடிச்
செறிப்புறு குரூர ராசித் திரேக்காணந் தன்னி னிற்கில்
புறப்படுங் கொடியே சுற்றிப் பிறந்திடு மென்று சொல்வார்.

இதுவுமது:

அனையசர்ப் பத்திரே காண மானலக் கினத்திரே காணம்
புனையிலக் கினேசன் றானே பொருந்திய திரேகா ணந்தான்
றனையிலக் கினம தாக தருநல்லோர் பாரா ராகில்
வனையுறு கொடியே சுற்றி மண்ணின்மேற் பிறக்கு மென்பார்.

இதுவுமது.

சிந்தைகூ றிடப மேடஞ் சிங்கமே யுதயமாகப்
புந்தியுஞ் சனியுங் கூடப் பொருந்திடு மகவே தோன்றிற்
கொந்தவி ழுடலிற் பின்னிக் கொடிசுற்றிப் பிறக்கு மென்பர்
மந்தர மின்னைப் போலு மழகிய விடையி னாளே.

இதுவுமது.

விரவிலக் கினத்திற் பாவர் மேவிடக் கொடியோர் பார்க்கக்
கரியராக் கேது கூடிக் கஷயகோள் வீடு தானே
பரவிலக் கினம தாகிற் பண்புறு தேக மீதிற்
றாணியின் மாலையிட்டுத் தான்கொடி சுற்றுந் தானே.

இதுவுமது.

நடக்கும்லக் கினந்தீக் கோட்கு நடுவாகப் பாம்பு நிற்கத்
தொடுத்தலக் கினத்தைச் செவ்வாய் சூரியன் பார்க்கிற் றானும்
வடுத்தவி ருதயந் தன்னை மந்தன்சேய் பார்க்கு மேனுந்
தடுக்கிடாக் கொடியே சுற்றித் தரணியிற் பிறப்பன் மாதே.

அதிகவிரல்களுடன் பிறக்கும் விபரமாவன:—

மூடுது விருத்தம்.

அற்புத லக்கின மைந்தினி லொன்பதிற்
பொற்புள புந்தி பொருந்துற நிற்றவர்
துற்பல மாயிடிற் றேற்றங்கை கால்களிற்
கற்பி லதிக விரல்களைக் காட்டுமே.

குருடாகப்பிறக்கும் விபரமாவன:—

விருத்தம்.

வாக்கினிற் செவ்வா யாறின் மதிநிற்கி லிடக்க ணூனம்
வீக்கியவெட்டிற் பானு வியத்தினிற் சனிதானிற்கிற்
போக்கிடும் வலக்கண் டன்னைப் புகழ்மதி யிரவி தானுந்
தாக்கிட விரவி நிற்கிற் றனிரு கண்போ மென்பார்.

இதுவுமது.

இனியலக் கினத்தி லேழி லிரவியு மிருக்கத் தானுஞ்
சரியனு மிராகு கூடத் தான்பார்க்கின் வலக்க ணூனங்
கனிவில்சே யிராகு பார்க்கக் கலந்திடி லிடக்கண் போகும்
பனிமொழி நற்கோள் பார்க்கிற் பார்வைசற் றுண்டா மென்னே.

நேத்திர ரோகங்களாவன;—

விருத்தம்.

வேல்விழி மாதே விளம்பு வலக்கண்
சால விரண்ட தாமிடங் கொண்டும்
ஏலு மிடக்கண் ணீரா றுவும்
சீல சுபாசு பங்களைத் தேர்ந்தே.

வேறு.

சோதி லக்கினத் திற்குசன் சூழ்ந்திட
ஓது மட்டமத் தோன்சேர் திரத்துறப்
போத வட்டமத் திற்பாவர் போர்கிட
ஏத நேத்திர நோயும்வர் தெய்துமே.

பிதுர்தனமில்லை.

கூறும் ரெண்டா மிடந்தேர்தி ரத்தினில்
வீறு மன்னவன் மேவறென் டாதிபன்
ஊறு மாறெட் டொடுவியத் துற்றிடில்
ஏறுந் தந்தை தனஞ்சற்று மில்லையே.

கெற்பசத்திரத்தாற்சனிக்கும் விபரமாவன:—

விருத்தம்.

பொற்புறு முதயந் தன்னிற் பொருந்தவே செவ்வாய் நிற்கச்
சிற்பமாந் தேளிற் காரிச் சிறப்புட னிருக்க ராகு

மூற்பட விற்கப் பாவர் மூர்க்கமாய்ப் பார்ப்பா ராயின்
கெற்பம்விட் டுதிக்குங் காலங் கெற்பசத் திரமா மின்னே.

பல்லுடன் பிறக்கும் விபரமாவன;—

விருத்தம்.

அரும்பியமி துனங்கன்னியிற் புந்தியங்கிசந்தனிற் செவ்வாய்காரி
யிருந்துதானுதயஞ்செய்திடப் பிறந்தோன்லக்கினமின்றியேயடுக்காய்
திருந்தியவாயிற்பல்லுடன் பிறக்குஞ் சேய்சனியுச்சமேயாகிற்
பெரும்பல்லதாகநிறம்பியவாயாய்ப் பிறந்திடும்பேடிளமயிலே

அவயவக்குறைவுகளாவன:—

விருத்தம்.

ஆமகரத்திற்பிறந்திடச் சனியனருக்கனு நோக்கிடிற்றுடைக்கீ
ழேமிகக்குறைவாலதிசனிகதிரு மெதிருறநோக்கிடிற்றூனே
கோமளமானவவயவங்களிலே குறைபுண்டாமிவர்களேபெலக்கிற்
றூமியர்பெலமேயில்லையேயாகிற் சங்கம்வந்தெய்திடுமென்பார்.

சப்பாணிகளாவன:—

விருத்தம்.

செப்பியமேடமிடபந்தண்டதனிற் றிரேகாணமொன்பதுதன்னி
லொப்பமாமேடந்தன்னிலே யொன்றிலுயரிடபத்தினிலிரண்டிற்
றப்பிலாமிதுனந்தன்னிலே தானேதானதிலக்கினமாக
விப்புவிவந்தோன்பாரிற் சப்பாணியினியவர்நோக்கிடினடப்பான்.

கால்கைகளிலே ஊனம் சிறியதலைவரும் விபரம்:—

விருத்தம்.

சென்றவைந் தாமி ராசித் திரிகோண மூன்றிற் பாவர்
நின்றிடிற் கால்கை யூன நிகரொன்பான் மூன்றிற் பாவ
ரொன்றிற்கால் குறைந்தி ருக்கு முதயத்தின் மூன்றிற்பாவ
ரொன்றிடிற் றலைசி றுக்கு மொளிமதி முகத்தி னாளே.

---

பாலாரிட்டங்களாவன:— 3941

அரிஷ்டபலன்கள்.

விருத்தம்.

ஒன்பதோ டொன்று நாலுக் குடையவ ராறு ளோனே
யின்பமாய்க் கூடி யெட்டி லிருந்திடி லவர்தி சைக்குட்
பின்புறு சித்தி ரத்திற் பிள்ளையும் பிதாவுந் தோடம்
வன்புடன் மரண மெய்தும் வாட்டடங் கண்ணி னாளே.

இதுவுமது.

உத்திர மகத்தி னோடே யுறைக்கும்ரே வதிநாற் காலிற்
புத்திரர் பிறக்கி லீன்ற பூங்கொடி மரண மாகும்

குத்திர மகமு தற்காற் குழவியைப் பிறக்கி லீன்ற
பத்தினிக் கரிட்ட மாகும் பையர வல்கு லாளே.

### இதுவுமது.

போற்றுமுத் திரம்பூ ராடம் பூசமா யிலியம் சித்ரை
யேற்றிடு முதற்கா லான விராசிலக் கினமே யாகச்
சேர்த்திடு மிந்த நட்சத் திரத்தினிற் குழவி தோன்றி
லாற்றிடு மாதுர் கண்ட மாமென வறைவர் தாமே.

### கேண்டாந்தகாலங்களாவன;—

ஆனரே வதியி னுற்கா லசுவினி தனின்மு தற்கான்
மோனமாங் கேட்டை நாற்கான் மூலத்தின் முதற்கா றன்னி
லீனமா யிராசிச் சந்தி லேந்தலே தோன்று மேனுந்
தானவை திரிகோ ணத்திற் றந்தைக்கே யரிட்ட மாமே,

### களத்ராரிஷ்டங்களாவன;—

ஓரேழிற் பன்னி ரண்டி ரொன்பதிற் சனியி ருக்கக்
காரேறு பாவர் பார்க்கக் களத்திரம் விவாக மீனஞ்
சீரேழி லட்ட மத்தோன் சிகிகூட பாவர் பார்க்கிற்
பேரேறு களத்திர வீனம் பிறர்மனை பொசிப்ப னுவன்.

### அரிஷ்டங்களாவன;—

இலக்கிணத்திற்கு ரு-மிடம் ௧௦ மிடம் செவ்வாய் நிற்கில் மாமன் மரணம் சனிநிற்கில் பிள்ளை மரணம். சந்திரநிற்கில் மாதாமரணம். சூரியநிற்கில் பிதாமரணம் சுபக்கிரகநோக்கில்லாமல் சந்திரனுக்கு எ-ல் செவ்வாயாதல் சனியாதல் நிற்கில் மாதாமரணம். சூரியனுக்கு எ-ல் செவ்வாயாதல் சனியாதல் நிற்கில் பிதாமரணம். பாபக்கிரகங்கள் உடலையு முயிரையும் பற்றிநிற்கில் பிள்ளைமரணம், இலக்கினத்திற்கு கூ-ல் சூரியனும் சூரியனுக்கு எ-ல் சனி செவ்வாய்நிற்கில் பிள்ளையும் பிதாவுமரணம். கூ-ல் சந்திரனிற்க தாயுடன் மரணம். லக்கினத்தில் சனியும் சு-ல் செவ்வாயும் எ-ல் சூரியனும் நிற்க சுபக்கிரகங்கள் நோக்கில்லையாகில் பிள்ளையன்றையப் பகலேமரணம். லக்கினத்தில் இராகு கேதுக்கள்நிற்க பிள்ளை யன்றிரவே மரணம். உடலிலுமுயிரிலும் பாபக்கிரகங்கள்நிற்க சுபக்கிரகங்கள் பாராதிருக்க பிள்ளைமரணம். அமரபக்கத்து சந்திரனுக்கு முன்பின்பாபக்கிரகங்கள் நிற்கத் தாயும்பிள்ளையும்மரணம். ஜெனித்தபொழுது தூமாதிபஞ்சக்கிரகஞ் சூழ கிரகணந்தீண்டில் பிள்ளையன்றேமரணம். கூ ௧௧ ல் சனியும் செவ்வாயும் கூ-ல் பாம்பு நிற்கில் பிதாமரணம். எ-அ-ல் செவ்வாய் சனி நிற்கில் பிள்ளை மரணம். ௩-ல் சனி செவ்வாய்நிற்கில் சகோதிரமரணம். எ-ல் சனி செவ்வாய்-வெள்ளி நிற்கில் பிள்ளை மரணம். எ-ல் சூரியன் சந்திரநிற்கில் மாதாபிதாமரணம். கடகம்லக்கினமாக ௩-கூ-ல் பாபர்நிற்க ௧௨-ல் சுபர் நிற்க பிள்ளைமரணம்.லக்கினத்துக்கு கூ-அ-௧௨-ல் அமரமதியும் அவனுடன் பாபக்கிரகம்நிற்க சுபக்கிரகங்கள் நோக்காதொழியினும், சு-அ-ல் அமரமதி

யும் பாபக்கிரகங்கள்நிற்கினும் பிள்ளைமரணம். இவையெல்லாம் சுபகிரகங்களுடைய சம்மந்தமும் நோக்குமில்லையாகில் மேற்கூறியபடி நிச்சயிப்பதாம்.

விருத்தம்.

செங்கதிர் பரணி சோமன் சித்திரை சேயுத் ராடம்
பொங்குசீர் புதன விட்டம் போற்றுறு வியாழக் கேட்டை
சுங்கனற் புகழ்பூ ராடஞ் சொற்சனி தோணி யென்னத்
தங்கியி விவற்றிற் பிள்ளை சனித்திடிற் றுயர மாமே.

பூசஞ்சித் திரைபூ ராடம் பொருந்திய விரண்டாம் பாதம்
தேசுறு தாய்க்கு மூன்றேற் சிசுவிற்கு முற்ற நான்கேல்
பேசுமா துலன்ற னக்கும் பிறங்குபூ சம்பூராடம்
ஆசறு மூன்றும் பாதந் துணைவர்க்கு மரிட்ட மாமே.

உத்திரம் பூரா டத்தோ டுரைசெய்யும் பூச முற்கால்
சித்திரை தன்னின் முன்னே செறிதரு மிரண்டாம் பாதம்
அத்தநாள் பரணி நாண்மூன் றும்பத மிவற்று திக்கில்
நத்துறு பிதாவி னுக்கு நவிலுவ ரரிட்ட மென்றே.

களிசெய்நீ சமதாய்க் கோணங் களிலிருக் கின்றகோட்கள்
ஒளிரவி தந்தை சோமற் குற்றதாய் சேய்பி ராதா
அளியுறு புந்தி மாம னவிர்குரு தாயின் றந்தை
தெளிபுகர் தாயின் றாய்சுன் சிசுவிற்குங் கண்ட மாமே.

உதயலக் கினத்துஞ் சோம னுறையிலக் கினத்து நல்லோர்
திதிபுரி நோக்க மின்றித் தீயர்க ளிருக்கி லேனும்
மதியுறு வீட்டி னேனும் வருசன்மத் ததிபன் றானும்
பதிதரு பகையா னாலும் பாலனுக் கரிட்டமாமே.

தெரிந்திடு சன்ம நட்சத் திரந்திதி ராசி யந்தம்
பொருந்திடிற் சிசுக்க ரிட்டம் புகழ்மதிக் கேழிற் சேய்சுன்
இருந்திடிற் றாய்க்க ரிட்ட மிரவிக்கேழ் சனிசேயாகில்
பரிந்திடு பிதாவ ரிட்ட மாமெனப் பகர்வர் மிக்கோர்

இரண்டினிற் சனிசேய் வெய்யோ னிருந்திடின் மாதுர் கண்டம்
முரணடரு பரிதி சேய்சுன் மூன்றுறத் துணைவர் கண்டம்
தெருண்டநான் கினிற்சே யெட்டிற் றிடவரா வியத்திற் காரி
அரண்டிட விருக்கிற் பாலற் கரிட்டமுண் டாகுந் தானே.

இந்துத யத்திற் பாவ ரிருபுறங் களிலு நிற்கச்
சிந்துறு வெட்டேழ் நான்கிற் றீயர்க ளிருக்கி லேனும்
நந்திடா வொன்றிற் பானு நண்ணிடப் பாவர் கூட
உந்துசேய் காரி பத்தி லுறினுஞ்சேய்க் கரிட்டமாமே.

சென்மலக் கினத்தில் வெய்யோன் றிகழ்சுபர் நோக்க மின்றித்
தன்மையி லிருக்க நல்லோர் தமைமதி கூடி னேனும்

வன்மைசே ருதய மேழின் மலிதீய ரிருக்கத் தீயோர்
நன்மதி யுடனுற் றூலு நவில்சிசுக் கரிட்டந் தானே.

இலக்கினத் திரவி சோம னெட்டிற் பாவ ரேனும்
நலத்தவொன் றினிற்சேய் கேது நண்ணினு மேழிற் பானு
பலத்திடு நாலிற் செவ்வாய் பகருத யத்திற் காரி
வலத்துறு சுபர்நோக் கின்றி மருவினுஞ் சேய்க்க ரிட்டம்.

தேய்மதி யுச்ச மெய்தத் திகழ்விய மெட்டி ரண்டில்
தீயர்க ளிருக்கக் கண்டத் தினைச்சுபர் பாரா ரேனும்
எயதேய் மதிய மொன்றி னிருந்திடச் செவ்வா யெட்டில்
ஆயபா வரைச்சேர்ந் தாலு மரிட்டமா மகவி னுக்கே.

ஆறினி லிரவி நிற்க வவற்கேழிற் சனிசேய் நிற்கத்
தேறிய பிதாவி னேடு சிசுவிற்கு மாண மூண்டாம்
கூறிய மதிய மாறிற் குளிர்மதிக் கேழிற் சேய்சுன்
மாறிலா திருக்கிற் றாய்க்கு மகவிற்கு மரிட்டமாமே

வியமுட னைந்தெட் டொன்பான் விளங்குதேய் மதியம் பானு
நயமுறு சனிசேய் நிற்க நன்மக வரிட்ட மாகும்
சயமிகு மைந்தில் வெய்யோன் றண்மதி சனிசேய் நிற்க
பயமுறு பிதாவி னேடு பாலனுக் கரிட்ட மாமே.

எழினி லெட்டிற் காரி யிருந்திடிற் சிசுக்க ரிட்டம்
சூழ்தரு பாவ ரேழிற் றுலங்கிடத் தாய்க்க ரிட்டம்
போழ்தரு மிரவி யேழிற் பொருத்திட பாவர் பார்க்கத்
தாழ்வறு பிதாவி னுக்குத் தானுறு மரிட்டந்தானே.

பன்னிரெண் டொன்பா னெட்டிற் பரிதிதேய் மதிசேய் காரி
மன்னியேயிருக்கிற் றேன்று மகவினுக் கரிட்டமாகும்
மின்னுபன் னிரண்டில் வெய்யோன் மிளிர்தரு குசனு நிற்கப்
பன்னிய வன்னை யோடு பாலனுக் கரிட்டமாமே.

எட்டினிற் பாவ ரெய்த விலகுதேய் மதியர் தானும்
திட்டமா கேந்தி ரிக்கிற் சிசுவினுக் கரிட்ட மாகும்
வட்டமா மதிய மாறில் வன்பாவ ருடனி ருக்கில்
இட்டமா யீன்ற வன்னைக் கெய்திடு மரிட்டந் தானே.

## வேறு.

இலகுபோ ரெட்டிற் பாவர்க ளிருக்க வேழுநா ளதிற்சிசுக் கரிட்டம்
நிலவுத யத்திற் பாம்பொடு சனியு நிற்கவே ழினின்மதி யிருக்கக்
குலவிய விரவி யாதல்சே யாதல் கூடிடப் பத்துநா ளரிட்டம்
நலமறு பாவர் சனியுட னென்றி னண்ணிலீ ரெட்டுநா ளாமே.

## வேறு.

ஒன்பதிற் பாம்பு நிற்க வுறும்பிதா விற்க ரிட்டம்
இன்புறு வியம்பத் தைந்தி லிரவிசேய் சனியு நிற்க

அன்புறு பிதாவ ரிட்ட மவிர்பதி னென்றென் பானில்
தென்பொலி சனிசேய் நிற்கச் சிசுவினுக் கரிட்ட மாமே.

**வேறு.**

வளர்மதி நான்கி லாறினி லிரவி மருவவீ ரொன்பது தினமாம்
தளர்வறு மிரவி மதியுமெட் டெய்தச் சனிகுசன் கூடிடப் பார்க்கக்
கிளர்தின மிருப தைந்தென மொழிவர் கிளத்துமோ ரெட்டினிற் சுங்கன்
அளவறு மிரவி சேய்சனி கூடி லரிட்டமோர் முப்பது தினமே.

**வேறு.**

சந்திரன் பாவ ராசி தனிற்குசன் நிரயக் காணத்
துந்திடற் சசிக்கி ரண்டி லுறபன்னி ரண்டி னல்லோர்
வந்துதா னிருந்திற் பெற்ற மகவுடன் பிறக்கும் பாம்பு
செந்திரு மாதே பாம்பாய்ச் செனிக்கினுஞ் செனிக்குந் தானே.

**வேறு.**

விடமிலக்கின மீதிற்குசனுற
உடனிரண்டிடத் தோனுமாருதிபன்
திடமுடனிவர் சேர்ந்திடிற்காதரும்
கொடியபாம்பிவ ரோடுறிற்கொய்யடம்.

**உச்சிரகதோகைபலன்களாவன:—**

**விருத்தம்.**

ஒருகோ ளுச்ச மரிட்டம் போ மோங்கு மிரண்டே லரசாகும்
தருமூன் றாகிற் சதுரங்கத் தானைச் சமுக மன்னவ னாம்
வருநால் மங்களம் புரிவிக்கு மருவுமைந்தா றெனிற் றேவர்
பாவு நீதி பார்முழுதும் பார மாகி யளித் திடுமே

**வெண்பா**

முக்கிரக முச்ச முறிலாட்சி மொய்நட்பு
தக்கபடி யுற்றிருக்கச் சக்ரவர்த்தி—திக்காசன்
மந்த்ரி நிரநிறையாய் மன்னுமெனச் சொல்வாய்
கொந்தலர்பூங் கோதாய் குறித்து.

**வியாதியும்பாலும் உண்டாமென்பதுகளாவன—**

**விருத்தம்.**

பூவையே லக்கி னாதி புதன் குசன் மிதுனங் கன்னி
மேவிடப் பரிதி பார்க்கில் விளக்குமா சனத்தில் ரோகம்
ஏவுறு சசிக்கு மூன்று மதிபனே டிராகுங் கூடில்
பாவைபோ னேஞ்சை யாகி பலர்முலைப் பாலுங் கொள்வன்.

**விவாகமின்மைகளாவன:—**

**விருத்தம்.**

எண்ணாத பாவி யர்களத் திரத்தி லெய்திட
நண்ணாக வாறெட்டு பன்னி ரண்டி னன்னிடை

துன்னருஞ்சத்துருநீசம் பெறத்தோன் றிட்டான்
மின்னரைக் கைப்பிடித்து வேட்டல்செய மாட்டானே.

### அங்காரகதோஷங்களாவன:—

விருத்தம்.

வாக்கிருநான்கேழெட்டின் மருவுமீராறிற்செவ்வாய்
தேக்கியவரன்றனக்குத் திருந்தவேவந்துநிற்கில்
ஆக்கியமனையாள்சாவா ளாயிழைதனக்குநிற்கில்
பாக்கியபுருஷன்செற்றுப் பார்தனில்விதவையாமே.

## சனிக்கும் ரவிக்கும்,

### காரகங்களாவன:—

விருத்தம்.

விருத்தன்மா வேலைகள வாயுவுயிர்வேதை
மேதிசிறை யற்றுதை வெட்கமின் ஞேய்வீண்சொல்
வருத்தமிரும் படிமையையன் வாயடித்தல் கடுகு
வயற்கலநீ லுழுந்தசுபஞ் சேவகமெண் ணெயுமாம்
பருத்தசிரஞ் சிலும்பன்மயிர் பயித்திய சரீரம்
பான்மிளகு ரசவாதம் பண்டிதங் கோதும்பை
யொருத்தலைநோ வானைசிவம் லோகப்வச்ரம் வலக்கோ
வுயிர்த்தவன்யாத் திரைபகலீ திநற்குளகா ரகமே.

(இ-ள்.)-மரவேலைகளவு. தீர்க்காயு. ஆத்மஇம்சை, எருமைவர்க்கம், சிறைப்படல், நிசிகாலத்துப்பிதா, வெட்கமில்லாதவை, ரோகம், வீண்வார்த்தை, துன்பம், இரும்பு, ஆளடிமை, சாத்தான், வாயடித்தல், கடுகு, வயற்கலம், நீலரத்னமுதலானவை, உளுந்து, அசுபகர்மம, சேவகாவிர்த்தி, எள்ளு; எண்ணெய், இவை முதலானவைக்கெல்லாம் சனியேகாரகன், பருத்தசிரம், சிலும்பினமயிர், பைத்தியசரீரம், பால்; மிளகு, ரசவாதம், வைத்தியம், கோதுமை, ஒருத்தலைநோவு, ஆனை. சதாசிவம். பஞ்சலோகம், வச்சிரரத்னம், வலதுநேத்திரம், பிதா, யாத்திரை, பகற்பொழுது, இவைகட்கெல்லாம் சூரியனே காரகன்;—எ-று.

## மதிக்கும், சேய்க்கும்,

### காரகங்களாவன:—

அகளங்கன் சிவையூண்மாவாய் துயில்வெண் கலமுப்
பளவர்வண்ணர் வெண்ணெய் குடையரிசி பனிப்பயறுப்
பிகழ்வர லங்கம் மிடக்கன் சயரோக முழவன்
யாபார மச்சமுத்தம் வஸ்த்ரமிவைக் கெனலாங்
குகன்முனவன் றுவரைதுவர் கோவிகுலா லன்றீக்
குளவினையர் துணைவகரில் குருதிரிணஞ் சிவப்புத்
தசர்சயம்பாகங் காயஞ்சாக சந்தாம் பிரம்பூ
தனையர்விரணங்காளி தழலிவர்கா ரகமே.

(இ-ள்.) பராசத்தி, போசனம், குதிரை, மாதுரு, நித்திரை, வெண்கலம், உப்பளவர், வண்ணார், வெண்ணெய், குடை, அரிசி, பனிப்பயறு, உப்பு, சிறிதுநாள்பருத்து மிளைத்துமிருக்கும் சரீரம், இடக்கண், சயரோகம், உழவன் மச்சம், முத்து, புடவை, இவைகளின்யாபாரம், இவைகட்கெல்லாம், சந்திரனேகாரகன், சுப்பிரமணியர், விக்கினேசுரர், துவரை, பவளம், கோபவான், குலாலன், அக்கினிமுகமாகச் செய்யுந்தொழிலினர், சகோதரர், யுத்தம், இரத்தம், கடன், சிவந்த ரத்னமுதலானவை, ஆட்டுவர்க்கம்; சுயம்பாகம்; காயம், சாகசம், செம்பு, பூபாலர், விரணம்; பத்திரகாளி, இவைகட்கெல்லாம் செவ்வாயே காரகன்—எ-று.

## புதனுக்கும், வியாழனுக்கும்,
### காரகங்களாவன:—

கார்வணன் றேர்ப்பாகனம்மான் கல்விமர கதஞ்சேங்
கன்றிலே வாணிபன் றூதன் கணக்க னபுஞ்சிகனுந்
தேர்கதைகா வியந்தாதன்சேண்டன மெழுத்துச்
சௌவிஷை யன்ருசிபரன் றிரவச ஞதிக்கன்
பாரறிவன் பயறுதரா வெந்தைய மால்பாலர்
பசும்பொன் மதுவான் கடலைபார்த் திபராண்ராகம்
போதிகன் சீரகஞ்சீவன் மணிமே தகம்விப்
பிரன்பிரம ஞண்டிகுருப் பேரிவர்கா ரகமே.

(இ ள்) விஷ்ணுபகவான், தேர்பாகன், அம்மான், கல்வி முதலானவை பச்சைரத்ன முதலானவை, சேங்கன்றுவர்க்கம், இலேமுதலானவை; வைசியன், தாஞபதி, தூதுவன்; கணக்கன், அலி; தேர், கதைகாவியம், தாதன், அந்தர நாட்டியமுதலானவை, இலிகிதம், விஷையசோரன், தாசிபரன், திரவசஞதிகன், சகல பிரபஞ்சமுமறிந்தவன், பாசிப்பயறு, தரா, வெந்தையம், இவைமுதலானவைக்கெல்லாம், புதனேகாரகன், புத்திரர், சொர்னம், தேன், ரிஷபவர்க்கம், கடலே, அரசர், புருடராகரத்னம், பட்டப்பேர், சீரகம், வைடூரியரத்னம், கோமேதக ரத்னம், விப்பிரவர்க்கம், பிரமா, ஆண்டிவர்க்கம், இவைமுதலானவைக்கெல்லாம் வியாழனே காரகன்—எ-று;

## சுக்கிரனுக்கும், இராகுவுக்கும், கேதுவுக்கும்.
### காரகங்களாவன;—

யேரிலெற்காய்தாசாபசுபெண் டிருறவூர்தி
பேரியைவாத்தியமுதற்சங்கீதநடப்பிரியம்
தார்கொடிடாஞவிமுதலாயபரிமளவா
சனே சயனவணே முதல்வெண் சாமரை சையோக
மேரிளமைமொச்சைபுளியீயமளேபயஞ்சோ
றெப்பொழுதும்பரியாசப்ரசங்கமிரக்ஷகன்மால்
சூர்மலர்ப்பெண்ணிரசிதமாசுணஞ்சோரம்வெகுபேச்
சுவ்வேடத்தொழில்சிகிதுர்த்தொழிலிவர்காரகமே.

(இ-ள்) பட்டப்பெயர், கிரகம், பகற்காலமாதுரு; தாசி, தாசன்முத லானவர், பசு, களத்திரம், மித்திரம்; வாகனம்; பேரியைமுதலானவாத்தி யம்; சங்கீதம்; நாட்டியமுதலானவைகளிற் பிரியம்; மாலை முதலானவை; கொடி, டால்; முதலானவை;நாவிப்பிள்ளைமுதலாகியநானுவிதபரிமளவாச னுதிகள்; கட்டில்; மெத்தை; சப்பிரமஞ்சமுதலானவை; வெண் சாமரை; போகபோக்கியம்; அழகு; இளமை; மொச்சை; புளி; ஈயம்; தயிர்; பால்; அன்னம்; எப்போதும்விகடவிநோதப்பரியாசப்பிரசங்கப்பிரியம்; சனரக்ஷ கம்; ஆசை; தேவப்பெண்கள்; இலக்குமிதேவி;வெள்ளி; இவைமுதலான வைக்கெல்லாஞ் சுக்கிரனே காரகன். களவு; வெகுபேச்சு; நானுவித வேடத்தொழில்; செப்பிடுவித்தை; இவைமுதலானவைக்கெல்லாம் இ ராகுவேகாரகன்; கபடத்தொழில் முதலானவைக்கெலலாம் கேதுவே காரகன்—எ-று.

## ஸ்தானபேதங்களாவன:—

### விருத்தம்.

கனத்ததோர் குருவுக் கெட்டிற் காரியும் விடையு மாகா
டனத்ததோர் சுங்க னின்ற மனைக்கெட்டிற் செவ்வா யாகா
சினத்ததோர் மதிக்கே யேழிற் சேர்ந்திடும் புந்தியாகா
இனத்ததோ ரிரவிக்கெட்டி லிருந்திடு மதியுமாகா.

### இதுவுமது.

இன்னொரு பகைதான் கேளா யிரவிக்கேழ் சனியுமாகா
பின்னொரு சனிக்கேழ் நான்கிற் பூமனு ரிருக்க லாகா
முன்னூறு மரவுக் கேழின் முழுசுங்க னிருக்கலாகா
இன்னொரு பூமனுருக் கேழினுஞ் சனியே யாகா.

### இதுவுமது.

கொற்றவற் கெட்டிற் சோமன் கூறினு மிருக்க லாகா
மெய்த்தவ ரிரவிக் கெட்டிற் கொற்றவ னிருக்க லாகா
சுத்தமாய் காரிக் கெட்டிற் சுங்கனு மிருக்கலாகா
அத்தவ ரவிக்கேழ் நான்கி லரவமு மிருக்கலாகா.

### இதுவுமது.

அரவமுங் காரி நான்கி லேழினு மிருக்க லாகா
இரவிக்கோ ரேழு மாகா விருப்பதும் பூமற் காகா
உரவற்று னிர்க்கும் வாறு மூபமது பாரா ராகிற்
வரவுடன் போக்குக் கண்டு வகைசொல்ல மாட்டார் மாதே.

## அவச்சாயை, பாதச்சாயைகளாவன:—

### விருத்தம்.

வலியதக ராவணியொன் றிருகாற்சுன் னிடப
 மங்கைமுதற் சுன்னிருகா லொன்றுயாழ்கோ லொன்று
மூலைவிலிரு மூக்காலோ ரிரண்டலவன் மீன
 மோரிரண்டு மொன்றரையு மொன்றுர்தே ளிரண்டும்

பெரலியு மிரண் டரைமூன்று வில்லுமூன்றும்
பொருந்தியமூன் றறைநான்கு புல்வாய் நான்கும்
பலன்களிமூன் றறைமூன்றும் குடமூன்று மிரண்டரையும்
பகரிரண்டுங் கழியவயச் சாயைபதச் சாயையரையே.

| மாதங்கள். | ௧௨க்குமேல், | ௧0௨க்குமேல் | ௨0௨க்குமேல், |
|---|---|---|---|
| சித்திரை-ஆவணி ... ... ... | ௧ | உ | 0 |
| வைகாசி புரட்டாசி ... ... ... | 0 | உ | ௧ |
| ஆனி-ஐப்பசி ... ... ... ... | ௧ | ௧உ | ௨ |
| ஆடி-பங்குனி ... ... ... ... | ௨ | ௧உ | ௧ |
| கார்த்திகை ... ... ... ... | ௨ | ௨ | ௩ |
| மார்கழி ... ... ... ... ... | ௩ | ௩உ | ௪ |
| தை ... ... ... ... ... | ௪ | ௩உ | ௩ |
| மாசி... ... ... ... ... | ௩ | ௨உ | ௨ |

மாதத்தை மூன்றுபங்காக்கிப் பங்கொன்றுக்கு மேற்காட்டிய கணக்குப்படி அவச்சாயை தள்ளிக்கொள்ளவும் பாதச்சாயை எப்போதும் அரை அடியாம்.

## மாதத்துப் பகல்நாழிகைகளாவன:—

### வெண்பா.

சித்திரையு மைப்பசியுஞ் சீரொக்குஞ் சித்திரைவிட்
டைப்பசிமுன் னைந்து மருக்கேறு—மைப்பசிக்குப்
பின்னைந்து மாதம் பிசகாதி ராவேறும்
மின்னே விடுபூ முடி.

வி, டி } = ஆ. டு, மு { = ௧வ. பூ—௧உ-நாழிகையாம்

| | | | |
|---|---|---|---|
| சித்திரை-ஐப்பிசி | ௩0 | கார்த்திகை-பங்குனி | ௨௯வ |
| வைகாசி புரட்டாசி | ௩0ஆ | மார்கழி-மாசி | ௨௮ஞ |
| ஆனி-ஆவணி | ௩௧வ | தை | ௨௮உ |
| ஆடி | ௩௧உ | | |

## பகல்நாழிகை பாக்கவகைகளாவன:—

### விருத்தம்.

பகர்ந்தபகல் நாழிகையைப் பாதிசெய்து
பாதிதனை யேழிலே பெருக்கிப் பாரில்
நிகழ்ந்தவடி யளந்தவச்சாய் பாதச்சாய் நீக்கி
நின்றவடி மேலேழுங் கூட்டி யேற்றித்
திகழ்ந்தமுதற் றொகையதனை யிதனுக் கீந்து
சிறந்தபலன் சென்றநா ழிகையாம் பின்பேல்
புகழ்ந்திரவி படுங்கடிகை யிவைதா மென்று
பொலன்குழையாய் பகற்கடிகை பொருந்தச் சொல்லே.

அந்தந்த மாதத்துக்குள்ள பகல் நாழிகையைப் பாதிசெய்து ஏழிற் பெருக்கிக்கொண்டு அடியளந்து அவச்சாயைபாதச்சாயைநீக்கிநின்ற அடியின்மேல் ஏழுகூட்டிக்கொண்டு இதற்குமுன் பெருக்கிவைத்த தொகையைக் கொடுத்துவந்த ஈவை உச்சிக்குமுன்சென்ற நாழிகையாகவும், உச்சிக்குப்பின் இருப்புநாழிகையாகவுங் கொள்க.

## நாழிகைகளுக் கடிகளாவன;—

| நாழிகைக் | சித்திரை ஆவணி | வைகாசி ஆடி | ஆனி | புரட்டாசி | ஐப்பசி மாசி | கார்த்திகை தை | பங்குனி மார்கழி |
|---|---|---|---|---|---|---|---|
| | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி |
| ௧ | ௬௪ | ௬௭ | ௬௮ | ௬௩ | ௬௪ | ௬௭ | ௬௪ |
| ௨ | ௩௬ | ௩௩ஒ | ௩௪ | ௩௨ | ௩௨ | ௩௪ | ௩௪ |
| ௩ | ௨௧ | ௨௨ | ௨௨ | ௨௫ | ௨௧ | ௨௨ | ௨௩ |
| ௪ | ௧௫ | ௧௬ | ௧௬ | ௧௫ | ௧௪ | ௧௪ | ௧௭ |
| ௫ | ௧௨ | ௧௨ | ௧௩ | ௧௨ | ௧௨ | ௧௩ | ௧௩ |
| ௬ | ௯வ | ௯ஒ | ௧௧ | ௯ஹ | ௯ | ௧௧ | ௧௧ |
| ௭ | ௭ஒ | ௮ | ௮வ | ௭ஒ | ௭ | ௮ஒ | ௮வ |
| ௮ | ௬ஒ | ௬ஒ | ௬ஹ | ௬ | ௬ | ௭வ | ௭ஒ |
| ௯ | ௫ | ௫வ | ௫ஒ | ௫ | ௫ | ௬ஒ | ௬[illegible] |
| ௰ | ௪ | ௪வ | ௪ஒ | ௪ | ௪வ | ௫வ | ௫ஒ |
| ௧௧ | ௩ஒ | ௩ஒ | ௩ஒ | ௩ | ௩ஹ | ௪ஒறு | ௫ |
| ௧௨ | ௨ஒ | ௨ஹ | ௩வ | ௨வ | ௩வ | ௪ | ௪வ |
| ௧௩ | ௧ஹ | ௨வ | ௨ஒ | ௧ஹ | ௨ஒ | ௩ஹ | ௪ப[illegible] |
| ௧௪ | ௧ | ௧ஒ | ௨வ | ௧வ | ௨று | ௩ஒ | ௪ |
| ௧௫ | ஒ | ௧வ | ௧ஹ | ஹ | ௨ | ௩வ | ௩ஹறு |

௧௫-நாழிகை வரையில் சென்றநாழிகையாகவும், ௧௫-நாழிகைக்கு மேல் இருப்பு நாழிகையாகவும் கொள்ளவும்.

வியாதி நீங்காதபலன்களாவன;—

ஆயில் முப்பூரஞ்சோதி யாதிரை பரணி கேட்டை
ஏயநற் சதையம்பக்க மீராறு நான்கா றென்பான்
காய்கதிர் செய்வாய்க்காரி வாரங்கள் கலந்தநாளில்
நோய் கொளில் மரணமென்று நவின்றனர் நூல்கள்வல்லோர்.

சத்துருநாசங்களாவன:—

சாற்றுமா திரையிற் செழ்வாக் கிழமையிற் றகரியாதல்
சீற்றமா மகரத்தாலே சேயெழங் பகைஞரில்லிற்
றேற்றிய விறகை வாங்கிச் சுடலையிற் றீயமை மூட்ட
மாற்றலர் மாய்ந்து சோகுஞ் சூனிய மயிலே யன்னாய்.

யாத்திரைக் காகாதநாள்முதலியன;—

விருத்தம்.

போக்கினிற் பரணி யாற லாதிரை பூர மூன்றுந்
தீக்குமா யிலியங் கேட்டை சித்திரை விசாகஞ் சோதி
யாக்கிய மகமி ருத்தை யாதியட் டமியு வாக்கள்
நீக்கிடு மருக்கன் சேய்மால் நிலையோரை நினைக்கலாகா.

இதுவுமது.

வினவுறு விண்டு வில்லு விதீபாத மூர்கோள் வட்டத்
துனிவுறு கிராணஞ் சூலந் தூயசங் கிராந்தி தூமம்
வனிதைகே ளிடித்தல் மின்னல் மழைபெய்த லிடறல் தும்மல்
இளையன செய்யப் போகி லெய்திடு நாசந் தானே.

இதுவுமது.

வெண்பா

ஆடுகன்னி விண்மிதுன மல்லற் படுத்துவிக்கும்
நீடு மகர நினைவழிக்கும்—நாடுங்கால்
மீன நினைவாக்கு மிகுமழையாங் கும்பத்தில்
ஊனமிலா லக்கினத்தை யோது.
விற்பகையை வெல்விக்கு மேலா மெருது சுபம்
எப்பகையும் வெல்லு மிருங்கடகம்—சொற்பெரிய
மன்னனுஞ் சிங்க மகிழ்வாம் விருச்சிகத்தில்
தன்னுடம்பிற் காட்டுந் தழும்பு.

விருத்தம்.

இலைதெரியச் சூலங்கள் மூன்று கீறி
இடைச்சூலத் தியாத்திரைநாள் தன்னைவைத்து
வலமிடமா யிருபத்தேழ் நாளு மெண்ணில்
வழிப்போவான் பிறந்தநாள் நடுவீரரறேல்

பலமிகவே யுண்டாகும் பக்க வாறில்
பறவைபோ லலேந்திடுவான் பகர்ந்த சூலம்
தலையளவே யாமாயிற் சாவான் றிண்ணம்.
சத்தியமா யிந்நூலைச் சாற்றி னேமே.

(இ-ள்) மூன்றுசூலமெழுதி, ஒவ்வொன்றின் அடிக்காம்பின் நடுவில் கூ-முனைதோன்றும்படி முப்மூன்றுவரையிட்டால் உஎ-முனைதோன்றும் இடதுபக்கச்சூலத்துநடுவில் யாத்திரைநாளைவைத்து வலமிடமாகக்கீழும் மேலும் ஜனனநாள்வரையெண்ண, நடுவரை கஉ லுப் வரில் உத்தமம்; வெளிப்பக்கம் கூ-வரையிலுப் வரின், பரவைபோலலேவான்; சூலமுனை கூ-லும் வரின், மரணம்.

சென்மலக்கினத்துக்கு உ ங-கூ-கக-இராசிகளிலும், முக்கியமாய் ஐந் தாமிடஞ் சுத்தமிருக்கும் ராசிகளும் பிரயாணத்துக்கு உத்தமம்.

அன்றையதிதி வாரநட்சத்திரங்களை அவ்வவ்வாதியாகக் கணக் கிட்டுக் கண்டதொகையை உல் பெருக்கி எ-க்குக் கொடுத்து மிச்சங் காணில் மகிழ்ச்சி; முன்தொகையை ங-ல் பெருக்கி அ-க்குக் கொடுத்து மிச்சங் காணில் இன்பம்; முன்தொகையை ச-ல்பெருக்கி கூ-க்குக் கொடுத்து மிச்சங்காணிற் சுபம். இம்மூன்றிலும் மிச்சங்காணில் உத்தமம்; உ-ல் காணில் மத்திமம், ஒன்றில் காணில் பரியாயம் மிச்சமில்லாவிடின் யாத்திரை போகலாகாது.

புதன் வெள்ளியிலும், ஆடி, புரட்டாசி, மாசி மாதங்களிலும் பெண்கள் பயணஞ்செய்யலாகாது.

திதிவிஷமும், பூமிசுக்கிரன், யோகினி; வேதையும் பயணத்துக்கு ஆகாது.

## சரங்களாற்பயணம் அறியும்விபரமாவன;—

சூரியகலையோடும்போது வடக்குதிக்கிலும், கிழக்குதிக்கிலும், சந்திர கலையோடும்போது மேற்குதிக்கிலும், தெற்குதிக்கிலும், பயணம்போகலாம்.

## எண்ணெயிடல் முதலியவற்றிற்குத்திக்குகளாவன;—

சித்திரை யசன மெண்ணெய் நேர்படு சவர நான்கும்
உத்தமங் கிழக்க தாகு மோங்குயிர் வளருந் தெற்குச்
சித்தமுஞ் சிதையு மேற்குத் திசைகேடு நாலு மூலை
அத்தமு முயிரும் போகு மர்னதோர் வடக்குத் தானே.

## எண்ணெயிடநாள்களாவன;—

அருக்க னெண்ணெ யழகொழிக்கு
மணியுந் திங்கள் புகழ் சேரும்
இருக்கச் செவ்வா யுயிர் பறிக்குஞ்
செய்ய புதனில் கருத் துண்டாம்

கருத்தை யழிக்கும் வியாழ மது
கைப்பொருள் போக்கும் கனவெள்ளி
பெருக்க முண்டாஞ் சனியெண் ணெய்
பேணி முழுதும் பெரியோரே.

ஷ பரிகாரமாவன:—

வெண்பா.

எண்ணெயிட லாகா திருங்கிழமை நாலுக்கு
மெண்ணெயிட லாமென் றியம்பினேம்—பெண்ணேகேள்
ஞாயிறுபூ செவ்வாய்மண் நல்லவியா ழம்மறுகு
தூயவெள்ளி யாவெருவ தூ.

புருஷனை ஸ்திரீயுடன் சேர்ப்பிக்கும் விபரமாவன;—

விருத்தம்.

மண்ணுடை மகளைப் போத வேண்டராய் வாழ்வார் தம்மை
பெண்ணுடன் கூட்ட வேண்டிற் பெரியசித் திரைநா ளத்தஞ்
திண்ணிதா யுதிப்பத் திங்கட் கிழமையிற் றிருவன் னுளைப்
புண்ணிய நறுநீ ராட்டிப் புணர்முலை சாந்தம் பூசே.

ஆயுட்பிரமாணமாவன;—

விருத்தம்.

இயம்பிய விலக்கி னத்தா னினியவர் பலமே யாகி
னயம்பெறு மிராசிக் குள்ள நவாங்கி மொருநூற்றெட்டில்
செயம்பெறு கோட்க ளேழுஞ் சென்றநவாங் சத்தைக் கூட்டி
வயங்குமண் டலத்திற் றள்ளி மற்றது வாயு ளாமே.

மரணகாலத்தின் மாதவிலக்கமாவன;—

விருத்தம்.

கீர்த்தியோ னுடனே நின்ற கிரகங்க டிசையைக் கூட்டிப்
பூர்த்தியாம் பன்னி ரண்டிற் போக்கிநின் றிசேச டத்தை
வார்த்திக மில்லாச் சித்திரை மாதந்தொட் டெண்ணிக் கண்டே
சேர்த்திய திங்க ளிற்பொன் செல்லுநாள் மரண மாமே.

இதுவுமது.

இசையுமைந் தோனைக் கூடி யிருந்திடு கோட்க டங்க
டிசைவரு டங்க டன்னைத் திகழ்பனி ரண்டுக் கீய்ந்தே
யசைவிலா நின்றசேட மதையிலக் கினந்தொட் டெண்ணி
விசையுறு மோரை தன்னின் மென்சனி வருநாட் கண்டம்.

மகளைச்சேரல்:—

விருத்தம்.

நிறைகுரு வெள்ளி கேந்திர நின்றிட வைந்து மைந்துக்
இறையுமே பாவ வர்க்க மெய்திடச் சனியன் பார்க்க

வுறையும்லக் கினத்தில் ராகு வுறுதியா யிருக்கு மாயின்
மறைவின்றிப் புத்ரி தன்னை மருவுவன் மகிழ்ச்சி யாலே.

### புணர்ச்சியிடமாவன:—

#### விருத்தம்.

களத்திரா திபனைச் செவ்வாய் கலந்திடிற் றனித்த வீடு
விளக்கிடுங் கூறை யில்லா வீடுதா னிரவித் தானம்
அளப்பிலாப் புதனே யாகி லவள்பிறந் தகமா மென்பார்
வளப்பமாக் கணிதநூலோர் வகுத்துரை செய்த வாறே.

### கோபுரத்திதில் கம்பமாடுதல்;—

#### விருத்தம்.

உதிய வைத்தீ ராகுக் குடையவ ரொன்ருய்க் கூடச்
சந்திர னிருந்த நாட்குத் தானிரு பத்தி ரண்டாய்
வந்தநா ளுடையோன் கூடின் மலையில்கோ புரத்திற் கம்பம்
விந்தையாய் நாட்ய மாடும் வித்தைக ளுடையனுமே.

### மாதுருகண்டமாவன—

#### விருத்தம்.

பொருந்துசித் திரைபூ ராடம் பூசத்தி லிரண்டாங் காலிற்
றிருந்திய மதியுந் தாதின் சென்மத்திற் கேழாய் நிற்கில்
வருந்திய மாதுர் கண்ட மதியைச்சேய் சனியும் பார்க்க
வருஞ்சுபர் நோக்கா ராகில் அன்னைக்கே கண்டமாமே.

### சோரஸ்திரீகளாவன:—

#### வேறு.

உரைக்குமே ழாதி காரிவாழ் மனையி லுற்றிடக் காரிதான் பார்க்க
இருக்கவே ழிடத்துக் கோன்பதா மதிபனெட்டிலா யினுஞ்சனி வீட்டிற்
பெருக்கவே யிருக்கி லவன்குல மனையைப் பிறர்தமைச் சேர்ந்தவ ரவர்க்ன்
பொருள்களை வாங்கி வரச்சொலிப் புசிக்கும் புண்ணிய வானெனப்புகலும்

### இதுவுமது

#### வேறு.

ஒழிவி லாச்சிவன் பூமதி யேதிரு
வுடம்பி னுதிமூன் றிற்பகை யோரையிற்
பழுது கொள்பகை யோடுற வந்துமுன்
பத்தி னுதியா றெட்டிலீ ரீாறுறத்
தழுவு சுத்திரர் பன்னிரண் டந்தணர்
தக்க பத்திற் சனிராகு கேதுவு
மிழிவுற் றுச்சோர லாபம் குணக்கிடு
மீசன் சொல்லாற் பிரமா வெழுத்திதே.

## இதுவுமது.

### வேறு.

ஏழு துலக் கினத்துக் கேழா மிடம்புகர் வீட தாகப்
பழுதுறு சனிசேய் நிற்கப் பகர்பொன்னோன் பாரா னாகிற்
றழுவிய கொழுநன் காணத் தான்விப சாரஞ் செய்வள்
கழுவினி னெய்யு ருக்குங் கள்ளிய தார மாமே

## இதுவுமது.

இலக்கினந் தனக்கேழ் தன்னில் வியத்தினிற் சோமன் றானும்
புக்கவே பாவ ராம்சைப் பொருந்தியே யிருந்த காலை
சுக்கிரன் பாவ ரோடு துலங்கவே யிருக்க நாரி
கைக்கொள்ளும் புருடனை கணவனைக் கொல்வள் கண்டீர்.

---

## நவக்கிரக சக்கரங்கள்.

### சூரியன்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ |
| ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ |
| ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ |
| ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ |
| ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ |
| ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ |
| ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ |
| ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ |
| ௯ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ |

---

## சந்திரன்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ |
| ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ |
| ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ |
| ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ |
| ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ |
| ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ |
| ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ |
| ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ |
| ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ |

## செவ்வாய்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ |
| ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ |
| ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ |
| ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ |
| ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ |
| ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ |
| ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ |
| ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ |
| ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ |

## புதன்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ |
| ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ |
| ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ |
| ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ |
| ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ |
| ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ |
| ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ |
| ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ |
| ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ |

## குரு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ |
| ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ |
| ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ |
| ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ |
| ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ |
| ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ |
| ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ |
| ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ |
| ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ |

## சுக்கிரன்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ |
| ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ |
| ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ |
| ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ |
| ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ |
| ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ |
| ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ |
| ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ |
| ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ |

---

## சனி.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ |
| ௮ | ௨ | ௩ | ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ |
| ௭ | ௬ | ௧ | ௯ | ௪ | ௫ | ௮ | ௨ | ௩ |
| ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ |
| ௩ | ௮ | ௨ | ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ |
| ௧ | ௭ | ௬ | ௫ | ௯ | ௪ | ௩ | ௮ | ௨ |
| ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ | ௧ | ௬ | ௭ |
| ௨ | ௩ | ௮ | ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ |
| ௬ | ௧ | ௭ | ௪ | ௫ | ௯ | ௨ | ௩ | ௮ |

## இராகு.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| எ | சா | க | கூ | ச | ரு | அ | உ | ங |
| கூ | ச | ரு | அ | உ | ங | எ | சா | க |
| அ | உ | ங | எ | சா | க | கூ | ச | ரு |
| க | எ | சா | ரு | கூ | ச | ங | அ | உ |
| ரு | கூ | ச | ங | அ | உ | க | எ | சா |
| ங | அ | உ | க | எ | சா | ரு | கூ | ச |
| சா | க | எ | ச | ரு | கூ | உ | ங | அ |
| ச | ரு | கூ | உ | ங | அ | சா | க | எ |
| உ | ங | அ | சா | க | எ | ச | ரு | கூ |

## கேது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ | உ | ங | எ | சா | க | கூ | ச | ரு |
| எ | சா | க | கூ | ச | ரு | அ | உ | ங |
| கூ | ச | ரு | அ | உ | ங | எ | சா | க |
| ங | அ | உ | க | எ | சா | ரு | கூ | ச |
| க | எ | சா | ரு | கூ | ச | ங | அ | உ |
| ரு | கூ | ச | ங | அ | உ | க | எ | சா |
| உ | ங | அ | சா | க | எ | ச | ரு | கூ |
| சா | க | எ | ச | ரு | கூ | உ | ங | அ |
| ச | ரு | கூ | உ | ங | அ | சா | க | எ |

### பிரமயோகங்களாவன:—

விருத்தம்.

கொண்டபாக் கியத்திற் கேந்திரந் தன்னிற் குருநிற்க லாபகேந் திரத்தில்
விண்டடர் வெள்ளி யிருக்க வல்லாது வெள்ளிபொன் கிரகமா றிடினுந்
திண்டிறற் பிரம யோகமென் றுரைப்பர் சீரிய முப்பத்தா றாண்டுங்
கண்டயோ கந்தான் பனிரெண்டு வருடங் கனத்தபாக் கியமுள னென்பர்.

### தேவேந்திரயோகங்களாவன;—

விருத்தம்.

தருபதி யொன்றுக் கதிபதி லாபந் தனினிற்கக் குடும்பத்தோன் பத்தி
னகுபெலத் திருக்கப் பஞ்சமக் குரிசி னலந்திகழ் தலத்தினி துறையத்
தொகுமொன்பதுடையோ னிலக்கினத் திருக்கச் சொல்லுதயந்திரமாகி
மிகுசொற் றேவேந்திர யோகமா றுநின்மே லெட்டு வருடமே யோகம்.

### மகுடயோகங்களாவன:—

விருத்தம்.

அந்தண னொந்தி லுறைந்திட வைந்துக் கதிபதி யொன்பதி லிருக்க
முந்திய டத்திற் சனியனே யிருக்கின் மொழிவது மகுடயோ கந்தான்
றந்திடும் பலனே முப்பத்தா றாண்டு தன்மீது முப்பத்திரண்டாய்
வந்திடு மாண்டு வரையுமே யோகம் வாய்த்திடு மதிமுக மயிலே

### சரஸ்வதியோகங்களாவன:—

விருத்தம்.

இனியலா பத்தி லேனங் கிசத்தன்பன் னென்றி லுச்சந்
தனிநிற்கப் பாக்கி யத்தோன் மூன்கூடி யேயி ருக்கின்
மனிசரச் சுவதி யோகம் வரும்நாற்பத் தெட்டின் மீது
முனிவிலா யோகமுண்டா முப்பத்து நாலாண்டாமே.

இதுவுமது.

விளங்கிய கதிரோன் மேவ மேதைமூ வைந்துபாகை
இளங்கொடி தன்னி லெய்த விந்துவெவ் யோனு திப்பத்
தளங்கொள் மாற் கிழமை வந்தாற் சரஸ்வதி யோகமாகுங்
குளங்கொடி ரன்ன மென்று கொடுப்பிக்க நாமகட்கே.

### சிவயோகங்களாவன;—

விருத்தம்.

அன்புறு வாசபைந்துக் கதிபர்பாக் கியத்தின் மேவ
வெனபது பத்துக் குளளோ ருரைந்திடு மைந்தி னிற்கி
லின்புறு சிவயோ கந்தானி தன்பலன் செனனந் தொட்டே
துன்பமில் லாயுண் டபட்டுஞ் சுகமுள்ளோன் யோகமுள்ளோன்.

### வேசியாயோகங்களாவன:—

அருக்கன்முன்னே கிரகநிற்கில் வேசியாயோகம்
மரியசெவ்வாய் நின்றக்காற் றிடசரீ ரத்தன்

மருவரிவை சிந்தையுள ஞெருவன்கீ ழமர்ந்தோன்
வருஞ்செலவு மாதாய முஞ்சரியா யிருப்பன்
றருபுதனின் ருல்வித்தை யுடையன்ரு ரித்ரன்
றக்கவா சாரவான் பந்துகூட் டுறவோன்
குருநிற்கில் வித்துவான் வெகுபுத்திர ருடையன்
கூறும்வியா பாரவல்லன் றிறவா னென்னே.

வாசியோகங்களாவன;—

விருத்தம்.

சூரியன்முன் னேவெள்ளி நிற்கிறனம் பயமுந்
துற்சனன்கல் விப்பிரிய நிமிடவிட வத்தன்
சீரியதோர் போகவா னென்பர் சனிநிற்கிற்
செய்யபரஸ் திரீகமனன் பரதாரவிஷயன்
பாரில்பர வுபகாரி பந்துக்க ளுடையன்
பானுவின்பின் கிரகநிற்கி லதுவாசி யொகம்
பேரியல்சேய் நிற்கில்வியா பாரமிகு வல்லான்
பலவித்தை தீரப்வெகு புத்திரரு முள்ளோன்.

குசுமயோகங்களாவன;—

விருத்தம்.

உயர்திர முதிக்க வெள்ளி யுறைந்திடக் கேந்தி ரத்தி
லயர்விலா மதிய நிற்க வரியசோ ணத்திற் பாவர்
தயவொடு நிற்க மற்ற தானத்திற் சபரே நின்று
னியமமாங் குசும யோக நீண்மதி முகத்தி னாளே.

நீசபங்கராஜயோகங்களாவன;—

விருத்தம.

நீசமான கோளிருந்த நெடியராசி யாதிபன்
வாசமா யிருந்தராசி மன்னனுச்ச ராசியோன்
வீசுவெண் மதிக்குநீச மேவிநிற்குங் கேந்திர
மாசிலெய்தி நீசபங்க ராஜயோக மாகுமே.

இதுவுமது.

அரியநீச நின்றராசி யதி பனின்ற ராசியிற்
றெரியவுச்ச மாகுவோன் சிறந்தோர்வீட்டின் மேவிடத்
துரியமாவ ருதயகேந்தர முற்றகோண முற்றிடிற்
பரிவிநீச பஙகராஜ யோகமென்பர் பாவையே.

இதுவுமது.

உலவுநீச நின்றராசி யுச்சமாய் மதிக்குநன்
னிலைகொள் கேந்தர மாகுமேனு நீசனின்ற வீட்டினன்
கலைமதிக்கு கேந்தரமாய்க் கருதுமூர்த்தி மதியமும்
பலபொன்வர்க்க மேவினீச பங்கராஜ யோகமே.

## இதுவுமது.

### வேறு.

எதமுலா நீசபங்க ராஜயோ கப்பலனை யெடுத்துக் கூறில் [சன்
வாதுசெயும் புலமையோன் வெகுசனபூச் சியன்றன வான் வாக்குநே
சாதுரியன் சாணூற்சாம் பரதார கமனனணு சார ணுவ
ணுதிமுத லாகவரு கணிதநூ லோருரைத்த வருளிதாமே.

## உச்சபங்கநீசயோகங்களாவன:—

### விருத்தம.

ஆறெட்டிற் பன்னிரெண்டி னுச்சர்நிக்கச் சத்ரேச னடார்ந்து பார்க்கக்
கூறிட்ட சாரங்சிச மேறிடினும் சத்துருவைங் கூடி யேதா
னீறுற்ற வுச்சமா யிருந்தாலு முச்சபங்க நீச யோகம்
பேருற்ற பலன்களெல்லாம் வெவ்வேறு பலனுகப் பேச வேண்டும்.

## கேமுத்திரயோகங்களாவன:—

### விருத்தம.

பனிரெண்டு ராசியென்னும் பதில்க்கின மாகக்கொண்டு
இனியதாய் தந்தைபுத்திர ரிசைமனை யுடன்வந்தோர்கள்
தனியுமா யுரத்தாயங்க டனலாப வாகனங்கள்
முனியும்பாக் கியகர்மங்கண் முதற்பலன் மொழிந்திடீரே.

## இதுவுமது.

### வேறு.

நாடிய கேந்திரத் தானத் ததிபனுந்
தேடிய மூலத் திரிகோணத் ததிபனும்
கூடிய கேந்திர மீக்கொள நின்றிடல்
ஊடிய துரகத் தரசனென் றோதே.

### வேறு.

உரைத்திடு லாப மொன்பது பத்தும்
விரித்திடு மந்த வீட்டினிற் கதிபனைப்
பொருத்திய துகைப்படி பொருந்துமவ் வீட்டோன்
வருத்தமில் கேந்திரம் வந்துறின் மன்னும்
ஆண்டினிற் கேந்திர மானதி னல்லோன்
ஊண்டிம்ப ரவர்க ளொன் றுவிட் டொன் றுறில்
தாண்டிய சக்கர யோகத் தனபதி
நீண்டிய லபர வசதினிச் சயமே.

### வேறு.

லாக ணுதி மருவு மனைதனக்
காக வீரைந் தகத்துக் கதிபனும்
ஏக வீட்டுக் கிறைவனைங் கூடிடில்
போக வான்வெகு பூமிக் கரசனே,

வேறு.

ஆடும் பத்தா மதிபன் சுபருடன்
கூடி மற்றிரு பாலுற்ற கொற்றவர்
நீடி நிற்க நிரந்தர மன்பொடும்
தேடி யேசிவ பூசைகள் செய்வனே.

செய்ய சந்திரன் சன்மந் தனக்குமே
துய்ய பத்தா மதிபதி சூழ்ந்திடும்
மெய்யி லங்கிசை யோன்பெல மேபெறில்
பொய்ய றச்சுப கன்மம் புரிவனே.

புரிகு சுன்சனி பொன்ப ளிங்குமே
பரிவு டன்னொரு வீட்டினைப் பற்றிட
அரிய சற்குண சன்மார்க்க னாகியே
தெரியு ஞானசிந் தைச்சிவ யோகியாம்.

## பரசாதகங்களின் விபரம்.

பரசாதகங்களாவன:—

விருத்தம்

சிறந்த மதியையுஞ் சென்ம மனையையும்
அறிந்த பார்வைக ளரசனேக் காவிடில்
உரைத்த கதிர்மதி பொன்பதி லுற்றிடில்
பிறந்த சேய்பர சாதகம் போற்றுவான்

போற்றும் லக்கினம் பொருந்துங் கதிர்மதி
தோற்றி யிருக்க துரைசூ ழரசனுஞ்
சாற்றிய நீசன் சநிநவாங் கிசையில்
ஏற்றி யிருக்க விதுபர சாதகம்

பரிதியின் கிழமை பண்புறு சோதி
அருகிய துகிசை யமர்திடி லேனும்
பெருகிய புதனும் பெறுநா ளிரேவதி
உருகிய சத்தமி யுறும்பர சாதகம்.

உறுஞ்சனிக் கிழமை யுற்றபி னவிட்டம்
நறுந்து வாதசி காளினிற் பிறந்தோன்
அறிந்திடு மிகபர சாதக மென்றே
சிறந்தநூ லறிந்தோர் செப்புவர் தாமே.

செங்கதி ரிருக்குஞ் செவ்வாயங் கிசையில்
தங்கியங் கிசையோன் றன்மனே லக்கின
பங்குறிற் சன்ம மதைச்சேய் பார்த்திடில்
பொங்கியசிரசு பொடிபடு வாரே.

### வியோனிசாதகம் என்பது அறியும்வகையும் உருவமும்
விருத்தம்.

பாவர்கேந் திரத்திரிகோ ணத்தில்பெலத் திருக்கப்
பண்பான சுபர்கேந்த்ரத் திரிகோண மன்றித்
தாவுபெல மின்றிநிற்கக் கேந்திரத்தி லேதான்
சனியிருக்க வல்லாது புந்திதா னிருக்க
மேவியிவர் பார்த்திடினும் வியோனி சாதகமே
விளம்புமிந்தச் சாதகந்தான் வெண்மதிதா னிருந்த
பூவருந்து வாதசாங் கிசமெந்த ராசி
பொற்பான ரூபமந்தச் சென்மமெனப் புகல்வர்.

ஆட்டின்சாதகங்களாவன:—
விருத்தம்.

இலக்கினத்தோ டசமெருது கடகஞ்சிங் கந்தே
ளியற்றனுசின் முற்பாதி மகரமீ னத்திற்
றுலக்கிலொன்று லக்கினமே யாயிருக்க முன்னஞ்
சொல்லியயோ கமு மிருக்கில் வியோனிசா தகமாம்
பெலத்திடுமோர் மேடத்து வாதசாங் கிசத்திற்
பிறையிருக்கி லாடிதற்குச் சனிப்பார்வை யுண்டேற்
கலக்கமிலாக் கறுப்பாடென் றேதான்கட் டுரைத்தார்
காமுகர்நெஞ் சிணையுநக்குங் களபமுலைத் திருவே.

புலி, நாய், யானை, நரி, பூனை, பாம்பு, தேள், பூரான், விஷசெந்து, கழுதை, பரி, ஒட்டகம், இவற்றின் சாதகங்களாவன :—
விருத்தம்.

மதிசிங்கத் துவாதசாங்கிசந்தன்னி லிருக்க
வக்கிரன்சூ ரியன் பார்க்கில் வரிப்புலிநா யென்பர்
பதியுடைய சனிபார்க்கில் யானையெனப் பகர்வர்
பாம்பிரண்டும் பார்க்கினரி பூனையெனப் புகல்வர்
புதியமதி விருச்சிகத்து வாதசாங் கிசத்திற்
புகிலரவந் தேள்பூரான் சில்விஷச் செந்துக்க
ளெதிர்தனுவிற் பிற்பாதி துவாதசாங் கிசத்தி
லிந்துநிற்கிற் கழுதைபரி யொட்டகமென் றியம்பே.

மான், காட்டுப்பூனை, எலி, கீரி, முயல், நீர்ப்பாம்பு, முதலை, தவளை, ஆமை, நீர்வாழ்வன- மீன், பெருச்சாளி,

இவற்றின்சாதகங்களாவன:—
விருத்தம்.

மகரத்தின் முற்பாதி துவாதசாங்கி சத்தின்
மதியிருக்கின் மான்காட்டுப் பூனையெலி கீரி
சுகமுடைய முயலென்பர் மகரம்பிற் பாதி
துவாதசாங் கிசத்தின்மதி துலங்கிடினீர்ப் பாம்பு

நிகமுதலைத் தவளையுட னுமைதா னெனவு
நீர்வாழுஞ் செந்துக்க வெனநிகழ்த்தல் வேண்டு
மிகன்மீனத் துவாதசாங் கிசத்தின்மதி யிருக்கின்
மேவியமீன் பெருச்சாளி யெனவியம்ப லாமே.

## வியோனி சாதகங்களின்சங்கை, ஆண், பெண், இவற்றின் இலக்ஷணம், அங்கரிணம், மறுமுதலியன:—

### விருத்தம்.

இத்தகைமை யியம்புமிர் தசாதகத்தின் மதிதா
னெத்தனைது வாதசாங் கிசமேறினுமே
வத்தனையே பிறக்குமென்பர் பெலாபெலன்க ளறிந்தே
யாண்பெண்ணென் றிடல்ராசி யறிந்துசொல்லல் வேண்டும்
வித்தகமா கப்பிறந்த வியோனிலட் சணந்தான்
மேடமுடி யிடபமுக மியாழ்கண்ட முன்கால்
வைத்தசந்து கடகமுது குஞ்சிங்க மார்பு
மனுமிருவி லாக்கன்னி வயிறுதுலா மென்பர்.

### இதுவுமது

சுதமே விருட்சிகமுன் னங்காற்க டனுசு
கூறியபீ சமும்பின்னங் காலுமான் கும்ப
மிதமினமு ழங்காலுக்குக் கீழ்மீனம் வாலா
மித்தாகந் தனின்மூன்று பாவர்நிக்கப் பார்க்கி
லதனிலே ரோகாதி விரணங்க ளுண்டா
மந்தப்பா வியர்களுஞ்சொட் சேத்திரம தாகிற்
சதமித்தி ராளாகிப் பார்க்கிலவ ருடையத்
தனவனமறுச் சுபரோற்றங்கள வாமிருக்கும்.

## வியோனி சாதகத்தின் இரேகை முதலியன;—

### விருத்தம்.

என்றவிலக் கினந்தன்னை யெத்தனைகோள் பார்த்த
விருக்குதலத்தனரேகை ரூபமா யிருக்குந்
துன்றுதயந் தனையாரும் பாராம விருக்கிற்
சொல்லுமந்த ராசியுடை ரூபமா மென்பர்
வென்றிமிது மூத்திரண்டு சிங்கத்தி லொன்று
மிருதுலாந் தனிலிரண்டு கும்பத்தி லொன்று
சென்றவிந்தத் திரோகாணத் தொருதிரே காணஞ்
சிரசுதயம் பெரின்முன்சொல் வியோனியிலட் சணமே.

## வியோனிகளின் தலபேதங்களாவன:—

### விருத்தம்.

இருக்கவே சனிபார்க்கில் வணமூரு தனிலே
யிருக்கின்ற பட்சியா மதிபார்க்க விருக்கிற்
பெருக்குசலந் தனிலேசஞ் சரிக்கின்ற பட்சி
பேசுங்கோள் பெலமாகச் சரராசி யிருக்க

வருக்கியலக் கினமுனவாங் கிசந்தன்னி லிருக்க
வல்லதுவி யோனிசா தகமுமே யிருந்தால்
வெருக்கொள்சல பட்சியன்றித் தலப்பட்சி யாகு
மிதுனகன்னி தனினலாங் கிசமுதயம் பெறவே,

இதுவுமது
வேறு.

மிகப்பெலன் பெற்றிருக்க வியோனிசா தகமுண் டாகிச்
சகத்தினிற் சனியன் பார்க்கிற் றலப்பட்சி மதிதான் பார்க்கி
லிகத்தினிற் சலத்திற் பட்சி யென்றுதா னியம்பல் வேண்டும்
புகழ்குரு கடாட்சத் தாலே புலமையோர் புகன்ற வாறே.

விருட்சசாதகம் அறியும் வகைகளாவன;—

விருத்தம்.

பேசுமிலக் கினமதிபொன் னிரவியிவை நாலும்
பெலமின்றி யேயிருக்க விருட்சசா தகமாம்
வீசுகின்ற கர்க்கடக லகரம்பிற் பாதி
மீனமிதி லேநவாங் கிசமாக வுதிக்கி
லாசிலாச் சலசமீ பத்தில்லைத்த மரமா
மன்னியரா சியினவாங் கிசமுதய முதிக்கின்
மாசிலொரு தலத்தில்வைத்த விருட்சமே யாகும்
வாட்டடங்கண் களபமுலை வனசமுகத் திருவே,

விருட்சசாதகத்தின் சங்கைகளாவன ;—

விருத்தம

எழுவதிலக் கினநாத னிலக்கினத்தை விட்டே
யெத்தனைரா சியிலிருந்தா னத்தனையாம் விருட்ச
நழுவியிதில் வாராமற் போனக்கா னுதய
நவாங்கிசத்தோ னெத்தனைந வாங்கிசஞ்சென் றுனே
பழுதிலா வத்தனையாம் விருட்சமுதித் திருக்குங்
பார்க்குமிலக் கினநாத னுதயநவாங் கிசத்தோன்
வழுவிலிவர் தனைத்தொட்டே தருத்தொகைதான் சொல்வர்
வக்கிரமுச் சந்தெரிந்தே யாயுள்வழுத் துவரே

விருட்சம் பயிரமுள்ளதும், பாலுள்ளதும், முள்ளுள்ளதும்

முள்ளின் இலட்சண சாதகங்களாவன:—

விருத்தம்.

இப்படித்தான் பார்த்துரைக்கி லிரவிதா னுதயத்
திருக்கப்பார்க் கினுமுள்ளே வயிரமர மென்பர்
வைப்பின்மதி யம்பார்க்கி லிருக்கிற்பா லுளதாம்
வாழைமுத லானவிருட் சஞ்சனிபரர்த் திடினே

மெய்ப்பிலிருந் திடிற்நருவே கருங்காலி முள்ளாம்
விருட்சமாஞ் சேய்பார்க்கி லிருக்கில் கருங்காலி
செப்பமில்லாத் தொரட்டுமுள்ளாய்ச் செப்புவர்நற் புலவோர்
தெள்ளமுதி னுடன்பிறந்தத் திங்கண்முகத் திருவே.

மா, பலா, தெங்கு, கமுகு, நாவல் கனிஉள்ளதும், இல்லதும் மல்லிகை, சண்பகம், புன்னை, பாதிரி, இவற்றின் சாதகங்ளாவன:—

விருத்தம்.

பொன்னவன்பார்த் திடவிருக்கின் மாம்பலாத் தெங்காம்
பூங்கமுகு நாவலென்பர் புதனிருக்கப் பார்க்கின்
மன்னுகனி யற்றமரம் புகரிருக்கப் பார்க்கின்
மல்லிகைசண் பகம்புன்னை பாதிரியே யாகு
முன்னுசுபர் சுபராசி தன்னிலே யிருக்கி
லுள்ளபடி சுபர்பாவர் ராசிதனி லிருக்கிற்
சொன்னபல மாறுபாடாயுரைக்கவேண்டும்
சொட்சேத்ரந் தனிலிருக்கி னுள்ளபலன் ரூனே.

மேடவிராசியின்பலன்களாவன:—

வெண்பா.

மந்தனொடு மால்சுங்கன் மாபாவி நல்லவர்கள்
கொந்தலர்பூங் கோதாய் குருவிரவி—சந்ததமும்
தீயபலன் காரியொடு தேவர்பிரான் சேர்ந்தக்கால்
வையுமவனேடொத்த தே.

இதுவுமது.

மாரகத்தா னப்பதியா மன்னுகின்ற பார்க்கவனும்
மாரகத்தைப் பண்ணுனம் மானவர்க்கும்—மாரகத்தைச்
செய்வார் சனிமுன்னோர் செவ்வியமே டம்பிறந்தோர்க்
கிவ்வா றுரைப்பீ ரிருந்து.

இடபவிராசியின்பலன்களாவன:—

வெண்பா

குருவெள்ளி யோடிந்து கொண்டா டடர்க்கொடியர்
மருவுசுபக் கோன்மந்தன் மன்னுந்—திருவுறுமா
யோகங் கொடுப்போ னொருவ னவன்சனியே
ஆகுமம் பாவா யறி.

இதுவுமது.

குருமுதலாக் கூறுகின்ற கோட்களே கொல்லும்
இருவினைய ராயினு ரென்றும்—தெரியும்
படியிடப வோரைகனிற் பார்மிசையிற் ரேன்றும்
முடியுடையோர் கட்கு மொழி.

### மிதுனவிராசியின் பலன்களாவன;—

வெண்பா.

சேயரச னோடிரவி சேராக் கொடுங்கொடியர்
ஆயில்புக ரோனொருவ னனகோள்—சேயிழையாய்
மந்தனொடு மந்திரியும் கூட்டமென்னி லிம்மண்ணில்
நந்துமே டப்படியே நாடு.

இதுவுமது.

அசமர்த்த னிந்துகொல்கைக் கங்கா ரகன்முன்
அசமர்த்த ரல்லரிதா ராயில்—இசையுற்
றிலங்கு மதிமுகத்தர யெள்ளறறிஞன் ருகும்
நலங்கொளிரா சிக்கு நவில்

### கடகவிராசியின்பலன்களாவன:—

வெண்பா.

சுங்கணிந்து மைந்தனிவர் சூழாக் கொடுங்கோட்கள்
மங்கலன்மா வேந்தனிவர் மன்னுகின்ற—துங்கமுள்ள
நல்லவர்க ணல்லயோ கத்திறை ஞகுமவன்
சொல்லுறிற் பூசுதனுச் சொல்.

இதுவுமது.

ஆதித்தன் கொல்லான்மற் ருரென்னிற் கொல்லுமவர்
சோதித்து ரைக்கிற்சுங் கன்முதலாய்—தீதுற்ருேர்
கண்டென்று கண்டோ ருவக்குஞ்சொற் காரிகையாய்
நண்டிலுதித் தோர்க்கு நவில்.

### சிங்கவிராசியின்பலன்களாவன:—

வெண்பா.

புந்தியும் பார்க்கவனும் போற்ருக் கொடும்பாபர்
செந்திறத்த செவ்வாயே செம்மைக்கோள்—அந்திரத்தில்
யோகமுற்ருர் தீப்பலனை யோராத னித்திடுவ
ராகுமதி யாரல் புகர்.

இதுவுமது.

புந்திமுத லாப்புகலும் பொல்லாரே பூமிசையோர்
கந்தமதாக் கொல்வ ரவர்வினையில்—பந்தமுற்ருர்
ஆமாகி லாயிழையா யார்கலிசூழ் வையகத்தில்
தாமாண்சிங் கத்தவர்க்குச் சாற்று.

### கன்னிவிராசியின்பலன்களாவன:—

வெண்பா.

செவ்வாயுஞ் செம்பொன்னுஞ் சேஞர் மதியுமிவர்
வெவ்வாயர் வெள்ளி விளம்புங்கால்—ஒல்வுசுபன்
பார்க்கவனும் பங்கயமா வைரிமைந்தன் ருனிவர்கள்
ஏர்க்கமிகு யோகத் தரே.

## இதுவுமது.

கொல்லான் பெரியபிருகுகுஜன் முதலாய்
எல்லாருங் கொல்லு மியல்புடையர்—நல்லாயென்
றென்னுளுங் கூறுவா யேராரிவை மீதுவந்த
மன்னு மவாக்கு மகிழ்ந்து.

## துலாசியின்பலன்களாவன:—

### வெண்பா.

குருவிரவி சேய்கொடியர் கூறுசனி புந்தி
மருவு நலமுடையார் மண்ணில்—திருவுறுமா
யோகத்தா ரிந்ததுவு மொண் சுதனு மொண்ணுதன்மீ
தாகுமள கத்தா யறி.

## இதுவுமது.

சேயவன்கொல் லான்பின்னே சீவன்முன்னு னவர்கள்
தேயு மதியனைய சென்றுதலாய்—ஆயும
அறிவினோர்க் கெல்லா மளந்தறியக் கோலின்
குறியாகு மென்றுரீ கூறு.

## விருச்சிகராசியின்பலன்களாவன:—

### வெண்பா

புந்தியுஞ்சே யும்புகரும் பொல்லாக் கொடியராம்
இந்து வொருத்தனே வேந்திழையாய் —சந்ததமும்
நல்லனிரு ஞால நலனளிப்போன் ஞாயிறுடன்
அல்லவனு மாக வறி.

## இதுவுமது.

குருவென் பவன்கொல்லான் கோதாய்கொல் வோர்கள்
மருவு புதனமுதலோர் மன்னும்—திருவியர்
என்றுரைத்தாய் தேட்பிறந்தோ ரெல்லார்க்கு மிப்படியே
குன்றெனவே கூறு முலை.

## தனுசுவிராசியின்பலன்களாவன:—

### வெண்பா.

ஒருவன் புகர்பொல்லா னைஞ்சே யிரவி
பருவுநல்ல யோகமது பண்ணுந்—திருவுடையோர்
பார்க்கரனும் புந்தியென்று பாமயே ரகலல்குல்
சீர்க்கமலச் சேயிழையாய் செப்பு.

## இதுவுமது.

கதிரவன்சே யாகிவளர் காரிகொல்லான் கொல்வார்
மதிமுதலாய் வெள்ளிமுன்னோர் மன்னுந்—திதியுடைய
பாபிகளென் றோர்ந்திப் படிமிசையி லென்னாளும்
சாபமதி லுற்றவர்க்குச் சாற்று.

மகரவிராசியின்பலன்களாவன:—

வெண்பா.

ஆரல்பொன் னிந்துபொல்லா ரானமர்சுங் கன்புந்தி
வீரமிகு யோகபரன் வெள்ளியே— காரனைய
கூந்தன்மட மானேகேள் கும்பிகொல் லானென்றே
ஆய்ந்துணர்ந்தோர் தாமுரைத்தா ராம்.

இதுவுமது.

சேய்முதலாய் முன்னமே செப்புமவ ரேகொல்வர்
வாய்த்த மகரமதில் வந்துதித்துக்— காந்திபெற
வாழுமவர்க் கென்றே வகுத்துரைத்தா ரென்றுமிகச்
சூழமட மாமயிலே சொல்.

கும்பவிராசியின்பலன்களாவன;—

வெண்பா.

பொன்மதிசேய் பொல்லார் புகரொருவ னேபுனிதன்
தன்னயஞ்சேர் யோக நயந்தளிப்போன்—கன்னனிகர்
ஆனமொழி மாதே யசுரர்தமக் கெஞ்ஞான்றும்
ஞான நிலையுரைப்பே னன்கு.

இதுவுமது.

வேந்தனென்போன் கொல்லான்வெறிகமழ்பூங்கோதைகொல்வார்
ஆய்ந்துணரி லாரன்முன் ஞானவரே—தேர்ந்துரையாய்
வேலைபுடை சூழுலகில் வெப்புங் குடந்தன்னில்
சாலவுதித் தோர்க்கென்று சாற்று.

மீனவிராசியின் பலன்களாவன:—

வெண்பா

காரிபுகர் வெய்யோன்மால் காணக் கடுங்கொடியார்
ஆரலோ டிந்துவிவ ரானவரே— சேரக்கால்
செய்யோன் குருவிவரோ செல்வமளிக் கும்பெரியோர்
அய்யாநுண் ணூலிடையா யாய்ந்து

இதுவுமது

பூசுதன்கெல் லான்கொல்வார் போற்றுஞ் சனி முதலாந்
தேசுபெரும் பாவரென்று தேர்ந்துரைப்பாய்—காசினியில்
கட்டழகி யென்று கதித்துவளர் மீனத்தின்
உட்பிறப்போர்க் கொண் ணுதலா யோர்ந்து.

போதகன், வேதகன், யாசகன், காரகன்களாவன:—

வெண்பா.

கூறு பலனைக் கொடுவென்போன் போதகனும்
வேறுபண் ணித் தட்டுவிப்போன்வேதகனும்—தேறுபலன்

கூட்டுவிப்போன் பாசகனுங் கோல மகாதிசைக்கே
ஈட்டுபொருள் காரகனீ வான்.

இதுவுமது.

பானு திசைக்குமந்தன் பாசகனுஞ் சுக்கிரனே
மானனேகேள் வேதக்னு மன்னவனே—தேனனையாய்
காரகனுஞ் செவ்வாயோ காசினியோர் தாமறிப
எரணியும் போதசனு மே.

இதுவுமது-

இந்து திசைக்குவெள்ளி யேற்றதோர் பாசகனும்
விந்தைமலர் நண்பனே வேதகனும்—மந்தனே
கங்கா நதிபுடைசூழ் காசினியிற் காரகனும்
அங்கார கன்போ தகன்.

இதுவுமது.

மங்கலனுர் தன்திசைக்கு மார்த்தாண்டன் பாசகனும்
திங்களிரும் போதகனுஞ் சேயிழையீர்— பொங்குபுகழ்
ஏயபுதன் வேதகனு மித்தரணி யோரறிய
ஆயசனி காரகனே யாம்

இதுவுமது.

புந்தி திசைக்குப் புரவலனே போதகனும்
சந்திரனே பாசகனுத் தானுவ— ணிந்துநுதல்
மின்னனையீர் செய்வாரோ வேதகனும் வெள்ளியோ
மன்னுபுகழ் காரகனு வான்

இதுவுமது.

வேந்தன் மகாதிசைக்கு வெய்யவனே வேதகனும்
போந்துல ருஞ்செவ்வாயோ போதகனுங—காந்திசெறி
சந்திரனே காரகனுங் தையலே தாரணியில்
அந்தகனே பாசகனு வான்.

இதுவுமது.

வெள்ளி மகாதிசைக்கு வேந்தனே போதகனும்
தெள்ளுபுதன் பாசகனுஞ் செக்கதிரோ—மெள்ளவரும்
காரகனே தானுகும் காரியே வேதகனும்
வாரணியும் கொங்கைமயிலே.

இதுவுமது.

சனியின் றிசைக்குச் சசிபோ தகனும்
இனியசெவ்வாய் வேதகனென் றேத்துங்—கனிமொழியாய்
வெள்ளியே பாசகனும் வேந்தனே காரகனும்
தெள்ளுதமி ழோருரைத்த சீர்

### இதுவுமது.

ஒருவர் மகாதிசைக்கு ளூற்றபல னுண்ண
வருவர் நவக்கிரக மாதே அவுரவரில்
போதகனும்,பாசகனும் போற்று பொருள் காரகனும்
வேதகனு மாகிவரு வார்

### இதுவுமது.

இந்தப் படிநால்வ ரெய்தியொரு கோள்திசைக்குள்
பந்துபல னுண் ணும் வகையறிந்தே—சிந்தித்
துரைத்தபல னெத்திருக்கு மொண்டொடியே கேளாய்
தரைத்தமிழோர் தாமறியத் தான்

## அட்டவர்க்கங்களாவன,—

### இரவி—சஅ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரவி. | க-உ-ச-எ·அ-கூ-க0 கக | = | = | ஆக. | அ |
| மதி. | ங-கூ-க0-கக | = | = | = | ச |
| குஜன | க-உ-ச-எ-அ-கூ-க0-கக | = | = | = | அ |
| புதன். | ங-ரு-சா-கூ-க0-கக-கஉ | = | = | = | எ |
| குரு | ரு-சா-கூ-கக | = | = | = | ச |
| புகர்· | சா-எ-கஉ | = | = | — | ங |
| சனி. | க-உ-ச-எ-அ-கூ-க0-கக | = | = | = | அ |
| லக்கினம். | ங-ச-சா·க0-கக-கரு | = | = | = | சா |

### மதி—சகூ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரவி. | ங-சா-எ-அ-க0 கக | — | — | — | சா |
| மதி. | க-ங-சா எ-க0 கக | = | — | — | சா |
| குஜன். | உ-ங-ரு-சா-கூ-க0-கக | = | = | = | எ |
| புதன். | க-ங-ச-ரு-எ·அ-க0-கக | = | = | = | அ |
| குரு. | க,உ,ச,எ,அ,க0,கக | — | = | = | எ |
| புகர். | ங,ச,ரு-எ,கூ,க0,கக | = | — | — | எ |
| சனி | ங,ரு-சா-கக | = | = | = | ச |
| லக்கினம். | ங,சா,க0,கக | = | = | = | ச |

### குஜன்—ஙகூ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரவி | ங-ரு,சா,க0.கக | = | — | ஆக | [illegible] |
| மதி. | ங,சா-கக | = | — | = | ங |
| குஜன். | க,உ,ச,எ,அ,க0,கக | = | = | — | எ |
| புதன். | ங-ரு·சா,கக | = | = | = | ச |
| குரு. | சா,க0,கக-கஉ | = | = | = | ச |
| புகர் | சா,அ,கக.கஉ | — | — | = | ச |
| சனி | க,ச,எ,அ கூ,க0,கக | = | = | = | எ |
| லக்கினம் | க,ங,சா,க0கக, | = | — | = | ரு |

## புதன்—ருச

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரவி | ரு,சு,கூ.கக-கஉ | = | — | ஆக | [illegible] |
| மதி. | உ,ச,சு,அ-க0 கக | = | — | = | சு |
| குஜன். | க,உ,ச,எ,அ,கூ,க0,கக | = | = | — | அ |
| புதன். | க,ங-ரு சு,கூ,க0,கக,கஉ | = | = | = | அ |
| குரு. | சு,அ,கக-கஉ | = | = | = | ச |
| புகர் | க,உ.ங,ச,ரு,அ,கூ,கக, | — | — | = | அ |
| சனி | க,உ;ச,எ,அ,கூ,க0,கக | = | = | = | அ |
| லக்கினம் | க,உ-ச,சு,அ,க0,கக, | = | — | = | ரு |

## குரு—ருசு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரவி. | க,உ;ங,ச--எ-அ-கூ க0,கக | — | — | — | ஆக க |
| மதி. | உ-ரு எ-கூ கக | = | — | — | ரு |
| குஜன். | க-உ-ச-எ-அ--க0-கக | = | = | = | எ |
| புதன். | க-உ-ச-ரு-சு-கூ·க0-கக | = | = | = | அ |
| குரு. | க,உ,ங,ச,எ,அ,க0,கக | — | = | = | அ |
| புகர். | உ,ரு-சு,கூ,க0,கக | = | — | — | சு |
| சனி. | ங,ரு-சு-கஉ | = | = | = | ச |
| லக்கினம். | க,உ;ச,ரு,சு,எ,கூ,க0,கக | = | = | = | க |

## புகர்—ருஉ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரவி. | அ-கக-கஉ; | = | = | ஆக. | ங |
| மதி. | க;உ;ங-ச-ரு-அ·கூ-கக-கஉ | = | = | = | கூ |
| குஜன | ங-ச-சு-கூ-கக-கஉ | = | = | = | சு |
| புதன். | ங-ரு-சு-கூ-கக | = | = | = | ரு |
| குரு | ரு-அ-கூ-க0-கக | = | = | = | ரு |
| புகர் | சு-உ-ங-ச-ரு அ-கூ-க0,கக | = | = | — | கூ |
| சனி. | ங-ச-ரு-அ-கூ-க0-கக | = | = | = | எ |
| லக்கினம். | க-உ-ங-ச-ரு,அ,கூ-கக | = | = | = | அ |

## சனி—ஙகூ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரவி. | க.உ.ச,எ,அ;க0,கக | — | = | ஆக. | எ |
| மதி. | ங,சு,கக | = | = | — | ங |
| குஜன். | ங,ரு,சு,க0,கக;கஉ | = | — | = | சு |
| புதன். | சு,அ,கூ,க0,கக,கஉ | = | = | = | சு |
| குரு. | ரு,சு,கக,கஉ | = | — | = | ச |
| புகர். | சு;கக,கஉ | = | = | = | ங |
| சனி. | ங;ரு,சு,கக | = | — | — | ச |
| லக்கினம் | க,ங,ச,சு,க0;கக | — | — | — | சு |

## திரிகோண சோதினைகளாவன:—

### வெண்பா.

ஆடரிவில் லான்பெண்மான்;யாழ்கோல்சா னண்டுதேண்மீன்
தேடரிய தாகுந் திரிகோணம்—கூடவற்றில்
ஒன்ருங் கணக்கைத்தள ளொன்றின்றில் ரெண்டிருக்க
நன்ருங் குறைமேறை நாடு.

## ஏகாதிபத்தியசோதனைகளாவன :—

### வெண்பா.

ஆடுதே ளான்கோலாம் யாழ்பெண்வில் மீன்மான்சால்
யீடெதிர்கோ ளில்ராசி யெண்குறையில்—நாடுசமம்
ஆனல்கொள் ரெண்டி லமைந்தா லதுவேகோள்
போனல் சரியெடுத்துப் போடு.

### இதுவுமது.

போடில்கோ ளொன்றிற் பொருந்தியொன்றி லில்லாமல்
வீடிரண்டின் விந்துசம மேவிற்கோள்—கோடிலக்கங்
கொள்கோளில் வர்க்கெஞ்சில் கோளில்லா வீடுயரில்
தள்வாய்தாழ் வாகச் சரி.

## இராசிகுணகாரங்களாவன;—

### வெண்பா

ஆடுசிறை யேழிடப மாளிபத்தி யாழ்தெளெட்டு
நீடுநளிர் நால்பெண்மான் நேரைந்து—கோடுதனு
சொன்பான்சால் பன்னென் றுறுமீனம் பன்னிரண்டு
தன்விந்துக் கும்மா றுதல்.

## கிரககுணகாரங்களாவன:—

### வெண்பா

பானுமதி மால்பங்கு பஞ்சமத்திற் சேயெட்டில்
கோனுக்குப் பத்தில் குளிர்கவியேழ்—ஆனதொகை
ராசிகுணயத் தால்பெருக்கி யானவிரண்டின் றொகையைத்
தேசுபெற வைத்துபின் றிட்டு.

## நிமித்தங்களாவன:—

### வெண்பா.

தலையார் கழுத்தந்த நாபியந்தந் தங்குங்
கொலையரச ராங்கூர் முழந்தா—ணிலவணிகர்
மற்றதின்கீழ் வேளாளர் மாக்கரட்டின் கீழ்மயிரு
முற்ற பறையென் றுணர்.

### இதுவுமது

அங்கஞ் சொரிதல் வெளுப்பா மடிகுய்யஞ்
செங்கைமுகம் பச்சை சிவப்பாகுந் துங்க

மயிரும் வயிறே கறுப்பரைபொன் கேட்கி
லுயிரு முடலுமென வோர்.

## இதுவுமது.

கழுத்தாயின் மங்கலமாங் கைவளையாங் காதேற்
குழைத்தாறு மூருவேற் கூறை—சுழித்த
மயிருயிற் கெற்ப மதிநுதன்மேற் பட்ட
மெயிருயிற் றின்பனவா மென்.

## இதுவுமது.

காணின்றிக் கண்விலங்கிக் காணல்கரங் தேய்த்தல்
கோணின் றடிபுகுதல் கைகூப்பல்—காணிற்
களவுமின் னேராக் கவிப்புதருஞ் செல்வு
முளவுமின் னேரென் றுரை.

## இதுவுமது.

பரற்றெறித்த் நின்றென்றைப் பார்த்தல்; குறிதாய்க்
குரற்குரைத்தல் கூந்தல் குலைத்தல்—காத்தை
முறித்திடுதே லங்குலிகாற் றேய்த்திடுதன் முன்பே
குறித்தபொரு ளிழவாய்க் கூறு:

## இதுவுமது.

மாடு மனிதர் மரநடுவில் வந்திடினுங்
கோடு மொழிதலையே கூடிடினு—மூடிக்
கிடந்தானே கேட்ப்பினுங் கேடெய்து நாளு
மடர்ந்தைநல்லாய் கூறல் வழக்கு.

## இதுவுமது

வெஞ்சுடர் தாள்கத்தி விற்கார் முகவகண்டு
நஞ்சுடைய மூல நடுங்குவன்—பஞ்சு
பிதிர்த்திடினுங் கோபம் பெறுகாலந் தீயே
பிதிர்த்திடினுந் தீதென் றுரை.

## இதுவுமது.

மூக்குநீர் சிந்தன் முகஞ்சுழித்தல் வெய்துயிர்த்தல்
வாய்க்குளரல் கொட்டாவி வாய்விடுத—லார்க்கும்
பிணிவினவிற் றீராப் பெயர்ந்தபொருள் வாரா
துணிபலவு முற்றுமை சொல்.

## இதுவுமது

முடியாக் கருமம் பொருட்பேறு முற்றுக்
கொடியார் யினவுங் கொடுமே—முடிவி
லிழந்தனபே றில்லை யினிநோய் பெருகு
முழந்தா ளிடந்தொடுதன் முன்.

இதுவுமது.

வட்டமாய்க் கீறின் வயிறுதோள் வாய்வதனந்
தொட்டிடினுங் கெட்டனதான் ரேன்றுமாம்—பிட்ட
மரைகான் முதுகு பிடரிகைக் கீழென்
றுரைதாரை தோன்றுமை யோர்.

இதுவுமது-

நாகந் தரித்தார் நடையிலார் நாணமிலார்
சோக முடையார் சுடர்ப்படையார்—போகந்
துறந்தார் வெறுங்கழுததர் துன்னுதாற் கண்ட
லிறந்தானென் றெண்ணப் படும்.

இதுவுமது.

நூலைக் கயிற்றை நெருடன் முறுக்கியிடல்
காலைக்கை யாற்பிடித்தல் கண்ணாக்கன்—மேலைத்
தலையிலீ மஞ்சுமத்தற் றூன்கிடத்தற் றூங்கல்
கொலைதீமை நோய்மரணங் கூறு.

இதுவுமது.

எண்ணெய்மெய்ப் பூச லெயிறுரின்சன் மைதீர்த்தல்
கண்ணையே மூடல் கதவடைத்தன்—மண்ணசையக்
கோவோடன் மந்தை நிலைகெடுதல் கூர்தருநோய்
சாவோடு கேடு தரும்.

இதுவுமது.

கோல மிடுதல் குடைபிடித்தல் கொங்கலர்பூ
மாலை யுடைய மயிர்முடித்தன்—மாலை
முடிக்கேற்றி வைத்தன் முடிமன்னர் போற்றும்
படிப்பேறு பார்த்திபராம் பார்.

இதுவுமது.

வையந் திருத்தல் வடிவெழுதன் மற்றொன்றைக்
கைவத்தல் சிந்தை கனிந்திருத்தல்—கையாற்
றழுவன் மொழியின்பந் தாரை யுருதலுண்டேல்
வழுவி னிதிபெருகும் வந்து.

இதுவுமது.

பால்வெண்ணெ பார்ப்பார் பரிமாப் பகடெருமை
சூல்வெண் சுரபியொடு சூலினபெண்—சாலக்
குடைநிறைநீர் பெண்க டலைமுழுக்க துண்டேற்
றிடநிறைநீர் கூவந் தெளி.

இதுவுமது.

அல்லற் படுவா ரகமோ ட்டகந்தையுள்ளார்
கொல்லப் படுவார் குறைப்புண்டா—ரில்லின்
புடைநின் றிகழ்விடையார் போரிடுவார் தம்மைக்
கடைதலையுங் காண்டல் கடை.

## இதுவுமது.

விரும்புமறை வானரம் வெம்பரிமே லானோர்
குரும்பை மூலமடவார் கூட்டம்—விரும்புங்
கொடையாளா கொற்றப் படையாளர் கூறு
நடையாளர் காண்ட னலம்.

## கெருடதரிசனங்களாவன:—

### விருத்தம்.

தினகரனுள் கலியாண பலமே புண்டாம்
திங்கள்தனில் நினைத்ததெல்லாந்திரளாய்க்கூடும்
அனமுடனே அறுசுவையுஞ் சிக்குஞ் செவ்வாய்
அபமிருத்து தோஷத்தை யகற்றும் புந்தி
மனதிலுறு துயரம்போம் குருவாரத்தில்
வளர் வெள்ளி தனக்கிடுக்கண் மாற்றிவைக்கும்
கனசனிநாள் கெம்பீர பலனே யுண்டாம்
கருடனைக்கண் டாலிதுவே கழறு வாயே.

## திசைகளின் விபரங்கள்.

### க-வது மகாதிசைகளாவன;—

| | | | |
|---|---|---|---|
| அச்சுவினி, மகம், மூலம் | கேதுதிசை | வரு | எ |
| பரணி, பூரம், பூராடம் | சுக்கிரதிசை | வரு | உ0 |
| கார்த்திகை, உத்திரம், உதிராடம | சூரியதிசை | வரு | சூ |
| உரோகணி, அஸதம், திருவோணம் | சந்திரதிசை | வரு | ய |
| மிருகசிரம்; சித்திரை, அவிட்டம் | குசன்திசை | வரு | எ |
| திருவாதிரை, சுவாதி, சதயம் | இராகுதிசை | வரு | யஅ |
| புனர்பூசம், விசாகம், பூரட்டாதி | குருதிசை | வரு | கசு |
| பூசம், அனுஷம், உத்திரட்டாதி | சனிதிசை | வரு | ககூ |
| ஆயிலியம்; கேட்டை, ரேவதி | புதன்திசை | வரு | கஎ |

ஆக மகாதிசை கூ-க்கு வரு ாஉ0.

### உ-வது உற்பன்னதிசைகளாவன;—

ஜென்மநட்சத்திரமுதல் எண்ணினால் ரூ-வது நட்சத்திரமெதுவரு மோ அந்தநட்சத்திரத்துக்கு என்ன கிரகதிசையோ அதுவேயாம்.

### ங-வது மிருத்தியுதிசைகளாவன;—

ஜென்மநட்சத்திரத்துக்கு மூன்றாவது நட்சத்திரதிசையாம்.

### ச-வது பிராணதிசைகளாவன:—

சூரியன் ஜெனனகாலத்தில் எந்தராசி பாகை கலையிலிருக்கிறானோ அதையறிந்து மேஷாதிபாக இராசி க-க்கு கஅ00-கலையாகக்கணக்கிட்டு எந்தராசியின் எத்தனையாவது பாகையிலிருக்கிறானோ அதை பாகை க க்கு

கூ0-கலையாக மேல்கண்ட கலைகளுடன் கூட்டி அ00-ல் வகுக்க வந்த யீவுகளை அசுவினிமுதலாகவெண்ணி மீந்தகலைக்கு எந்த நட்சத்திரம் வருகிறதோ அதேநட்ஷத்திரத்துக்கு என்னதிசையோ அதுவேபிராணதிசையாம்.

ரு-வது ஆதான திசைகளாவன:—

ஜென்மநட்சத்திரத்துக்கு அ-வது நட்சத்திரதிசையாம்.

கூ-வது வாமதிசைகளாவன;—

ஜென்மநட்சத்திரமுதல் தலைகீழாத எண்ணினல் நாலாவதாகவரும் நட்சத்திரதிசையாம்.

எ-வது உடுதிகைகளாவன;—

பிராணதிசையிற் சூரியனுக்குக்கண்டதுபோல் சூரியன்சந்திர னிருவருக்குங்கண்ட கலைகளை யொன்றுபடுத்தி முன்போலக்கண்டதிசையாம்.

அ-வதுநிரியாணதிசைகளாவன:—

சூரியனுக்குப் பார்த்ததுபோல் லக்கினமிருக்கும் பாகைகளை கூ0 ல் பெருக்கில் மீதிகலையோடு சேர்த்து அ00-க்குகொடுத்த யீவுவரை நட்சத்திரம்போக மீதிகலைக்குரிய நட்சத்திரதிசையாம்.

கூ-வது மகாப்பிராணதிசைகளாவன:—

உடுதிசைபோல சந்திர, சூரிய, இலக்கினஸ் புடங்களைக் கூட்டிக் கண்ட நட்சத்திரை திசையாம்.

ய வது குளிகநிரியாணதிசைகளாவன;—

குளிகனிருக்கும் இராசி பாகை கலையை முன்பிராணதிசை முதலியதுக்குக்கண்டதுபோல கலையாக்கி கூ-ஆல் பெருக்கி சந்திரனிருக்குமிராசி பாகைகலைகளை கலையாக்கி மேலே பெருக்கும்படி சொன்ன கலையோடு சேர்த்து அ00-க்கு கொடுத்துவந்த யீவு எத்தனையோ அதை முன்போலவே எண்ணிக்கண்டதுபோக மீதியான கலையெந்த நட்சத்திரமோ அதற்குரிய திசையேயாம். மிச்சங்கலையில்லாவிடில் வந்த யீவின் நட்சத்திர திசையாம். இது போலவே எல்லாவற்றினுக்கு மகாதிசைபோல் எனக்கூறினர்

நாட்டியவித்தைகளாவன;—

விருத்தம்.

தோமிலா வியத்து ளோனுஞ் சுக்கிரன் ரூனுங் கூடிக்
சேமியா நான்கிலேதான் சிறப்புட னிருக்குமேனு
மாமெனுங் குருசேய் புந்தி யடுக்கொடு கூடு மேனும்
பூமியி னடன வித்தைப் பொருந்திய புலவ னாமே.

விநோதவித்தைவேஷதாரிவிகடவித்தைசெப்பிடுவித்தைகளாவன;—

நாட்டுங்கார்த் திகையிற்கேது நண்ணிடக் குளிகன் பார்க்கின்
மீட்டிரும் விநோதவித்தை விளங்குமைந் தினிலி ராகு
சூட்டுலக் கினத்தில் வெள்ளி தோன்றிடின் வேட தாரி
தீட்டுறும் விகடவித்தைச் செப்பிடும் விகட கற்பன்.

ஊமைகளாவன;—

விருத்தம்.

குடும்பத்தா ஞதியோடு குலவிய புதனுங் கூடி
உடன்பட வாருந் தானத் துற்றிடி லூமை யாகும்
இடம்புறு மூன்ரு மாதி லக்கினத் ததிபன் ருனும்
திடம்பெறக் கூடி லூமை யாகியே திரிவன் ருனே.

வித்தியாபலன்களாவன;—

விருந்தம

பொன்புத னிரண்டின் கோவும் பொருந்திய கேத்திரத்தில்
பின்றிரி கோண மேழிற் பெற்றிடு வித்தை லாபம்
இன்பமா யிவரெட் டாறி லிருந்திடி லில்லை வித்தை
அன்புசேர் கணக்க னுச்ச மாகினல் வித்தை கூறே.

இதுவுமது.

கூறிய புதனு மேழா மதிபனுங் குருவுங் கூடிப்
பேருடன் றிரிகோணங்கள் கேந்திரம் பிடித்திட்டாலும்
வீறிய தனது வீட்டும் விரும்பிய விரண்டாம் வீட்டும்
சீறிடா சிறந்த போது திடவித்து வானுமாமே.

இதுவுமது.

ஆனகேந் திரத்திற் புந்தி யிருக்கரெண் டாம்வீட் டாதி
தானுமே யுச்ச மாகத் தகும்புக ருபயமேவ
ஊனமின் மூன்றினல்லோ ருறவெள்ளி யுச்ச மாக
மானிலத் துதித்தகாளை சோதிடம் வழுத்தவல்லான்.

கிரகயுக்தங்களால் ஈனங்களாவன:—

விருத்தம்.

தருகதிரோ னுடன்சனியன் கூடிஞற் சனியன்
ருனிளைப்பன் சனியுடன் செவ்வாய் வந்து கூடின்
மருவு செவ்வா யிளைப்பனிந்தச் சேயுடனே பொன்னேன்
வந்துறையிற் குருவிளைப்பன் குருவைமதி கூடி
லருணமதி யிளைப்பன்மதி யுடன்வெள்ளி கூடி
லசுரமந்திரி யிளைப்பன் வெள்ளி புந்தி கூடிற்
கருதுபுத னிளைப்பனிந்த புதனைமதி கூடிற்
கலைமதியோ னிளைப்பனெனக் கட்டுரைக்கலாமே.

சயனராகுவின் அடைவும் அதனதுபலன்களாவன;—

விருத்தம்.

சயனரா குவின்கதியைத் தானெடுத்துக் கூறிற்
றருமுதய முதலாக வந்தியமாம் வரைக்கு
நியமமா யிரண்டரைநா ழிகையொருரா சியிலே
நிற்கும்வகை யுதயத்தின் மகரத்தி லுதிப்பன்

செயமகரங் கண்கும்பம் வாய்மீன முகமார்
திரண்மேடம் வயிறிடப மியோனி தண்டுவோலா
மியல்மிதுன வரையாடி ராசியுமிவ் வண்ண
மிருப்பனிராக் காலமுந்தா னிவ்வகையென் றுரையே.

சயனராகுவின்பலன்களாவன:—

வேறு.

விருத்தம்.

பன்னிய வேழாமிடத்தினுக் கிறையும் பாசகன் யோனிராகுவுமே
தன்னிலே வந்து கூடிடுங் காலஞ் சாதகற் கரிட்டமேயாகு
முன்னுமா ரகத்தோன் றிசையவள் புத்தி யுட்புசிப் யவனிட மாக
மன்னவன் வாரமவனது லரிட்டம்வந் தெய்திடு மென்பார்

ருதுஜாதகங்களாவன;—

இலக்கினத்தில் சூரியன், செவ்வாய்நிற்கில் விதவையாவள். சந்திரனிற்கில் பாலியத்தில் மரணமாவள். சனிநிற்கில் மலடியாவள். உ-ல் சூரியன், செவ்வாய், சனி, ராகு, இவைநிற்கில் தரித்திரப்படுவள். ந-ல் சூரியன், இராகு நிற்கில் மலடியாவள. ச-ல் சனிநிற்கில் மூலைப்பாலின்மையாயிருப்பள். ரு-ல் சூரியன், சந்திரநிற்கில் வாழாப்பெண்ணாயிருப்பள். சனி, இராகு நிற்கில் பாலியத்தில் மரணம். சு-ல் புதன் நிற்கில்சண்டைக்காரியாயிருப்பள். எ-ல் செவ்வாய்நிற்கில் சிறையிருப்பள். சனி இராகு நிற்கில் விதவையாவள். அ-ல் சூரியன செவ்வாய்நிற்கில் விதவையாவள். சந்திரனிற்கில் பாலியத்தில் மரணமாவள். கூ-ல் சூரியன், செவ்வாய்நிற்கில் பாலின்மையாயிருப்பள். சனி, இராகுநிற்கில் மலடியாவள். க0-ல் சனி பாம்பு நிற்கில் விதவையாவள். குருநிற்கில் தரித்திரப்படுவள். கக-ல் குரு நிற்கில் வேசையாயிருப்பள். கஉ-ல் சூரியன், இராகு நிற்கில் மலடியாயிருப்பள். செவ்வாய்; சனிநிற்கில் கள்ளுண்பள்.

குளிகதிசைகளாவன;—

வேறு.

விருத்தம்.

குறித்தே குளிகன் றிசையு ரைக்கிற் குளிக னிராசி பாகைகலை
பிறித்தே யறிந்து குளிக நிலை பெற்ற நட்சத்திரதிசையிற்
செறித்தே கென்ற பாகை மட்டுஞ் சென்ற வருடந்தனை யெண்ணி
மறித்தே யபசவ்விய மாக வருடத் திசையை நடத்துவதே.

இதுவுமது.

பகருங் குளிகன் றன்னாலே பார்க்கப் படுவோன் றிசை தனிலும்
சகமேற் குளிக பவந திசைதனிலு மாந்திக் கட்டமத்தி
னிகரி லிந்தோன் றிசை தனிலு நெருக்கு மரிட்டம் பல மாகும்
புகர்கே தறிஞன் சனி பாம்பு பொன்சேய் கணக்கன் புத்தியென்பார்

### யோகினிதிசைகளாவன:—

விருத்தம்.

அரியயோகி நித்திரையை யறிந்துரைக்குங் காலே
யச்சுவினி முதற் சென்ம நாளளவு மெண்ணிப்
பரிவினுட னேயைந்து கூட்டியெட்டிற் கழித்துப்
பகருமிச்ச மொன்றுக்கு மங்களஞ்சந் திரனுஞ்
சரியிரண்டேற் பிங்களம்வெய் யோன்மூன் றுக்கேதான்
றன்னியமா நான்குபிர மரிச்செவ்வா யைந்தே
லுரியபத்தைப் பொன்னாறுக் குலுக்கைசனி யேழுக்
குயர்சித்தை புகரெட்டேற் சங்கடம்பாம் போதே.

இதுவுமது.

மதியிரவி புதன்செவ்வாய் குருகனிநீர்ப் பாம்பு
மன்னுமெண்மர் தனக்கொன்று மு.லெட்டு வரையுப்
விதிமுறையாய் நிரநிறையாய் வைத்துமுப்பத் தாறும்
விளங்குமவர் திசைவருடந் தனைமுப்பத் தாறிற்
சதிராக வேபிரித்தே யவரவர்தன் புத்தி
தனைநடத்தி யொருமுப்பத் தாறுமே லானு
லெதிராய்முன் போனடத்தன் மும்மடங்கு சென்று
லேற்றதீர்க் காயுளென வியம்பினர் மேலவரே.

### உற்பன திசைகளாவன:—

வேறு.

விருத்தம்.

உலகமேல் விளக்க மான வுற்பன திசையைக் கூறி
லிலகிய ஜென்ம நாளுக் கிருபத்து நாலு நாளிற்
பலமுறு திசைமுன் வைத்தே படிப்படி திசை நடத்திப்
புலனறிந் துரைக்க வேண்டும் பொற்புறு மாயுர் தாயம்.

### புத்திரசங்கைகளாவன,—

விருத்தம்.

புத்திரத் தானத்ததி பொருந்துமங் கிசையைத் தொட்டு
மெய்த்துலக் கின்மட் டெண்ணி மேவியே கண்டலக்கம்
எத்தனை யோதானந்தத் தொகைப்படி யினிய மைந்தர்
சித்தமாய்ப் பெறுவரென்று தெரிந்தவ ருரைசெய்வாரே.

இதுவுமது.

வேறு.

வார்சடைமுடி மேலுறு மாமதி மேவும னைக்குமே
ஏர்பெறு சன்ம மனைக்குமே யெண்ணியொ ரைந்து தலத்தையும்
பாரினி னுத்:ம ரானவர் பாவை யுறிற்சில பாலராம்
காரி முதற்கொடும் பாவரே காணி லிலைச்சிறு பாலனே.

இதுவுமது.

பாலர் பிறந்திடு மைந்திலே பாரொரு கேது பறிந்துறில்
பாலர் பிறந்திடு மைந்திலே பாழ்கரு நாகம மர்ந்துறில்
சீவசன் மாதியைந் தாமிடஞ்சேர வைந்தாதி திடம்பெற
வாலிபந் தன்னினின் மைந்தரும் வந்துபி றந்து வளருவர்.

இதுவுமது.

வேறு.

காணும்லக் கினத்திற் செய்வாய் தனக்கேழிற் காரி பின்னும்
கோணுமுந் நான்கில் வெய்யோ னிப்படிக் குலவிநின்றால்
ஆணுடன் பெண்ணு மில்லை யஞ்சாதி பவனு யேழில்
பூணேழோன் பாவ னுயைந் துற்றிடிற் புதல்வ ரில்லை.

இதுவுமது.

புத்திரத் தானத் தாதி யேகனுய் புதன்வீ டேறில்
புத்திர ரில்லை நல்லோர் கூடிடிற் பிறந்துசாவர்
ஒத்திடு பாபர் சேரின் மகவில்லை யெருது கும்பம்
வித்தக வோரை யார்க்கு மகவில்லை விளம்புங் காலே.

இதுவுமது

விளம்புமே ழாமி டத்தோன் வுச்சமே நீசமின்றிக்
களங்கமில் லாதி ருக்கிற் கருதுமூத் தாளுக்கில்லை
இளங்கொடி யாளுக் குண்டா மேழுளோ ருச்சநீசம்
வளம்பெறு மங்கிசத்தின் மருவிடின் மகவுண்டாமே.

இதுவுமது.

வேறு.

நல்லவர்பா ராதிருக்க வைந்தாம வீட்டில்
நாடுமைந்தா மதிபனுட னண்ணி யேனும்
வல்லகரும் பாம்பிருக்க நாகசாப
வகையினுன் மைந்தரில்லை மறித்துநாகம்
ஒல்லையுடன் பிரதிட்டை செய்யின் மைந்தர்
உண்டாகு முயருங்கேந் திரிகோ ணத்துள்
வல்லல்சுபக் கிரகத்தின் பார்வை யுற்றால்
மைந்தரில்லை செபவோம வகையி னுண்டாம்

இதுவுமது.

உண்டாமைந் தாம்வீட்டோ ரு ரு மாதி
உடன்கூடி நல்லோர்கண் ணுறும நிற்க
அண்டாத சத்துருசா பத்தினாலே
யானதொரு மகவில்லை யைந்தாம் வீட்டில்
மிண்டாக வைந்தாதி யிருக்க நல்லோர்
விழிபார்வை யறத்தீயோர் மிகவு நோக்கிக்
கண்டாக ளெனிற்றெய்வ சாபத்தாலே
காளையர்க ளில்லையோம கன்மஞ் செய்வாய்.

இதுவுமது.

செய்யதொரு நாலிடத்திற் றீயோர் நிற்கச்
சேருமைந்தா மதிபனுடன் சனியுங்கூடப்
பையவே பன்னிரண்டா மீடத்திற் பாவர்
பற்றிநிற்கத் தாய்சாபம் பாலரில்லை
ஐயமற வோமங்கள் செபங்க டான
மன்புடனே செய்விக்கு மவர்த னர்குத்
துய்யதிரு மைந்தர்பல ருண்டா மென்று
சுருதிகலை யாகமங்கள் சொல்லுந் தானே.

இதுவுமது.

வேறு.

புத்திர னேழா மாதி பொருந்துகேந் திரகோ ணத்தில்
உற்றிடில் பலவா னுகி யோங்குமா றதிபன் றனுஞ்
சித்தமாய்க் கூடி னும் தெரிசினைப் பார்வையாலும்
சுத்தமாய்ப் புதல்வ ரில்லை யெனமறை சொல்லுந் தானே.

இதுவுமது.

வேறு.

ஆரா றைந்திற் சுபரி நக்க வதனுக் குடையோன் கூடாமற்
பாரா திருக்கிற் றத்து மைந்தன் பகருந் தத்தே திரமாகுங்
கூரா ருஞ்சுக் கிரன் வெள்ளி குருவின் வர்க்க மடைந்துசனி
சேராங் கிசந்தா னுறிற் காலாந் திரச்சே யலது தத்துமைந்தன்.

இதுவுமது.

வேறு.

இலக்கைந் தேழிலொன்பதிற் பாவ ரிருந்திடச் சுபர்களேக் காரேல்
வரமிக வீன்றோன் ஜெனனகா லத்தின் மறுதேசந் தனிற்சிறை யிருப்பன்
றிரம்பெரும் நாலிற் சனிநிற்ப பாவர் சேர்ந்திடச் சுபர்களேக் கின்றித்
தரம்பெறின் மைந்தன் ஜனன காலத்திற் றந்தையே சிறையினி லிருப்பன்.

இதுவுமது.

வேறு.

தண்டுவில் லுதய மாகத் தபனனம் புலி வியாழம்
மண்டுமுக் குமார சிக்த ளமர்ந்திடி லாணி ரட்டை
கண்டிபன் மிதுனந் தோன்றக் காரிபொன் னுதய மேவத்
தண்டமர் பார்வ தாங்சந் தான்செயி லாணி ரட்டை.

இதுவுமது

சந்தமா மிதுனங் கன்னி தனுவுமீ னுதயமாக
விந்தநல் லோரைக் காணி லிந்துதன் கதிரோன் செவ்வாய்
புந்தியு மொன்றாய் கூடிப் பொற்புற நிற்பாராயின்
முந்துமாண் பெண்ணி ரட்டை முசிப்பின்றி பிறக்கு மாதே.

இதுவுமது.

கன்னியிற் புதனி ருக்கக் கருதுலக் கினமீ னாக
வுன்னிய மற்று ளோர்க ளுபயரா சியிலி ருக்கிற்
பின்னிய மூன்றாண் பிள்ளை பிறக்குமென் றுரைத்தார் மேலோர்
மன்னிய கமலப் போதின் வளரிள மயிலினாளே.

இதுவுமது.

மீனமே யுதய மாக மீனத்திற் கன்னி தன்னில்
வானமர் புதனே நிற்கின் மற்றுள கிரகமெல்லா
மானவுக் குமாரா சிக்கு ளடவுட னிருப்பா ராகிற்
றானமா மூன்று பெண்ணே தரணியிற் பிறக்கு மன்றே.

இதுவுமது.

உபயமே யுதய மாகி யொளிர்மதி புகரோன் நிற்கச்
சபையதா முனிகும் பத்தைச் சார்ந்துள புதனுங் கேது
நபையமா விரைந்து பார்க்கி னொன்று பெண்ணி ரண்டு
மிபைய ராலணிப்பொ ருட்டா லிவையன்றி யார்க்கு மென்பார்.

இதுவுமது.

ஏழினிற் சனியி ருந்தே யிலக்கினங் கிசத்திலேற
வாழிய தேவ மந்திரி மகிழ்வுடன் பாரா னாகி
னீழல்கொள் வருட மூன்து நிறைகற்ப மாயி ருக்கும்
ஆழியை நிகர்த்த கண்ணா யறிஞர்கண் டுரைத்தவாறே,

இதுவுமது

கனிவுறு கற்பந்தன்னிற் காரியு மதியுங் கூடி
யினியிலக் கினத்தி லஞ்ச மேறியே யிருப்பாராகிற்
பனிரெண்டு வருட கெற்பம் படைத்திடு மென்று சொன்னார்
குனிசிலை புருவக் காமக் கூர்கணை விழியினாளே.

இதுவுமது.

கடகமைந் தாகிற் பானு கடந்திட வெகுபுத் திரளர்
முடிபுனைச் செல்வர் நிற்கின் முந்தின தாரத் திறகே
யிடறுதீர்ப் பிள்ளை யில்லை யிரண்டாந்தா ரந்த னக்கே
திடமுறு பிள்ளை யுண்டாஞ் சேயரிக் கண்ணி னாளே.

சர்ப்பபயங்களாவன:—

இவனிலக் கினத்தின் மூன்றே னிராகுவி னுடனே கூடி
லவனியி லந்த ராசிக் கதிபனுங் கூடிக்கூடிப்
புவனிலக் கினத்தோ னின்றுற் பூவையே கேட்குங் காலை
தவநெறி யில்லாச் சர்ப்ப பயமெனச் சாற்ற லாமே.

முடமயிருடையவாக ளாவன;—

சாற்றிய மூன்றின் கோட்போய்ச் சாந்திட்ப் பாபர் தியோர்
தோற்றிய ராகு வோடே தோய்ந்திடப் பாபர் நோக்கில்
வேற்றுமை யில்லை சொன்னோம் வியகண்டந் தன்னிற் றானே
முத்தபா பிகளே யாசின் முடமயி ருண்டா மென்பார்.

இதுவுமது

முடங்கிய மூன்றிற்பாவர் மொய்த்திடக் குளிகன் கூடிற்
றடங்கணு யிவர்க்குக் கண்டந் தனின்முட மயிருண்டாகுந்
திடம்படச் சனியுஞ் சேயுஞ் செப்பிய மூன்றிச் சேரிற்
றுடங்கியே கண்டரோகஞ் சொல்லலா மிவர்க்குத் தோகாய்

விலங்கினுல்மரணங்களாவன:—

விருத்தம்.

தோகையே மூன்றின் கோட்போய் சூரர்குரு வுடனே கூடப்
பாகைலக் கினத்தோ னின்றுற் பசுக்களாற் பயமுண் டெங்க
வேகியே மூன்றின் கோட்போ யிராகுவி னுடனே கூடி
லலகையால் விடத்தி னுலே யவமிருத் தென்ன லாமே.

மிருகம்போலக் குழந்தைசெனித்தலாவன;—

விருத்தம்.

குழந்தையி னுன்கோ னேராய் குறிலக்கி னத்தோ னுன்காய்
வளர்ந்ததைக் கிரகம் பார்க்க மன்னிய கிரகஞ் சாரத்
தளங்களாய் நாற்கால் சீவன் றன்னைப்போற் பிள்ளை யுண்டாம்
பிளந்தவாய் ராகு கூடிற் பிறப்பதா மெனன்று பேசே.

இதுவுமது.

பிறந்தவர் வாக்கோ னேழான் பெருகிய வைந்தோ னுன்கோன்
சிறந்தநால் வருமொன் றுகத் தீயவர் சேரநோக்க
நிறந்தரு கமலக் கண்ணுய் நிலவர மிவர்க்குப் பிள்ளை
யுறங்கிய குரங்கு போலே யுண்டென வுரைப்பர் மாதே.

தத்துபுத்திரன்களாவன:—

விருத்தம்

கேடிலா வைந்தில் ராகு கிளரவைந் துடையோ னுறெட்
டோடுபென் னிரண்டி லேற வொருபிள்ளை யேனுமில்லை
நாடிய வைந்திற் சென்ம ராசிக்கோ ணிற்க வைந்திற்
றேடிலக் கினத்தோ னின்றுற் றத்துபுத் திருண் டாமே.

இதுவுமது-

தெத்துலக் கினத்தின் கோனுஞ் சிறந்தவொன் பானின் கோனும்
பற்றிலா யெட்டி ராறிற் பதிந்திடப் பாபர் பார்க்க
வெற்றியங் கோண கேந்திர மேவிய வரவமாகிற்
புத்திரர் தெத்தா மைந்தோன் போய்நின்ற பலனுற் சொல்லே.

இதுவுமது

கிட்டிய வைந்தோன் பானிற் கேடிலாச் சுபக்கோ ணிற்கத்
தெட்டிய வாறுேன் பார்க்கத் திரியப சாரியாடித்
தொட்டிலிற் பிள்ளை தூங்கித் தூரத்தே குரலொ லிக்கத்
தட்டிபோ ராட்டு மென்பார் தக்கசாத் திரங்கற்றேரே.

இதுவுமது

விளங்கிய பத்தி லேதான் வெண்மதி யருக்கன் வெள்ளி
யழுங்கிய பாப ரோடே யமைந்துநா லிடத்தி லாகப்
புழுங்கிய நோய்க ளாலும் பூருவ பயன்க ளாலும்
எழும்பிய குழவியெல்லா மிவனுக்கு நாச மாமே.

இதுவுமது

அன்பது வயதாள் வற்ற லானவள் ரோகக்காரி
யின்புறு விலக்கமில்லா யிடையினி லேநோ யானுண்
முன்பினுய் பருத்த காய முன்னமே மலடி யானு
ளென்பது வயது பத்தா ளெட்டுக்குங் குழவி யில்லாள்

இதுவுமது

குருவொடு லக்ன நாதன் குணமுட னேழிற் கோடான்
றருபல னைந்தி நாதன் சார்ந்திடு மோரை தன்னின்
மருவிடப் பிலமே யீன மாகவே வந்தோ னுக்குத்
திருவுள மறிய நாமே செப்பினேம் புத்திரரில்லை

சந்நியாசிகளாவன:—

விருத்தம்.

சூரியன் சனிசெவ் வாயுந் தொடர்ந்துபோ யிரண்டிற் கோடான்
காரிய னைந்தி னு ன் றன்னொடுங் கலந்து நின்றால்
வீரியந் தன்னை நீக்கி வெறுத்துசன் னியாசியாவன்
சீரிய ஸ்திரீகள் கைம்பெண் டன்னையுந் தீண்டா னென்னே.

இதுவுமது

ஆதித்தன் சுபர்க ளங்க மாயுச்ச வர்க்கமல்லாற்
பேதித்த கிரக மெல்லாம் பிள்ளையுங் கதிரைப் பார்த்தாற்
ச தித்தான் வாலி பத்திற் சந்நியாசி யாகச் சார்ந்து
போதித்த ஞானயோகம் பொருந்துபுண் ணியவா னுமே.

சந்நியாசித்தனவான்களாவன:—

விருத்தம்.

சுக்கிரன் சந்திர லக்ந நாதனைத் துடர்ந்து பார்த்தால்
மிக்கசந் நியாசி யாகித் திரவியம் விரும்பான் சற்று
மிக்கவ ருச்சமாக விருந்திட மதியாற் பார்க்கத்
தக்கசந் நியாசியாவ னன்றியுந் தனவானுமே.

இதுவுமது

குருசனி செவ்வா யின்னோர் கூடுமோ ராசிதன்னைப்
பரிவுட னிவர்கள் பார்க்க வல்லது பதிந்து கூட
வருநவ மதிலே பொன்னன் வந்திட ராசனல்லாற்
பெரியசன் னியாசி யாவ னென்றுநாம் பேசலாமே,

இதுவுமது

மதிநவ மதிலே வாழ மறந்திடக் கிரகப்பார்வை
யதிசய ராஜ யோக மாகியே கோட்கள் வாழ்ந்தால்
விதியொடு கன்பஞ்செய்து மிகுந்த தீட்சதனுமென்ன
விதுவலால் ராச னுவ னென்பதை யியம்பலாமே.

இதுவுமது

சந்திரன் வியாழ மிலக்னந் தனையே சனிதான்பார்க்கச்
சொந்தமா யொன்பான் பத்திற் றேள்றிடுங் குருவேயானல்
விந்தையாய் ராசயோகம் விளங்கிட ராசனல்லால்
வந்தசன் னியாசி யாகி மனைதொறும் பிச்சையேற்பான்.

இதுவுமது

கன்மத்தா னீசனஸ்த மனங் களாய்க் கண்டு நிற்க
வன்மத்தாற் பத்திற் செவ்வா யாவது மந்தன் வாழச்
சென்யசா தகனுய் வந்தோன் செகத்திற்சந் நியாசி யாகி
யின்பத்தாற் சுரபா னங்க ளியல்புடன் செவ்வா னென்றே.

ஊமைகளாவன;—

விருத்தம்.

மூன்றுளோ ரிரண்டி னுள்ளோர் நீசமாய்ப் பகைமூ டத்தி
லான்றவ ரெட்டி ராறி லடையினு மதிபன் றன்னை
யேன்றதா னங்க டன்னை யியல்புடன் றீக்கோ ணேக்கற்
தோன்றுமுன் செவிட னுவன் சொற்சொலா வூமை யாவான்.

சலத்தால்மரணங்களாவன,—

விருத்தம்.

கதிர்மதி கன்னிமேவக் கடியகோள் காணிற் சேரி
லதிகமாம் விடத்தா லன்றே லலகையான் மயக்கிற் சாவா
னுதயலக் கினமீ னுக வதிற்சசி வெய்யோன் றேன் றக்
கொடுகொளுங் கோட்கள் கூடில் குளிர்கய நீறிற்சாவான்.

உதிரத்தால் மரணங்களாவன.—

விருத்தம்.

கன்னியின் மதிவெய் யோனைக் கடுங்கோட்கண் முன்னும் பின்னுந்
துன்னியே நெருக்கில் வாயாற் சொரிதான் சோந்துசாவான்
மன்னிய சனியின் வீட்டின் மதிநிற்ப மதிக்கும் பின்னு
முன்னுந்தீக் கோட்க ணிற்பின் முடிப்பின்றி பாசத் தாலும்,

வாகனத்தால்மரணங்களாவன:—

விருத்தம்.

சந்திர னேடு மந்தன் சசிநின்ற திரி கோணத்தும்
வெந்துயர் கோட்க ளெல்லா மேவிடிற் பிளக்க மாய்வான்
பந்துடன் கதிரோன் பத்திற் பார்மக னலில் நிற்பச்
சந்தவார் முலையால் சாவன் வாகன நிமித்தந் தன்னல்

சர்பத்தால் மரணங்களாவன,—

விருத்தம்

நாலினில் வெய்யோ னிற்ப நளிர்மதி நோக்கி னாலு
நீலனார் நோக்கிச் செவ்வாய் பத்தினி னிற்கு மேனுஞ்
சாலுநா லெட்டில் வெய்யோன சனிநிரை யாய்ச் சார்ந் தாலு
மால்சனி யுதிப்பச் சேய்பத் தரவெனுங் கடியிற் சாவான்.

இடியினால் மரணங்களாவன,—

விருத்தம்

இரவிசே யேழிற் கூட வெட்டினிற் காரி யெய்திற்
கரைமதி நாலின மேவிற் பாவையாற் கழிவனவானான்
பரவுமொன் றைந்தோன் பானி லிரவிசேய் மதியம் பெற்ற
விரவுமோ ரெட்டிற் காரி மேவினு மிடியில் வீழ்வான்.

உபாசானாமூர்த்தி முதலியன,—

விருத்தம்

கருமத்தோன் றன்சே யாகிற் கருதவோன் குமர வேளை
யுருகித்தா னிற்பன் காரி யேலுருத் திரனை யுன்னி
வருமத்தா னத்தின் வெய்யோன் மருவின்மாந் திரிகனாவன்
வெருவத்தான் குளிகன் கூடின் மேவுமா சாரவீனன்.

யாத்திரைகளாவன;—

விருத்தம்

பொன்னவன் புகர்வா லன்னோர் பொருந்திடிற் பிரியும் வேள்வி
சொன்னவை நிற்கநாலின் கோள்பத்திற் றோன்ற வன்றே
நன்னய மொடுபத் தின்கோ னாலினி னண்ண வக்கோள்
கன்னிமே கணீக்ர்கோ ளாகிற் கங்கையே முதுநீ ராடும்.

யோகிகளாவன;—

விருத்தம்

பத்தின்கோ னாலின் கோளு நீர்க்கோளாய்ப் பழுதின் றாகிச்
சுத்தகேந் திரத்தின் மேவிற் றோய்ந்திடுந் தீர்த்தந் தோறு
நித்தமாம்பத்தின் கோளு நிகழுமைந் துடைய கோளு
மொத்துயர் வலியர் கூடில் யோகத்தி லுறைவ னன்றே.

புதனோட்டங்களாவன,—

கும்பம் மீனம், மேடம்; ரிஷபம், இந்த ௪ ராசியிலும் ரவியுடன் கூடி நடப்பன் மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, இந்த ௪ ராசியிலும், புதன் ரவிக்கு முன்னடப்பன் துலாம். விருச்சிகம், தனுசு, மகரம்; இந்த ௪, ராசியிலும் புதன் ரவிக்குப்பின் ன்டப்பன்;

சோதிடபாலசிட்சை

முற்றிற்று.

3941

# புத்தக விளம்பரம்.

| | | |
|---|---|---|
| விநாயகபுராண வசனம் கிளேஸ் காலிகோ பைண்டு | 4 | 0 |
| தனிப்பாடற்றிரட்டு பாட்டு உரை | 2 | 8 |
| கந்தபுராண வசனம் | 4 | 0 |
| கம்ப இராமாயண வசனம் | 4 | 0 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதபாகம் | 1 | 8 |
| பாலகாண்டம்பாட்டு உரை | 3 | 8 |
| தாயுமானசுவாமி பாட்டு உரை | 3 | 4 |
| பட்டினத்தார் பாடல் உரை | 1 | 8 |
| மஸ்தான்சாகிபு பாடல் | 1 | 0 |
| பதினெண்சித்தர் ஞானக் கோர்வை | 1 | 0 |
| மகாபாரதவசனம்4-வால்யம் | 8 | 0 |
| விராடபருவம் | 1 | 0 |
| ஆதிபர்வம் | 1 | 8 |
| ஸ்ரீ மகாபாகவத வசனம் | 4 | 0 |
| ஸ்ரீ மகாபக்தவிஜயம் 6 தாசர் | 1 | 8 |
| மேற்படி இரண்டாம் பாகம் | 3 | 0 |
| திருவிளையாடற்புராணவசனம | 1 | 8 |
| பெரிய புராணவசனம் | 1 | 8 |
| அறப்பளீசுரசதகம் உரை | 1 | 0 |
| குமரேச சதகம் உரை | 1 | 0 |
| மானங்காக்கும் ஞானதீபம் | 0 | 4 |
| 200-சில்லரைக்கட்டம் | 1 | 8 |
| ஸ்ரீ வேணுகோபால நாமசங்கீர்த்தனம் | 0 | 6 |
| பாண்டியதாஸ் பக்திரச கீர்த்தனை | 0 | 5 |
| ஸ்ரீ பலதண்டாயுதபாணி பக்திரச கீர்த்தனை | 0 | 4 |
| மலையாளமாந்ரீக ரத்னாகரம் இரண்டாங் காண்டம் | 1 | 0 |
| பாக்கெட் மலையாளமாந்திரீக ஆசான் | 1 | 0 |
| சிற்றின்பஞான சிந்தாமணி | 1 | 0 |
| தலைவாங்கி தனுக்குசுந்தரி | 1 | 0 |

(கதை புத்தகங்கள்.)

| | | |
|---|---|---|
| பெரிய விக்கிரமாதித்தன் கதை | 1 | 0 |
| பாரிஸ்கதைகலிகோபைண்டு | 3 | 8 |
| 32-பதுமைகதை | 0 | 0 |
| சார்தர்வேஸ் கதை | 0 | 12 |
| குலே பகாவலி கதை | 0 | 8 |
| கமலநாதன் | 1 | 8 |
| நாகபூஷணம் தமிழ் நாவல் | 0 | 12 |

(வைத்திய புத்தகங்கள்)

| | | |
|---|---|---|
| ஊர்வசி வைத்ய சிட்கா | 0 | 12 |
| ஷை இரண்டாம்பாகம் | 0 | 12 |
| சுப்ரமண்யர் ஞானம்-500 | 0 | 12 |
| வைத்திய சாரசங்கிரகம் | 1 | 0 |

(சோதிட புத்தகங்கள்)

| | | |
|---|---|---|
| வீமகவி பாட்டு உரை | 1 | 0 |
| சுகர்நாடி சோதிடம் | 1 | 4 |
| விநாடி பஞ்சபட்சி | 1 | 0 |
| சோதிட பாலபாடம் | 0 | 12 |

(டிராமா புத்தகங்கள்)

| | | |
|---|---|---|
| கோவிலன் சரித்திரம் | 0 | 4 |
| சாவித்திரி சரித்திரம் | 0 | 4 |
| நல்லதங்காள் சரித்திரம் | 0 | 4 |
| பவலக்கொடி சரித்திரம் | 0 | 3 |
| அல்லி சரித்திரம் | 0 | 4 |
| சதாரம் சரித்திரம | 0 | 3 |
| கண்டிராஜன் சரித்திரம் | 0 | 4 |
| லங்காதகனம் | 0 | 4 |
| வள்ளியம்மை சரித்திரம் | 0 | 4 |
| இராமாயணத் திருப்புகழ் | 0 | 3 |
| இராமதாஸ் சரித்திரம் | 0 | 3 |
| மயிலிராவணன் சரித்திரம் | 0 | 3 |
| இந்துஸ்தான் பஜனைகீர்த்தனை | 0 | 4 |
| லலிதாங்கி சரித்திரம் | 0 | 3 |
| குலேபகாவலி சரித்திரம் | 0 | 4 |
| ஞானசவுந்தரி சரித்திரம் | 0 | 4 |
| பாஸ்கரதாஸ் சதாரம் | 0 | 5 |
| சகுந்தலா சரித்திரம் | 0 | 4 |

**M. A.** சுப்பிரமணிய முதலியார்,
மனோன்மணி விலாசம் பிரஸ்,
217, தங்கசாலை வீதி, சென்னை.